# சமாதானத்திற்கான பாதையில்

## முரண்பாட்டினைப் பற்றியும் இனப் பல்வகைமைப் பற்றியும் அறிக்கையிடல்



இலங்கையின்
சிறந்த பத்திரிகை நடைமுறைக்கான
பகுப்பாய்வும் வழிகாட்டலும்

United States Institute of Peace

**சமாதானத்திற்கான பாதையில்**
**முரண்பாட்டினைப் பற்றியும் இனப் பல்வகைமையைப் பற்றியும் அறிக்கையிடல்**

ISBN : 955--8037-88-5

| | |
|---|---|
| **ஆசிரியர்கள்** | சுனந்த தேசப்பிரிய மற்றும் ஜாக்குலின் பார்க் |
| **நன்றிகள்** | அன்ஜா குவெப்பர்ல் கதரின் மெக்மஹொன், ஜோர்ஜியா ரைட், சஞ்ஜன ஹத்தொட்டுவ, மற்றும் பி.சரவணமுத்து |
| **வடிவமைப்பு** | லூயிஸ் சமோர்டன், கேட்ப்ளை மீடியா |
| **புகைப்படங்கள்** | புத்திக வீரசிங்க |
| **கேலிச் சித்திரங்கள்** | ஜூடி ஹொரசெக் மற்றும் பீட்டர் நிகல்சன் |

இந்த ஆவணமானது சமாதானத்திற்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இதிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளவை IFJ யின் கருத்துக்களேயன்றி எவ்விதத்திலும் USIP யின் உத்தியோகபூர்வமான அபிப்பிராயங்களைப் பிரதிபலிப்பவையல்ல.

இவ்வெளியீட்டின் எப் பகுதியும் வெளியீட்டாளரின் எழுத்துமூலமான அனுமதியின்றி எவ்வடிவத்திலும் மீள் உருவாக்கப்படலாகாது. இந் நூலின் உள்ளடக்கங்கள் பதிப்புரிமை பெற்றவையாகும். அவற்றினைப் பயன்படுத்துவதற்கான உரிமைகள் ஆசிரியர்களிடமே உள்ளன.

# உள்ளடக்கம்








அறிமுகம் 3

முரண்பாடும் இனத்துவமும் - விடயங்கள் 5
பிளவுபட்டுள்ள நலன்கள்
பத்திரிகைத் துறையின் பாத்திரம்
உண்மை, சமாதானம் மற்றும் நியாயமான தன்மை

ஆய்வறிக்கை : பெரும் பிளவு - பத்திரிகையாளர்கள் என்ன நினைக்கின்றார்கள் மேலும் அவர்கள் எவ்வாறு அறிக்கையிடுகின்றார்கள்? 7
சம்பவக் கற்கைகளை அறிக்கையிடல் : இனத்துவத்தை வலியுறுத்தல்
இலங்கையில் ஸ்திரமின்மை : முரண்பாட்டிற்கான பின்புலம்

இணைக்கும் கட்டுக்கள் - எமது இனத்துவச் சட்டகம் 11
பத்திரிகையாளர்களின் நடத்தை பற்றிய கோட்பாடுகளின் IFJ பிரகடனம்

வழுவின்மை, வதந்திகள் மற்றும் உண்மை சொல்லிகள் 12

கண்களிற்கு தெரிவதற்கு மேலதிகமாக சில விடயங்கள் 13

இனப் பிளவு 14
இனத்துவம் பகைமை என்று அர்த்தப்படாது

அனைத்துத் துறைகளையும் உள்ளடக்குதல் 15
ஊடகக் கண்காணிப்பு : "உத்தியோகபூர்வ" சுனாமிச் செய்தி

பல குரல்கள் கதையினை உருவாக்குகின்றன 17
பால்நிலை : முரண்பாட்டிலுள்ள விடயம்
செய்தி அறையில் பல்வகைத் தன்மை
செய்தியின் மொழி
சிறுவர்களின் குரல்களைக் கேட்டல்
ஏனைய குழுக்களிலுள்ளவர்களை நேர்காணுவது பற்றிய
சிறு ஆலோசனைக் குறிப்புக்கள்

மூலத்திலிருந்து பெறுதல் 20
பக்கச்சார்பினைக் கையாளுதல்
பத்திரிகைச் சுதந்திரம்

முரண்பாட்டு அறிக்கையிடலுக்கான IFJ வழிகாட்டுதல்கள் 21
பத்திரிகைத்துறையின் பாதுகாப்பான நடத்தைக்கான IFJ
சர்வதேச நடைமுறைக் கோவை 22
பயன்மிகு வளங்கள் மற்றும் நூற் பெயர்க் கோவை 23

# அறிமுகம்

வெறுப்பின் சரிவுகளில் நாம் களிப்புடன் விரைகையிலே
கவனிக்காத ஒரு கல்லைப் போல எம் கால் இடறச்
செய்கின்றாய்.
மதி மயக்கம் எம்மைச் சுவர்களுக்குள் மூடுகையில்
நீயோ எம்மைத் தொலைபேசி போல் தொந்தரவு
செய்கின்றாய்.

*- டபிள்யூ. எச். ஒளடன் -*

யுத்த நிறுத்தம் இன்னும் நிலவுகின்ற அதேவேளை நீண்டகாலச் சமாதானம் என்பது இலங்கையை விட்டும் தொடர்ந்தும் தப்பித்துக் கொண்டே இருக்கின்றது. 2004ன் பிற்பகுதிகளிலே நாடானது மீண்டும் யுத்தத்தினை நோக்கி நகர்கையிலேதான் சுனாமி தாக்கியது. சுனாமியின் பேரழிவும் அதன் பயங்கரமும் பத்திரிகையாளர்களுக்கு புதிய சவால்களை ஏற்படுத்திக் கொடுத்தது. சுனாமியின் பல்வேறு அழிவுகளை எடுத்துக் கூறுவதும், பாரிய மீள் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்தமையால் அதிகாரிகளைப் பொறுப்புக் கூற வைப்பதும் அவர்களின் பணியாக மாறியது.

சமூகங்கள் அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கும் போது, அச் சமூகங்களைப் பாதிக்கின்ற தீர்மானங்களில் பங்குபற்றுவதும் அத் தீர்மானங்களை புரிந்து கொள்ள வைக்கும் உண்மைகளையும், தகவல்களையும் சமூகம் பெற்றுக் கொள்வது என்பதுவும் மிகவும் கடினமானது என்பதை அனுபவம் எமக்குக் கற்றுத் தந்திருக்கின்றது.

ஒரு பல் இனச் சமூகத்தில் நாளாந்த விடயங்களை அறிக்கையிடுவதானது எவ்வாறு பதற்றங்களை அதிகரிக்கின்றது அல்லது குறைக்கின்றது என்பதைப் பத்திரிகையாளர்கள் நேரடியாகப் பார்த்திருக்கின்றார்கள். வன்முறை மிகு முரண்பாடும் அரசியல் கிளர்ச்சிகளும் அமைதியைச் சீர்குலைப்பதுடன் புரிதலுக்கான தடைகளையும் ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும் எத்தரப்பிற்கும் ஆதரவு வழங்குவதற்கு முன்னிற்பது பத்திரிகையாளர்களின் கடமையல்ல.

எமது அறிக்கையிடல் மூலமாக, விடயங்களை வெளிப்படுத்துதல் மூலமாக மக்கள் ஒருவர் மற்றவரின் கலாசார, சமய, இனத்துவ மற்றும் ஏனைய பேதங்களைப் புரிந்து கொள்ள உதவுவது எமது கடமையாகும். பிளவுகள் பற்றிய விடயங்களை பத்திரிகையில் வெளியிடாமல் மறைத்து வைப்பது என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் அவற்றின் சிக்கற்தன்மையைப் புரிந்து கொண்டு அவற்றை அறிக்கையிடுவது என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆழமான, முழுமையான விடயங்களைப் பெற்றுக் கொள்ள, மேலோட்டமாகத் தெரிகின்ற உண்மைகளுக்கு அப்பால் நோக்குவது என்பதே இதன் அர்த்தப்பாடாகும். சகிப்புத் தன்மையினைக் கட்டியெழுப்புவதற்காக புதிய மூலங்களையும், புதிய கருத்துக்களையும், புதிய வாய்ப்புக்களையும் தேடுவது என்பதே இதன் அர்த்தப்பாடாகும்.

முரண்பாடு பற்றிய, அது சாதாரண மக்கள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கம் பற்றிய புரிதலை வழங்குவது மூலமாகவும், சாத்தியமான தீர்வுகளை ஆராய்வதன் மூலமாகவும் பதற்றங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சிறந்த வாய்ப்புக்கள் இருக்கின்றன.

நடைமுறையிலே இதனால் கருதப்படுவது என்ன?

## தொழில் நிபுணத்துவம்

நாம் செய்யக்கூடிய முதன்மையானதும் மிக முக்கியமானதுமான விடயம் தான், எமது தொழிலை நிபுணத்துவத்துடனும், வழுவின்றியும், நெறியுடனும் நிறைவேற்றுவதாகும். நாம் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## பொறுப்பு

இரண்டாவதாக, எமது உரிமைகள் மற்றும் பொறுப்புக்களிலே தங்கியவர்களாக எமது கடமைகளைச் சுதந்திரமாக நிறைவேற்றுவதானது முரண்பாட்டுக் காலத்திலே ஒரு நியாயமான சமூகத்தைப் பேணுவதற்கு இன்றியமையாதது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். சேவை செய்கின்ற சமூகங்களின் சார்பாகவே இந்த உரிமைகளை நாம் பயன்படுத்துகின்றோம் என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நியாயமாகவும், வழுவின்றியும், நேர்மையாகவும் அறிக்கையிடுவதற்கான பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

## கூட்டொருமை

மூன்றாவதாக, பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் கூட்டொருமையையும் ஆதரவினையும் உருவாக்குவதாகும்.

கூட்டொருமை என்பது நாம் அனைவரும் அரசியல் ரீதியாக இணங்க வேண்டும் என்பதையோ அல்லது பல்வேறு நாடுகளிலுள்ள அல்லது




1983 இல் ஆரம்பமான யுத்தத்தினால் அனைத்து இனக்குழுக்களுக்குமிடையிலும் உள்விவகார சிக்கல்கள் ஏற்பட்டன.

பல்வேறு குழுக்களிலுள்ள பத்திரிகையாளர்கள் அல்லது பல்வேறு பத்திரிகைகளில் பணியாற்றுபவர்கள் அல்லது எதிர் ஊடகத்தைச் சேர்ந்தவர்கள் போட்டி மிக்கவர்களாக இருக்கக் கூடாது என்பதையோ அர்த்தப்படுத்தாது. கூட்டொருமை என்பது எமது தொழிலின் முக்கியத்துவம் பற்றிய பகிரப்பட்ட புரிதலையும், நல்லெண்ணத்திற்கான அர்ப்பணிப்பையும், எதிரிகள் ஆகாமலேயே விடயங்களில் கருத்தொருமிக்காமல் இருக்கலாம் என்பதை அறிந்து கொள்வதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பேச்சுச் சுதந்திரம் என்பது கருத்து வேறுபாடு கொள்வதற்கான உரிமையையே குறிக்கின்றது.

பத்திரிகையாளர்கள் ஒருவர் மற்றவருக்கு அவரின் தொழிலைப் பாதுகாப்பாகச் செய்வதற்கு ஆதரவு வழங்க வேண்டியுள்ளதுடன், நெறிசார் நடத்தைக் கோவையினை வலிதாக்கிப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும் இணங்க வேண்டும். நடத்தைக் கோவையினைப் பின்பற்றியும் பத்திரிகைத் துறையின் கோட்பாட்டினைப் பற்றி ஒழுகியும் நடக்கின்ற தொழில்சார் பத்திரிகையாளர்கள் உட்கட்சிப் போராட்டங்களின் போது கூட சண்டை போடாதவர்களாக இருக்க வேண்டும்.

## IFJ அனுபவம்

முரண்பாட்டு நேரங்களிலே தமது பாத்திரம் மற்றும் பொறுப்புக்களைப் பற்றிப் பத்திரிகையாளர்கள் அவர்களின் தேசிய சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச ரீதியாக IFJ போன்றவற்றினூடாக ஆராய்கின்ற, வாதிக்கின்ற ஓர் உறுதியான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளனர். இலங்கையில் பத்திரிகையாளர்கள் சமாதானத்திலும், முரண்பாட்டிலும் பத்திரிகைத்துறையின் சவால்களை எதிர்நோக்குகின்ற காரணத்தினாலே, IFJ கடந்த ஐந்து வருடகாலமாக இலங்கைப் பத்திரிகையாளர்களுடன் பணியாற்றி வருகின்றது.

பத்திரிகையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மத்தியில் தீவிர ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்தினை நடத்துதல் செய்தி அறிக்கையிடலைக் கண்காணித்தல், முரண்பாட்டுக் கூருணர்வு மிக்க பத்திரிகையாளர் வலையமைப்பினை உருவாக்குதல், மற்றும் பத்திரிகைத் துறைப் பயிற்சியாளர் வலையமைப்பினை உருவாக்குதல் போன்ற விடயங்களினை இது கடந்த 18 மாதங்களாக நடத்தி வருகின்றது. இது பயிற்சி வளங்களை விருத்தி செய்வதுடன் நாடு முழுவதிலும் பத்திரிகையாளர்களுடனும் ஆசிரியர்களுடனும் வட்டமேசை மகாநாடுகளையும், கூட்டங்களையும், பயிற்சிக் கருத்தரங்குகளையும் நிகழ்த்தியிருக்கின்றது. இந்த அறிக்கையிலே கலந்துரையாடல்கள், விவாதங்கள் மேலும் 300ற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களின் அனுபவங்கள் போன்றவை இடம் பெற்றிருக்கின்றன.

IFJ யினாலும், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM), ஊடகத் தொழிலாளர் தொழிற்சங்கச் சம்மேளனம் (FMETV), உழைக்கும் தொழிலாளர் சங்கம் (SLWJA), தமிழ் ஊடக முன்னணி (SLTMA) மற்றும் முஸ்லிம் மீடியா போரம் (SLMMF) போன்ற இலங்கை நிறுவனங்களினாலும் கூட்டாக ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வுகள் மற்றும் அரங்குகளிலே பங்கு பற்றியவர்கள் வெளிப்படுத்திய பல்வேறு கருத்துக்களையே இக் கைநூல் பிரதிபலிக்கின்றது.

IFJ யின் உலகளாவிய நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து கிடைக்கும் இந்த அனுபவமும் வளங்களும் முரண்பாட்டில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு சவால்களையும், சிறந்த நடைமுறைகளையும் புரிந்து கொள்ளப் பெரிதும் உதவியுள்ளது.

நாங்கள் ஆபிரிக்காவிலே சனநாயக நிகழ்ச்சித் திட்டத்திற்காக அப்போதைய நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் ஜீன் - போல் மார்தோஸின் தலைமையிலே தீவிர ஊடகத்தினைப் பயன்படுத்தியிருக்கின்றோம். குறிப்பாக, இனத்துவ முரண்பாட்டின் வளங்கள் மற்றும் பல்வகைத்தன்மை மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை அறிக்கையிடுவதனை இது உள்ளடக்குகின்றது. இவ் வெளியீட்டிற்கான பூரணமான உசாவல் இப்புத்தகத்தின் பின் பகுதியில் பட்டியலிடப்பட்டிருக்கின்றது. அவை IFJ யின் இணையத் தளத்திலும் கிடைக்கப் பெறுகின்றன.

## இந் நூலை எவ்வாறு பயன்படுத்துவது

இந்த அறிக்கையானது பத்திரிகையாளர்களின் முரண்பாட்டு அறிக்கையிடல் பற்றிய மனப்பாங்குகள் மற்றும் அனுபவங்கள் மீது நடத்தப்பட்ட ஆய்விலிருந்து கண்டறியப் பட்டவைகளையே சமர்ப்பிக்கின்றது. இதிலே இரண்டு ஊடகக் கண்காணிப்புப் பயிற்சிகள் உள்ளடங்குகின்றன. முதலாவது, எவ்வாறு ஊடகம் முரண்பாட்டினை உள்ளடக்கியுள்ளது என்பது. இரண்டாவது அது எவ்வாறு சுனாமி அனர்த்தத்தின் பின்புள்ள நிலைமையில் செயற்பட்டது என்பதாகும்.

அது ஊடகம் வகித்த பாத்திரத்தினை எடுத்து விளக்குகின்ற முரண்பாட்டு அறிக்கையிடல் பற்றிய சம்பவக் கற்கைகளையும் கொண்டுள்ளது. எமது அறிக்கையிடல் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய உண்மையான நிலையிலிருந்து முக்கியமான பாடங்களைப் பத்திரிகையாளர்களும் ஏனையவர்களும் பெற்றுக் கொள்ள இது உதவுகின்றது. இது எவ்வாறு முன்னேற்றப்படலாம் என்பதை அறிந்து கொள்ள எமக்கு அது அனுமதிக்கின்றது. இச் சம்பவக் கற்கைகள் பத்திரிகையாளர்களின் ஆய்வுகள் கோடிட்டுக் காட்டிய விடயங்களின் கலந்துரையாடல்களினூடே பின்னப்பட்டுள்ளது.

இதனுடன் நாங்கள் இப்போதைய சூழ் நிலையின் ஒரு குறுகிய விளக்கத்தினை வழங்கியுள்ளதுடன் அது எவ்வாறு முன்னேற்றப்படலாம் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

பத்திரிகையாளர்களுக்கான ஓர் நடைமுறை உசாவலாகக் கருதப்படுகின்ற இந்நூல், சிறந்த நடைமுறையை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு பிரிவின் பின்பும் கேள்விகளின் தொடர் ஒன்றினை உள்ளடக்கியுள்ளது. இக்கலந்துரையாடல் கருக்கள் குறிப்பிட்ட சம்பவக் காரணிகளுடன் சேர்ந்து செய்தி அறைகளினுள்ளேயோ அல்லது ஊடகக் கூட்டங்களிலேயோ கலந்துரையாடல்களைப் பிறப்பிப்பதற்குக் கருவியாக அமையலாம். அல்லது ஒரு பத்திரிகையாளர் தனது அல்லது தனது சகபாடியின் பணியினைப் பற்றிய சிந்தனையைக் குவிக்கும் மையப் புள்ளியாக அமையலாம்.

நெறிமுறை மிகு வழியில் உழைப்பதற்கான நடைமுறைகளை வலுப்படுத்தவும், பத்திரிகையாளர்களுக்கும் மற்றும் தொழிலிலே உயர் தரத்தினையும் நெறிசார் அறிக்கையிடலையும் அடைந்துகொள்ள நிர்ணயித்துள்ள ஏனையவர்களுக்கும் இடையில் பரஸ்பர ஆதரவினை ஊக்குவிக்கவும், விவாதங்களை ஊக்குவிக்கவும் பயிற்றுவிப்பாளர்களும், தனிப்பட்டவர்களும் மற்றும் நிறுவனங்களும் இக் கைநூலினைப் பயன்படுத்தலாம்.

இந்த அறிக்கைக்கு ஆதரவாக அமைந்துள்ள ஆய்வானது முரண்பாட்டுக் கூருணர்வு மிகு பத்திரிகைத்துறை எனும் டெனிஸ் சர்வதேச ஊடக உதவியுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தயாரித்த முன்னைய நடைமுறைக் கைநூலினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பத்திரிகையாளர்கள் சிறப்பான முரண்பாட்டுப் பத்திரிகைத் துறை பற்றிய சிறு நடைமுறை ஆலோசனைக் குறிப்புகளைப் பெற்றுக் கொள்ளவும் இதை உசாவல் செய்யலாம். மேலதிக வாசிப்புக்கள் அனுபந்தத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன. இவ் வளங்களில் அதிகமானவற்றை IFJ ஆசிய பசுபிக் இணையத் தளத்திலே ஆங்கிலத்திலே காணலாம்.

உள்ளூர் பத்திரிகையாளர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், மற்றும் பத்திரிகைச் சங்கங்கள் என்பவற்றினூடாக விடயங்களை எழுப்பவும், உங்களது செய்தி அறையிலே கலந்துரையாடலை ஆரம்பிக்கவும், அறிக்கையிடலின் தரம், உள்ளடக்கலின் பல்வகைத்தன்மை மற்றும் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு போன்றவற்றை முன்னேற்றுகின்ற கலந்துரையாடல்களை உள்ளூர் சமூகத்தினருடன் ஆரம்பிக்கவும் இக் கைநூலானது பயன்படுத்தப்படல் வேண்டும்.

இறுதியாக, பத்திரிகையாளர்கள் பத்திரிகைச் சுதந்திரத்திலும், ஆசிரியர் கருத்துச் சுதந்திரத்திலும் ஏன் மிகவும் அக்கறை காட்டுகின்றார்கள் என்பது பற்றிய ஆழமான அறிவிற்காகவும் மற்றும் நீடித்து நிலைக்க விரும்புகின்ற சிறந்த அரசியல் தலைமைகள் ஊடகத்தின் பல் வகைத்தன்மையும், அரசாங்கத்தின் வெளிப்படையான தன்மையும், பத்திரிகையாளர்கள் மத்தியில் சுதந்திரம் மற்றும் துணிகரச் செயல் போன்றவையும் ஏன் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பது பற்றிய புரிதலைப் பெறுவதற்காகவும் அரசியல்வாதிகளும், ஊடக உரிமையாளர்களும் பயன்மிகு முறையில் இதை வாசிக்கலாம்.

**ஜாக்குலின் பார்க்**

பணிப்பாளர்,

IFJ ஆசியா - பசுபிக்

# முரண்பாடும் இனத்துவமும் – விடயங்கள்

## பிளவுபட்டுள்ள நலன்கள்

மாற்றம் நிகழும் காலங்களில் முரண்பாடு என்பது சாதாரணமானதாகும். இந்த மாற்றமானது அனைவரினதும் நலனிற்காக, உரிய முறையிலும் நியாயமாகவும் முகாமை செய்யப்படாத போது மட்டுமே வன்முறை மிக்கதாக உருவாகுகின்றது.

அதிகாரப் பகிர்வு மற்றும் வளப்பகிர்வு போன்றவற்றில் ஏற்படும் சமமின்மையானது சமூகங்களை எதிர் எதிராகத் தூண்டிவிடக் கூடியதாகும். இதனால் அவர்கள் இனக் குழுமங்களாகுதல் போன்று குழுமங்களாகுவதில் புகலிடம் பெறுகின்றார்கள். மேலும் அவர்கள் அதிகாரத்திற்காகவும், அரிதான வளங்களிற்காகவும் போட்டியிடுகின்றார்கள்.

இன, கலாசார அல்லது மதக் குழுமங்களிற்கிடையே தொடர்பாடல் முறிவடையும் போதும், கடந்த கால மனக்குறைகள் தீர்க்கப்படாமலேயே விடப்படும் போதும் முரண்பாடு தோன்றுவதற்கான சாத்தியம் ஏற்படுகின்றது.

ஓர் இனக் குழுமமானது பொதுவான மூதாதையர் மரபு, மதம், மொழி, வரலாறு, கலாசாரம் மற்றும் மிகவும் முக்கியமாக அடையாளம் பற்றிய பொதுவான உணர்வு, ஒன்றான உறுப்பினர்களாக இருக்கும் உணர்வு போன்றவற்றைப் பகிர்ந்து கொள்கின்றது.

மக்கள் பன்முக அடையாளங்களைக் கொண்டவர்கள் என்பதைப் பத்திரிகையாளர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். ஆனால் மக்கள் பன்முக அடையாளங்களைக் கொண்டுள்ளனர் என்பதைப் பத்திரிகையாளர்கள் மனதிற் கொள்ள வேண்டும். அவர்கள் அவர்களை ஒரு தனிப்பட்டவராக, ஒரு ஆணாக அல்லது ஒரு பெண்ணாக அல்லது குடும்பத்தின் ஒரு அங்கமாக, நாட்டின் பிரஜையாக மேலும் சில வேளைகளில் ஒரு இனக் குழுமத்தின் அங்கமாக நோக்குகின்றனர். இலங்கையை எடுத்துக் கொண்டால் இது முஸ்லிமாக, சிங்களமாக அல்லது தமிழாக இருக்கக் கூடும். அவர்களின் இனத்துவ அடையாளம் வலியுறுத்தப்படுகின்ற அளவானது, அவர்களின் வரலாற்று, அரசியல் மற்றும் சமூக அனுபவங்கள் மற்றும் பிராந்தியத்தின் சௌஜன்ய நிலை அல்லது பதற்றம் போன்றவற்றில் தங்கியுள்ளது.

## பத்திரிகைத் துறையின் பாத்திரம்

நீண்ட காலமாக யுத்த முனையிலே செய்தி சேகரிப்பவராகப் பணியாற்றிய கிறிஸ்ஹெட்ஜஸ் இவ்வாறு கூறுகின்றார் : "யுத்தத்தை ஊக்குவிக்கும் வெற்றுப் புனைந்துரைகளை நீடித்திருக்கச் செய்பவர்களில் பத்திரிகைகளும் அரசும் முதன்மை இடத்தை வகிக்கின்றன. அதே போல் விற்பனையையும் தரமிடலையும் உயர்த்துவதிலும் இவர்கள் பங்களிப்புச் செய்கின்றனர். யுத்தத்திலுள்ள பொய்யானது அனேகமாக எப்பொழுதுமே கடமைப் புறக்கணிப்பின் பொய்யாகும்."

வெற்றுப் புனைந்துரை மிகு யுத்தத்திலே நிகழ்வுகளுக்குப் போலியான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. "நாங்கள் தோல்விகளை இறுதி வெற்றிக்கான பாதையில் இருக்கும் வழிகாட்டி மரமாகப் பார்க்கின்றோம். நாம் எமது எதிரியை மனிதத் தரமற்றவர்களாக ஆக்குவதால், அவர்கள் மனிதர்களாகவே தென்படுவதில்லை. நாம் எம்மை, எமது மக்களைக் கலப்பற்ற நற்குணத்தின் அடையாளமாக நோக்குகின்றோம்......

*மேற்கோள் : மக்கள் பன்முக அடையாளங்களைக் கொண்டவர்கள் என்பதைப் பத்திரிகையாளர்கள் நினைவிற் கொள்ள வேண்டும்.*

"ஒவ்வொரு தரப்பும் மற்றைய தரப்பை சடப்பொருள் நிலைக்குத் தாழ்த்திக் கொள்கின்றது. ஈற்றிலே அது சடலத்தின் வடிவைப் பெறுகின்றது." (ஹெட்ஜஸ் 2002)

முரண்பாட்டினைத் தீர்ப்பது பத்திரிகையாளர்களின் தொழில் அல்ல என்றாலும், ஒரு நேர்மையான பன்மைவாத அரசியல் விவாதத்தை ஊக்குவிப்பதிலும், பதற்றத்தைத் தணிக்கக் கூடிய விடயங்கள், கொள்கைகள் மற்றும் உத்திகள் பற்றி வழுவற்ற, தகுந்த சமயத்திலான தகவல்களை வழங்குவதிலும், சமமான முன்னேற்றத்திற்கும் மற்றும் சமூகத்திலே தவறான புரிதலுக்கும் பகைமைக்கும் பங்களிப்புச் செய்யும் அறியாமை மற்றும் அச்சத்தினை குறைப்பதற்கு ஏற்ற நிலைமையை உருவாக்குவதிலும் ஊடகம் முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டியுள்ளது.

இதைச் செய்வதற்காகப் பத்திரிகையாளர்கள் முரண்பாட்டின் மூலத்தையும் காரணத்தையும் ஆராய வேண்டும். அப்போது தான் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் நடைமுறை ஆலோசனைகள் பற்றிச் செயற்திறன் மிகு முறையில் அறிக்கையிட முடியும்.

யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய அறிக்கையிடல் நிறுவனமானது, முரண்பாட்டு நேரத்தில் அறிக்கையிடும் பத்திரிகையாளர்களுக்கான ஆறு கடமைகளை வரையறை செய்துள்ளது.

**முரண்பாட்டினைப் புரிந்து கொள்வது** - எவ்வாறு அது உருவாகுகின்றது. மேலும் எவ்வாறு தீர்வுகள் தோன்றலாம்.

**நியாயமாக அறிக்கையிடுவது** - அனைத்துப் பிரிவினரதும் சிக்கல் தன்மைகளையும் கருத்துக்களையும் அறிக்கையிடுவது மற்றும் எமக்கு ஏதாவது பற்றுறுதி இருப்பின் அதை வாசகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் தெளிவாக வெளிப்படுத்துவது.

**முரண்பாட்டின் பின்புலத்தையும் காரணங்களையும் அறிக்கையிடுவது** - அனைத்துத் தரப்பினரதும் நியாயமானதும், உணரப்படுகின்றதுமான மனக்குறைகளை வழுவின்றி வெளிப்படுத்த வேண்டும். உணரப்படுகின்ற மனக்குறைகள் கூட முரண்பாட்டினைச் சதா நீடிக்கச் செய்வதற்கும், தீர்ப்பதற்கும் முக்கியமானவை என்பதனை வாசகர்களுக்கு நினைவூட்டவும் வேண்டும்.

**மனிதத்தின் பக்கத்தைச் சமர்ப்பிப்பது** - அவர்களின் மன அதிர்ச்சி வடுக்களையும், முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட அனைவரது மனிதக் கதைகளையும் சமனிலை பேணும் விதத்திலும், நிபுணத்துவமாகவும், தவறாகப் பயன்படுத்தாமலும் வெளிப்படுத்த வேண்டும். இது அந்த மக்களுக்கும், எமது வாசகர்களுக்குமான கடப்பாடாகும்.

மேற்கோள் : பத்திரிகையாளர்கள் செயற்திறன் மிகு முறையில் அறிக்கையிடுவதற்காக, முரண்பாட்டின் மூலங்களையும் காரணங்களையும் ஆராய வேண்டும்.

**சமாதான முயற்சிகள் பற்றி அறிக்கையிடுவது** - சமாதானம் மற்றும் மீள் இணக்கப்பாடு போன்றவற்றிற்காக பணியாற்றுபவர்கள் பற்றிய சகல விடயங்களையும் குறிப்படுவதைப் போல முரண்பாட்டினைத் தூண்டி விடுபவர்களைப் பற்றியும் அனைத்தையும் அறிக்கையிட வேண்டும். இதிலே அடிப்படையாகப் போரில் ஈடுபடுபவர்களுக்கு வெளியேயுள்ள காரணிகளின் தேடலும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

**எமது செல்வாக்கினை இனம் காண்பது** - எவ்வாறு எமது அறிக்கையிடலானது முரண்பாட்டினையும் மக்களின் வாழ்வினையும் பாதிக்கும் என்பதையும் இனம் காணுதல் (IWPR) வேண்டும்.

## உண்மை, சமாதானம் மற்றும் நியாயமான தன்மை

*"ஊடகத்தின் அங்கங்களாக இருக்கும் பத்திரிகையாளர்கள், வெளியீட்டாளர்கள், ஆசிரியர்கள் போன்றோர் சமூகத்தில் இருந்தும் பிரிந்து வாழ்பவர்கள் அல்ல. அவர்கள் சமூகத்தினை உருவாக்கி இருக்கும் பிளவுகள், போட்டி மனப்பான்மைகள், எதிர்ச் சார்புகள் போன்றவற்றின் பகுதியாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு இருக்கின்ற வலிமையான பாத்திரத்தைப் பற்றிய பூரண பிரக்ஞையுடன் அவர்கள் சார்ந்திருக்கின்ற பக்கத்தின் நலன்களை மேம்படுத்தும் வழிகளில் செயற்பட அவர்கள் விளைகின்றார்கள்."*

**ஜெஹான் பெரேரா**, இனத்துவ விவகாரங்கள் பற்றிய கிரமமான பத்தி எழுத்தாளர், டெய்லி மிரர்

இங்கே எழுகின்ற பொதுவான கேள்வி, சமாதானத் தேடலானது பத்திரிகைத் துறையில் உண்மை எனும் கடப்பாட்டுடன் இணைவொத்திருக்கக் கூடியதா என்பதே. ஒரு பத்திரிகையாளர் சமாதானத்திற்கான திட்டத்தினை வைத்துக் கொண்டே உண்மைக்கான கடப்பாட்டினையும், நியாயமான தன்மையினையும் பற்றிப் பிக்க முடியுமா?

நியாயமான தன்மையின் உண்மையான விழுமியம் என்னவெனில், முகப்புத் தோற்றத்தில் அதிகாரபூர்வ அறிக்கையினை ஏற்க வேண்டாம் என அது வேண்டுவதேயாகும். அது அதிகமான கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது. அதிகமான பத்திரிகையாளர்கள் தகவல்களுக்காக ஒரு அதிகாரபூர்வ மூலத்தில் மாத்திரமே தங்கியிருக்கும் இலங்கைச் சூழமைவிலே, செய்தியிலே சமனிலையையும், அதிக குரல்களையும் தேடுவது இன்றியமையாததாகும்.

நியாயமான தன்மையினால் வழி நடத்தப்படுகின்ற பத்திரிகைத் துறையானது உண்மைக்கான உத்தரவாதம் ஆகாது என்பதாகவும் சில வேளைகளில் குறித்துக் காட்டப்படுகின்றது. கருத்துக்களின் சமனிலையை வழங்க முயற்சிப்பது மற்றும் அதை வாசகர்களைத் தீர்மானிக்க விடுவது மூலமாக நியாயமான தன்மையினைத் தேடுவதானது குறிப்பாக அபாயகரமான ஒன்றாகும்.

மெல்போர்ன் பல்கலைக்கழக அறிவியலாளர் நீல்லெவியின் கருத்துப்படி பார்க்கையிலே, அபாயமானது இது தான். "சமனிலையின் வகைதொகையற்ற தேடலானது, நியாயமான தன்மைக்கு இட்டுச் செல்லாது, ஆனால்






உண்மையின் மொத்தமான உருத்திரிபிற்கே அது இட்டுச் செல்லும்." (லெவி 2004)

குறிப்பாக, முரண்பாட்டிலே, அனைத்து நிலைப்பாடுகளும் சமமான தகுதியினைக் கொண்டவையல்ல என்பது முக்கியமான விடயங்களில் ஒன்றாகும். எனவே பத்திரிகையாளர் ஒவ்வொரு நிலைப்பாட்டினதும் ஒப்பீட்டளவிலான தகுதியினை மதிப்பீடு செய்து அவற்றை அவர்களின் மனச்சாட்சிக்கு அமைய நியாயமாக அறிக்கையிட வேண்டும். உதாரணமாக, பலர் ஏற்றுக் கொள்வது போல் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்வது தவறு எனின், அப் படையிற் சேர்த்தலினால் நன்மை பெறுகின்றவர்களுக்கு நம்பகத் தன்மையை வழங்குவதன் மூலம் நாம் எமது அறிக்கையிடலை நியாயமானதாக ஆக்குவதில்லை.

எவ்வாறாயினும், இது பிரச்சாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கவில்லை. பத்திரிகையாளர்கள் அவர்களின் சொந்தப் பக்கச் சார்பினைக் குறைத்துக் கொண்டு, முரண்படும் கருத்துக்களுக்கு நியாயமான முறையில் அறிக்கையிடுவது அவர்களின் கடமை என லெவி நினைவூட்டுகின்றார். பத்திரிகையாளர்களின் பிரதான இலக்காக உண்மைக்கான கடப்பாடும் இருக்கின்றது. அதை அவர்கள் நியாயமான தன்மையுடன் ஒத்திசைவிக்க வேண்டும். வெறுமனே இரு தரப்பினரதும் கருத்துக்களைத் தேடுவது உண்மைக்கான நோக்கத்தை மேம்படுத்தாது. நாம் மக்களை எவ்வாறு முறைசார்ந்த உண்மைக்கு அப்பால் எடுத்துச் செல்லலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டும். அது நியாயமான முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், அதன் உண்மையான விளைவுகள் பற்றிய புரிதலுக்கு மக்களைக் கூட்டிச் செல்ல வேண்டும்.

ஒரு கதையினை ஆழமாகக் கிளறுவதற்கும், பகுப்பாய்வு செய்வதற்கும், விளக்குவதற்கும் மேலும் அது உண்மை எது பொய் எது என்று சொல்லும் வரை செய்தியினை சட்டகத்தினுள் போடுவதற்கும் எவ்வாறு அதை நகர்த்துவது என்பதற்கு நாம் நியாயமான தன்மைக்கு அப்பால் நோக்க வேண்டியுள்ளது. செய்திகளில் ஏற்கனவே இல்லாத விடயங்களை அதனுள் சேர்ப்பதற்காக பத்திரிகையாளர்களை நியாயமான தன்மையானது மன்னிக்காது என்பதையிட்டும் பத்திரிகையாளர்கள் கவனமாக இருக்க வேண்டும். (கன்னிங்கம், 2004)

## யுத்தத்தில்

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையாளர் கிறிஸ்ஹெட்ஜஸ் நியூயோர்க் நூல்களின் மீளாய்விலே, ஈராக் யுத்தத்திலே பத்திரிகையாளர்களின் செய்தி உள்ளடக்கத்தின் மீளாய்வின் சூழமைவில் எழுதிய யுத்தம் பற்றி கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட பகுதிகளிலே பின்வருமாறு வலியுறுத்துகின்றார். "யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களே யுத்தத்தினைப் புரிந்து கொள்கின்றார்களே அன்றி அரசியல்வாதிகளோ, மேட்டுக் குடியினரோ அல்ல." யுத்தம் பற்றிய உண்மை பின்பு எப்படி வருகின்றது என்பதை அவர் கோட்டிட்டுக் காட்டுகின்றார்.

யுத்தத்தில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டவர்களே யுத்தத்தினை அறிவார்கள். பெருமை, கௌரவம், நாட்டுப் பற்றுப் போன்ற கோட்பாட்டளவான சொற்களைப் பயன்படுத்தி காயப்பட்டவர்களின் ஓலங்களை மூடி மறைக்க முயற்சிப்பவர்களின் வெற்று வீறாப்பினூடே இத் தோற்கடிக்கப்பட்டவர்கள் அர்த்தமற்ற கொலைகளையும், யுத்தத்தினால் கொள்ளைலாபமடித்தலையும், மனதை நெகிழ வைக்கும் துயரங்களையும் பார்க்கின்றார்கள். வெல்பவர்கள் பொதுவாக ஏற்றுக் கொள்ளாத பொய்களை அவர்கள் அறிவார்கள். துணிச்சல் மற்றும் தோழமை போன்றவற்றின் கதைகளால் நிரம்பிய, பகட்டாரவாரமிக்க யுத்த நினைவுக் கூட்டங்களிலும், வெற்றுப் புனைந்துரை மிகு யுத்தக் கதைகளிலும் விரவிக் கிடக்கும் பொய்களை அவர்கள் அறிவார்கள். யுத்தத்தை உருவாக்கும் ஆனால் யுத்தத்தைப் பற்றித் தெரியாத நெறியற்ற இராச தந்திரிகளினால் எழுதப்படும் தெளிவற்ற, சுயமுக்கியத்துவம் மிக்க வரலாற்றுக் குறிப்புக்களில் ஊடுருவும் பொய்களை அவர்கள் அறிவார்கள். தோற்கடிக்கப்பட்டவர்களே யுத்தம் - மரணம் என்பவற்றின் அடிப்படைத் தன்மையினை அறிவார்கள். யுத்தம் என்பது பிணங்கள் மீதான காம வேட்கை என்பதை அவர்கள் புரிந்து கொள்கின்றார்கள். யுத்தம் என்பது வெறுப்பு மற்றும் அழிவு போன்ற அதன் இலக்குகளைக் கொண்ட ஒரு தூய பாவத்தின் நிலை என்பதை அவர்கள் பார்க்கின்றார்கள். யுத்தம் எவ்வாறு பிரிவினைப் போற்றி வளர்க்கின்றது, தவிர்க்க முடியாத வகையில் சமய மற்றும் **விடய** மறுப்பு வாதத்திற்கு இட்டுச் செல்கின்றது, மற்றும் எவ்வாறு அது வாழ்க்கையின் புனிதம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றிற்கு எல்லாம் அப்பாற்பட்டது என்பதை அவர்கள் அறிவார்கள். யுத்தம் பற்றிய ஏனைய அனைத்துக் கதைகளும், மிக இலகுவாக, வன்முறையின் கவர்ச்சிக்கும், மருட்சித் திறத்திற்கும் இரையாகி விடுகின்றன. அதேபோலவே அவை சட்டத்தின் பாதுகாப்புடன் கொலைகளைப் புரிவதற்கான அனுமதியினைக் கொண்டு வரும் கடவுள் போன்ற அதிகாரத்தின் கவர்ச்சிக்கும் இரையாகி விடுகின்றன.

ஆனால் யுத்தத்திலே தோல்வி கண்டோரின் வார்த்தைகள் யுத்தம் முடிவடைந்து மிக நீண்ட காலத்திற்கு பின்பே வெளிவருகின்றன. வளர்ந்த ஆண்களும், பெண்களும் அவர்கள் சிறுவர்களாக இருந்த போது அவர்களின் தாயோ அல்லது தகப்பனோ கொல்லப்பட்ட அல்லது கடத்திச் செல்லப்பட்ட துயரத்தை, அவர்களின் வீட்டை, சமூகத்தை, பாதுகாப்பை இழந்த துயரத்தை, அவர்கள் மனிதக் குப்பைகளாகக் கழித்து எறியப்பட்ட துயரத்தை வளர்ந்த பின்பே வெளிவிடுகின்றனர். ஆனால் அந்த நேரத்தில் அதைக் கேட்பதற்கு வெகு சிலரே உள்ளனர். யுத்தம் பற்றிய உண்மை வெளிவரவே செய்கின்றது. ஆனால் பொதுவாக மிகவும் காலம் தாழ்த்தியே வருகின்றது. ஆனால் இந்தக் கதைகளெல்லாம் தேசம் தொடங்கத் தயாராகின்ற பெருமை மிக்க வன்முறைச் செயற்பாட்டிலே எத்தாக்கத்தையும் ஏற்படுத்தாது என யுத்தத்தை உருவாக்குபவர்கள் எமக்கு உத்தரவாதம் அளிக்கின்றார்கள். மேலும் யுத்தத்தின் வெற்றுப் புனை கதைகளையும் அதன் வலுவூட்டலையும் ஆவலுடன் பெற்றுக் கொண்டு நாம் அதைப் பார்க்காமல் இருக்கவே பெரிதும் விரும்புகின்றோம்.

# பெரும் பிளவு – பத்திரிகையாளர்கள் என்ன நினைக்கின்றார்கள் மேலும் அவர்கள் எவ்வாறு அறிக்கையிடுகின்றார்கள

முரண்பாட்டுக் காலங்களிலே ஊடகம் வகித்த பாத்திரத்தினைப் பற்றி அதிகளவிலான பகுப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ள அதேவேளை, அவற்றிலே பெரும்பான்மையானவை உண்மையான உள்ளடக்கத்திலேயே கவனத்தைக் குவித்திருந்தன. ஆனால் பத்திரிகையாளர்கள் எதிர் நோக்கிய சவால்கள் பற்றிய அவர்களின் அனுபவம், அவர்கள் முகம் கொடுக்கின்ற தடைகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஏதாவது ஆதரவு, மிகவும் முக்கியமாக * நிபுணத்துவமும் நெறியும் மிக்க பத்திரிகைத்துறையை நடைமுறைப்படுத்த என்ன வளங்கள் தேவை என அவர்கள் உணருகின்றார்கள் போன்றவற்றை அரிதாகவே பகுப்பாய்வாளர்கள் முறைசார் வழியிலே அவர்களிடம் கேட்டுள்ளனர்.

IFJ இலங்கையிலுள்ள அதன் பங்காளர்களுடன் சேர்ந்து 100 பத்திரிகையாளர்களை அவர்களின் மனப்பாங்குகள், அனுபவங்கள் தொடர்பாக நேர்கண்டுள்ளதுடன் முன்னேற்றத்திற்கான அவர்களின் ஆலோசனைகளையும் கேட்டுள்ளது.

ஆய்வானது கணிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், அதிகமான தகவல்கள் நேருக்கு நேர் சந்திப்பின் போது பதியப்பட்டுள்ளன.

பதிலாகக் கிடைத்த தரவுகள் இலங்கையிலே பத்திரிகையாளர்கள் என்ன நிலைமைகளின் கீழ் தொழில் புரிகின்றார்கள், அவர்கள் செய்தி சேகரிக்க என்ன முறைகளைக் கையாளுகின்றார்கள், மற்றும் முரண்பாடு பற்றி அறிக்கையிடுவதில் அவர்களுக்கு உள்ள அனுபவங்கள் போன்றனவற்றைப் பற்றித் தனித்துவமான அறிவினை வழங்குகின்றன.

முரண்பாடு அறிக்கையிடப்படும் முறையில் தற்போது காணப்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைகளில், வளங்களைச் சென்றடைவதற்கான குறைவான செல்வழி, பக்கச்சார்பானதும், நம்ப முடியாததுமான தகவல் மூலங்கள் (குறிப்பாக அரச துறையிலிருந்து), தகவலுக்கு உள்ள மொழித் தடை, ஊடகத்தில் ஏனைய இனக் குழுமங்களின் உரிய பிரதிநிதித்துவம் இல்லாமை போன்றன உள்ளடங்குகின்றன.

வினாக் கொத்திற்குப் பதிலளித்த 100 பத்திரிகையாளர்களில், 88% மானோர் அச்சு ஊடகத்தில் பணி புரிகின்றனர். அத்துடன் கணிப்பீட்டிற்கான பதிலில் ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் சமமான பிரதிநிதித்துவம் காணப்பட்டது.

## ஊடகத்தினைக் கண்காணித்தல்

பத்திரிகையாளர்களின் கருத்துக்களின் கணிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு, அனைத்துப் பிரதான நாளாந்த செய்திப் பத்திரிகைகளும் 2004 ஜுன் 1 முதல் 14 வரையிலான இரண்டு வார காலப்பகுதிக்குக் கண்காணிக்கப்பட்டன. அவ்வேளையிலே, இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் இரண்டு வருடங்களுக்கும் மேலாக அமுலில் இருந்தது. ஆனால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஒரு வருடத்திற்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குவதே அப்போதைய கரிசனைகளில் பிரதானமான ஒன்றாக இருந்தது. எனவே, சமாதானச் செயன்முறையும் அது தொடர்பான அனைத்து விடயங்களும் எவ்வாறு 422 செய்தி விடயங்களில் உள்ளடக்கப்பட்டன என்பதையே கண்காணிப்புச் செயன்முறை நோட்டமிட்டது.

*(132 ஆங்கிலம், 166 சிங்களம், 144 தமிழ்)*

- முரண்பாடு மற்றும் சமாதானச் செயன்முறை பற்றிய உள்ளடக்கமானது பக்கச் சார்பானதாகவும், உணர்வுகளைக் கிளறிவிடக் கூடியதாகவும், மேலும் அதிகமான சந்தர்ப்பங்களில் குறிப்பாக சிங்கள மற்றும் தமிழ் செய்திப் பத்திரிகைகள் ஒரு மூலத்தை மட்டுமே மேற்கோள் காட்டுவதாகவும் இருப்பதை முடிவுகள் காட்டின.
- (சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலப் பத்திரிகைகள் தத்தமது வாசகர்களுக்கு வித்தியாசமிக்க செய்திகளை வழங்குகின்றன என்பதைக் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன.)
- கண்காணிப்பு இடம்பெற்ற கால கட்டத்திலே, சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீளத் தொடங்குதல் பற்றிய விடயங்களான, சமாதானச் செயன்முறை மற்றும் அது தொடர்பான விடயங்கள் பற்றிய கட்டுரைகளுக்கு அளிக்கப்பட்ட இடம், முதன்மை நிலை மற்றும் தரம் என்பவற்றையே இந் நடவடிக்கை கண்காணித்தது.
- தமிழ்ப் பத்திரிகைகள் சமாதானச் செயன்முறை பற்றிய செய்திகளைப் பாரிய அளவில் உள்ளடக்கியிருந்தன. அவற்றிலே 72 கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. முன்பக்கத்தில் வெளியாகும் தலைப்புச் செய்திகள் உள்ளடக்கத்தில் அதிகளவான முதன்மை நிலையினைப் பெற்றிருந்தன. அரச கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளை விட இவை சமாதானச் செயன்முறை பற்றி மிகவும் சாதகமான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தன.
- ஆங்கிலத் தினசரியான 'த ஐலண்ட்' சமாதானத்திற்கு ஆதரவாக வெளியிட்ட 7 செய்திகளுடன் ஒப்பிடுகையிலே, சமாதானச் செயன்முறைக்கு எதிராக 26 செய்திகளை வெளியிட்டிருந்தது. சிங்களத் தினசரியான திவயின, சமாதானத்திற்கு எதிராக 15 செய்திகளையும், ஆதரவாக 3 செய்திகளையும் வெளியிட்டிருந்தது.
- (சிங்களப் பத்திரிகைகள் யுத்த நிறுத்த மீறல்களின் கவனம் குவித்து அது பற்றி 42 செய்திகளையும், அதேவேளை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை பற்றி 11 செய்திகளையுமே வெளியிட்டிருந்தன. )
- சிங்கள மற்றும் ஆங்கிலச் செய்திப் பத்திரிகைகளில் வெளியான LTTE யின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துச் செய்திகளிலும் 70% ற்கும் அதிகமானவற்றின் பிரதான செய்தி மூலமாக பெயரிடப்படாத பொலிஸ் மற்றும் இராணுவ மூலங்கள் இருந்த அதேவேளை, வன்முறை பற்றிச் செய்தி வெளியிட்ட தமிழ் ஊடகங்கள் LTTE யினை அல்லது அதனுடன் தொடர்புபட்ட மூலத்தினை அறிக்கையிடலுக்கான தமது பிரதான மூலமாகக் கொண்டிருந்தன.
- சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பொதுவாகப் பக்கச்சார்பு மிக்கவையாகவும், உணர்வுகளைக் கிளறி விடுபவையாகவும் இருந்தன. சிங்களப் பத்திரிகைகளில் ஒன்றிற்கு மேற்பட்ட கருத்துக்களைத் தாங்கி வெளிவந்த 47 கட்டுரைகளுடன் ஒப்பிடுகையில், அவற்றிலே வெளிவந்த 74 கட்டுரைகள் ஒன்றில் பக்கச்சார்பு மிக்கதாகவோ அல்லது உணர்வுகளைக் கிளறிவிடக் கூடியவையாகவோ இருந்துள்ளன.
- முரண்பாடு மற்றும் அது தொடர்பாக சிங்கள ஊடகத்தில் வெளிவந்த அனைத்துக் கட்டுரைகளிலும் 50% ற்கும் அதிகமானவை பெயரிடப்பட்ட அல்லது பெயரிடப்படாத ஒரு மூலத்தை மட்டுமே பயன்படுத்தியுள்ளன.
- LTTE யினை விமர்சிக்கும் விதமாக அமைந்த அரசியல் கருத்துக்கள் அல்லது செய்திகளைப் பற்றி அறிக்கையிடுவதில் தமிழ் செய்திப் பத்திரிகைகள் சுய தணிக்கையினைக் கடைப்பிடிக்கின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இக் கணிப்பீட்டின் மூலம் எடுத்துக் காட்டப்படும் இலங்கை ஊடகத்தின் நிலை என்னவெனில், அது இன மற்றும் மொழிசார்ந்து பிரிந்து கிடக்கின்றது. பொது மக்களுக்குச் சமநிலையான, பக்கச்சார்பற்ற ஊடகத் தகவலை வழங்கி சமாதானத் தீர்விற்கு உதவாமல் தத்தமது வாசகர்களுக்கு வித்தியாசமான செய்திகளை வழங்குகின்றது.

## அறிக்கையிடல் : எமது பாத்திரம்

கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துப்படி, இலங்கையிலுள்ள ஊடகத்தின் பாத்திரமானது தகவல்களை வழங்குவதாகவும், முரண்பாட்டுத் தீர்வினை வசதிப்படுத்துவதாகவும் மற்றும் நியாயமாகவும் நடுநிலையாகவும் இருப்பதாகவும் இருக்க வேண்டும்.

எனினும், யதார்த்தத்திலே இந்நிலைமைக்கு வெகுதூரமாகவே நடவடிக்கைகள் காணப்படுகின்றன. கணிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட அரைவாசிக்கும் மேற்பட்டோரின் கருத்துப்படி, இலங்கையின் இன முரண்பாடு பற்றிய செய்திகளை உள்ளடக்கையில் ஊடகமானது இரு பக்கத்தினது செய்திகளையும் வெளியிடுவதில்லை என்றே தோன்றுகின்றது.

இலங்கையிலுள்ள அதிகமான பத்திரிகையாளர்கள் ஊடகத்தின் பொறுப்புக்களைப் பாராட்டுகின்றார்கள் என்பதை இது தெரிவிக்கின்ற அதேவேளை, பதில் வழங்கியவர்களில் 87% மானவர்கள் தற்போதுள்ள முரண்பாடு பற்றிச் சரியான, சமனிலையான மற்றும் நியாயமான தகவல்களை வழங்கப் போதுமான நடவடிக்கைகளை எடுக்க இலங்கை ஊடகம் தவறுகின்றது எனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பதிலளித்த ஐவரில் நான்குபேர் இலங்கை ஊடகங்கள் குறிப்பிட்ட இனக் குழுமங்களுக்கு பக்கச் சார்புடையதாக நடப்பதால் இக் குறைபாடு ஏற்படுகின்றது என்கின்றனர். இதன் மூலமாக அவர்கள் சிறந்த பத்திரிகைத் துறை என எது புரிந்து கொள்ளப் பட்டுள்ளதோ அதற்கும் அதன் உண்மையான நடைமுறைக்கும் இடையில் உள்ள குறிப்பிடத்தக்க இடைவெளியைக் கோட்டிட்டுக் காட்டியுள்ளனர்.

## செய்தியினைப் பெற்றுக் கொள்ளுதல்

சமநிலைபேணுகின்ற அறிக்கையினைப் பத்திரிகையாளர்கள் வழங்குவதற்குப் பாரிய தடையாக செய்தி மூலங்கள் இருக்கின்றன என்பதைக் கணிப்பீடும், ஊடகக் கண்காணிப்பும் கண்டறிந்துள்ளன. இம் மூலங்கள் அடிப்படையிலே பக்கச் சார்புடையனவாகவும், மட்டுப்படுத்தப்பட்டவையாகவும், ஒரு மூலத்திற்கும் அதிகமாகச் சென்றடைய முடியாதவையாகவும் இருக்கின்றன.

- கணிப்பீட்டிலே பங்கு கொண்டோரில் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்டவர்கள், முரண்பாட்டுச் சூழ்நிலை பற்றிய செய்திகளை உள்ளடக்குவதற்கு தாம் நாடுகின்ற மிகப் பொதுவான மூலமாக பொலிஸ் படையினைக் குறிப்பிட்டுள்ளனர். ஏனைய மூலங்களில் பொதுமக்கள், அரசியல்வாதிகள், என்.ஜி.ஓக்கள், ஆயுதக் குழுக்கள் மற்றும் இராணுவம் போன்றன அடங்குகின்றன.
- முரண்பாட்டினை பற்றிய செய்திகளை உள்ளடக்கையில் மிகவும் பயன் குறைந்த மூலமாக இலங்கைத் தகவல் திணைக்களம் குறிப்பிடப்பட்டது.
- பதில் அளித்தவர்களில் மூன்றில் இரண்டிற்கும் மேற்பட்டவர்கள் அரச கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களினால் வழங்கப்படுகின்ற தகவல்களையிட்டு அதிருப்தி தெரிவித்தனர். அவற்றினை அவர்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் பக்கச்சார்புடையதாகவும் காண்பதாகக் குறிப்பிட்டனர். மேலும் பதிலளித்த ஐவரில் நான்கு பேர் அவற்றின் தகவல்கள் தவறானவை அல்லது நம்ப முடியாதவை என்று குறிப்பிட்டனர்.
- பதிலளித்த 96% மானோர் தாம் முரண்பாட்டு அறிக்கைகளைத் தயாரிக்கையில் ஆகக் குறைந்தது இரண்டு மூலங்களையாவது பயன்படுத்த முயற்சிப்பதாகக் கூறியுள்ள போதிலும், பிரசுரிக்கப்பட்ட செய்திகளில் 50% ற்கும் அதிகமானவை பெயரிடப்பட்ட அல்லது பெயரிடப்படாத ஒரு மூலத்தை மட்டுமே பயன்படுத்தியிருப்பதாக ஊடகக் கண்காணிப்பு முடிவுகள் காட்டுகின்றன.
- அதிக எண்ணிக்கையிலானதும், வகை வகையானதுமான மூலங்களைச் சென்றடைவதைத் தடுக்கும் பிரதான காரணங்களாக மொழித் தடைகள், செய்தியறையில் பல்வகைத் தன்மை மற்றும் புரிந்துணர்வு இல்லாமை ஆகியவற்றைப் பத்திரிகையாளர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

## தணிக்கை

மூன்று வருட காலமாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் நிலவுகின்ற போதிலும், உத்தியோகபூர்வமாக எந்தத்தணிக்கையும் இல்லாத போதிலும், இலங்கை ஊடகங்களிலே மட்டும் தெளிவான ஒரு தணிக்கைக் கலாச்சாரம் தொடர்ந்தும் இருந்து வருவது கணிப்பீடு மற்றும் ஊடகக் கண்காணிப்பு ஆகிய இரண்டில் இருந்தும் தெளிவாகுகின்றது.

யுத்தம் மற்றும் சமாதானம் ஆகிய இரண்டினையும் பற்றிய தகவல்களுக்கான போதுமான செல்வழி இல்லாமையானது, இலங்கையின் முரண்பாடு பற்றிய செய்திகளை வெளிப்படையாக உள்ளடக்குவதனை மறைமுகமாகத் தடுத்துள்ளது.

தமிழ் பத்திரிகைகள் எல்ரிரிஈ பற்றிய விமர்சனக் கருத்துக்களை சுய தணிக்கை செய்கின்றன, அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் ஆளும் அரசியற் கட்சியின் சிந்தனைப் போக்கினை ஓட்டிச் செல்கின்றன. சிங்களப் பத்திரிகைகளோ யுத்த வலய அறிக்கைகள் பற்றி இராணுவ அதிகாரிகளைக் கேள்வி கேட்பதில்லை, ஏனெனில் ஒரு இரண்டாம் நிலை மூலம் இல்லாத காரணத்தினால், இராணுவம் கூறுவது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

## ஒழுக்கக் கோவை

இலங்கையில் பத்திரிகைத் துறையின் தரத்தினை மேம்படுத்துவதில் ஒரு முக்கிய படி இலங்கைக்கான ஒழுக்கக் கோவையைப் பரவலாக ஏற்று அதை நிறுவனமயப்படுத்தியமையாகும்.

- அனைத்துப் பத்திரிகையாளர்களிலும் அரைவாசிப் பேர் மட்டுமே தொழில்சார் நடைமுறைக் கோவையினைப் பற்றித் தெரிந்திருந்தார்கள். மேலும் அவர்களின் பத்து வீதத்திற்கும் குறைவானோரே கோவையின் பிரதியினையோ அல்லது கோவையில் பயிற்சியினையோ பெற்றிருந்தார்கள் என ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது.



புத்திக வீரசிங்க

- கணிப்பீட்டுக்குட்படுத்தப்பட்ட அரைவாசிக்கும் மேற்பட்டோர் தமது ஊடக நிறுவனம் இலங்கைத் தொழில்சார் நடைமுறைக் கோவையினைப் பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவிடமிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது என்பதைப் பற்றி அறிந்திருந்தார்கள். 11% மானோர் மட்டுமே உண்மையிலே ஒரு பிரதியினை வைத்திருந்தார்கள், மேலும் அவர்களில் மூன்றில் இரண்டு பேர் மட்டுமே அது தொடர்பான பயிற்சியினைப் பெற்றிருந்தனர்.
- மேலும், கோவையினை ஏற்றுக் கொண்ட நிறுவனங்களின் பத்திரிகையாளர்களில் (கணிப்பீட்டிற்குட்பட்டவர்களில் 56% மானோர்) மூன்றில் ஒருவர் மட்டுமே இன / சமய முரண்பாடுகள் பற்றி அறிக்கையிடலில் வழிகாட்டுதல்களை ஒருங்கிணைத்துள்ளனர். அவர்களில் 71% மானோர் வழிகாட்டுதல்களுக்கான கோவையில் பயிற்சி பெற்றுள்ளனர்.
- முரண்பாட்டினை பற்றி அறிக்கையிடல் தொடர்பாக இலங்கை ஊடகத்திற்கு இருக்கின்ற குறிப்பிட்ட பொறுப்புக்களை இனங்காணுகின்ற நிறுவனங்கள், இப் பொறுப்புக்களைப் பற்றி தமது பத்திரிகையாளர்கள் மத்தியிலும் விழிப்புணர்வினை ஊக்குவிக்க அதிக சாத்தியமுண்டு என நினைக்கலாம்.

## பயிற்சி

இன முரண்பாட்டினை அறிக்கையிடுகின்ற பத்திரிகையாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட பயிற்சி, கல்வி மற்றும் வளச் சாதனங்களுக்கான பொதுவான தேவை போன்றன பற்றி கணிப்பீடு சுட்டிக் காட்டியுள்ளது. பதில் அளித்தவர்களில் சுமார் மூன்றில் இரண்டு பேர் தாம் முரண்பாடு அறிக்கையிடலில் எப் பயிற்சியையும் ஒரு போதும் பெறவில்லை எனத் தெரிவத்தனர். மேலும் 69% மானோர் சமய மற்றும் இன முரண்பாடு பற்றி அறிக்கையிடல் தொடர்பாகக் கிடைக்கக் கூடிய எந்தக் கல்விச் சாதனம் பற்றியும் தமக்குத் தெரியாது எனக் கூறினர்.

## எவ்வாறு முன்னேறுவது

பதில் அளித்தவர்களில் அதிகமானவர்கள் இலங்கையில் ஊடகத்தின் பாத்திரத்தினைப் புரிந்து கொள்கின்ற அதேவேளை, சிலர் இப்பாத்திரம் நிறைவேற்றப்படுகின்றது, அல்லது அவர்களிடம் வளம் உள்ளது அல்லது எவ்வாறு நிபுணத்துவமிகு மற்றும் நெறிசார் முறையில் பங்களிப்புச் செய்வது என்பது தமக்குத் தெரியும் என நம்புகின்றார்கள் என்பதாக இக் கணிப்பீட்டின் முடிவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

## முன்னேற்றமிக்க அறிக்கையிடலுக்கு பின்வருவன உதவி வழங்கலாம்

- நெறிக்கோவையினை அனைத்து ஊடக நிறுவனங்களும் அமுல்படுத்துவது
- முரண்பாடு அறிக்கையிடல் தொடர்பான வழிகாட்டுதல்களை வரைவது
- செய்தியறையில் அதிகமான பல்வகைமையை உறுதிப்படுத்துவது
- மனக் கிளர்ச்சியைத் தூண்டுகின்ற, ஆத்திரமூட்டக் கூடியதான தலைப்புச் செய்திகளையும், மொழியினையும் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளல்.

# சம்பவக் கற்கை




## இனத்துவத்தினை வலியுறுத்தல்

ஒரு பத்திரிகையாளன் நடைமுறைக் கோவை பற்றி அறிந்திருக்கிறானோ இல்லையோ, இன முரண்பாட்டினை அறிக்கையிடுவதில் பயிற்சி பெற்றிருக்கின்றானோ இல்லையோ, அவன் உண்மையான முரண்பாட்டுச் சூழ்நிலைக்கு முகம் கொடுக்க நேரிட்டு, அதைப் பற்றித் துரிதமாகவும், பக்கச்சார்பின்றியும், வழுவின்றியும் அறிக்கையிட வேண்டி ஏற்படுகையில் அது அவனுக்கு உண்மையில் சவால்களை வரிசையாக வழங்கி விடுகின்றது.

பின்வரும் சம்பவக் கற்கையானது பல செய்திப் பத்திரிகைகளும் உள்ளடக்கிய முரண்பாட்டுச் சூழ்நிலையின் ஒரு உதாரணமாகும். ஒவ்வொரு சம்பவத்திலும், உண்மைகளை மெய்ப்பிப்பதற்கும், பத்திரிகைத்துறை நடைமுறைக் கோவைக்கு இயைந்து நடப்பதற்கும், பக்கச்சார்பற்ற நடுநிலையான முறையில் அறிக்கையிடுவதற்கும் உரிய அல்லது போதுமான மூலங்களைப் பயன்படுத்த சிறு முயற்சியே மேற் கொள்ளப்பட்டது. அல்லது எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த அறிக்கையிடலின் நேரடி விளைவாக, உண்மைகளும் சூழ்நிலையும் தவறாக விபரிக்கப்பட்டன. மேலும் முரண்பாடு தீர்க்கப்படுவதற்கு பதிலாக உணர்வுகள் கிளறப்பட்டு நிலைமை மோசமாக்கப்பட்டது.

## முகாம் படுகொலை - திலக் ஜயரத்ன

சந்தேகத்திற்குரிய பயங்கரவாதிகளுக்குப் புணர்வாழ்வு அளிப்பதற்காக பிந்துனுவேவவில் அமைக்கப்பட்ட முகாம் ஒன்றிலே 2000 ஒக்டோபர் 25ல் இப் படுகொலைகள் இடம் பெற்றன. அதில் தங்கியிருந்த 24 பேர் கொல்லப்பட்டனர்.

ஒக்டோபர் 24, மாலையில் வழமையான கூட்டம் நடைபெற்றது. தமது விடுதலை தாமதிக்கப்பட்டு வருகின்ற காரணத்தினால் ஆத்திரம் கொண்ட சில தடுத்து வைக்கப்பட்டோர் இக் கூட்டம் நடைபெறும் போது கோபாவேசத்துடன் நடந்து கொண்டனர். மாலை நேரம் கடந்ததும் அவர்கள் களஞ்சிய சாலையினுள்ளும், பிறகு பொலிஸ் சோதனைச் சாவடியினுள்ளும் பலவந்தமாக நுழைந்து கட்டிடத்தை இரும்புக் கம்பிகளாலும் ஏனைய ஆயுதங்களாலும் தாக்கி சேதப்படுத்தினர்.

மறுநாள் காலையில் முகாமிற்கு வெளியே கிராமத்தவர்கள் 700 பேர் கூடினார்கள். பொலிசார் பார்த்துக் கொண்டிருந்தும் அக் குழுவினர்கள் இரும்புக் கம்பிகள், வாள்கள், கோடாரிகள் போன்ற ஆயுதங்களுடன் கோபத்துடன் காணப்பட்டனர். பொலிசாரின் வேண்டுகோள்களை அலட்சியம் செய்த குழு, முகாமிற்குள் நுழைந்து தங்கியிருந்தவர்களில் 24 பேரைக் கொலை செய்து, கொலை செய்யப்பட்ட உடல்களை தூங்கும் மண்டபத்தினுள் வீசி அதற்குத் தீவைத்தது.

ஒன்றரை மாதங்களின் பின்பு, அதாவது டிசம்பர் 5ம் திகதி, உண்மையிலேயே என்ன நடந்தது என்பது பற்றிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மதிப்பீட்டு அறிக்கையை லங்காதீப பிரசுரித்தது :

"எங்களுக்குக் கிடைத்த அனைத்துத் தகவல்களில் இருந்தும் தெரிய வருவது என்னவெனில், சம்பவம் நடந்த போது அங்கே இருந்த 60 பொலிசாரும், அந்த வன்முறைச் செயற்பாட்டினைத் தடுக்க முன்வரத் தவறியமை காரணமாக அவர்கள் கடமையில் இருந்தும் தவறிய குற்றத்திற்கு ஆளாகுகின்றனர். அங்கே கூடிய கும்பலிடம் வெடி ஆயுதங்கள் இருக்கவில்லை. பூரணமாக ஆயுதம் தரித்திருந்த பொலிசார் அக்கும்பலைக் கட்டுப்படுத்தத் தவறியதோடு மட்டுமல்லாது, அக் கும்பலுக்குத் தலைமை தாங்கியவர்களைக் கைது செய்யவும் தவறியுள்ளனர்."

எவ்வாறாயினும், இந்த அட்டூழியம் நடந்த மறுநாள் பத்திரிகைகளில் வெளிவந்த தலைப்புச் செய்திகளும், செய்திகளும், ஆசிரியத் தலையங்கங்களும் மிகவும் வித்தியாசமான செய்தியையே தாங்கியிருந்தன.

"கிராமத்தவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சண்டையினால் 25 பேர் மரணம்" (டெய்லி நியூஸ்)

"25 புலிச் சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர், 18 பேருக்குக் காயம்" (ஐலண்ட்)

"பிந்துனுவெவ புணர்வாழ்வு முகாம் மீதான தாக்குதலில் 25 பேர் மரணம். புலிச் சந்தேக நபர்கள் முகாமுக்குப் பொறுப்பானவரை பணயம் வைத்துள்ளனர்." (லங்காதீப)

"கிராமத்தவர்களுடனான சண்டையில் புலிச் சந்தேக நபர்கள் கொல்லப்பட்டனர்" (லக்பிம)

முன்னணி ஆங்கில மற்றும் சிங்கள செய்திப்பத்திரிகைகளில் வெளிந்த விடயங்கள் பரிசீலிக்கப்படாதவையாகும். சம்பவத்தை நேரிலே அப்படியேயே அறிக்கையிடுவதை விட்டு அது உண்மைகளின் சுயாதீனத்தையும், உயிரையும் எடுத்து விட்டிருக்கின்றது. ஊடகமானது அதன் சொந்த நாயகர்களையும், வில்லன்களையும் உருவாக்கியிருக்கின்றது. எல்ரிரிஈ என்று தடுத்து வைக்கப்பட்டவர்கள், எல்ரிரிஈ பயங்கரவாதிகள், தமிழ் பயங்கரவாதிகளைத் தமது வில்லன்களாகவும், கிராமத்தவர்களை நாயகர்களாகவும் அது வரித்துக் கொண்டு விட்டது.

சம்பவத்தைச் சனாதிபதி கண்டித்தும் கூட, தடுத்து வைக்கப்பட்டவர்கள் முகாமில் இருக்கையில் பயங்கரமான ஆயுதங்களைத் தயாரித்து வந்தார்கள், மேலும் கிராம மக்கள் புணர்வாழ்வு முகாம் அதிகாரிகளைப் பாதுகாக்கவே வந்தார்கள் போன்ற கற்பனைகளைக் கூறுவது தொடர்ந்தும் அதிகரித்தே வந்தது.

தடுத்து வைக்கப்பட்டவர்களைக் கிராமத்தவர்கள் கொன்று விட்டனர் என்பதைக் கூறுவதற்கு ஊடகங்கள் தவறி விட்டன. அதற்குப் பதிலாக எல்ரிரிஈ ஆதரவாளர்கள் தமக்குள்ளே சண்டையிட்டு இறந்து விட்டனர் என்கின்ற கருத்தை அவை படிய வைத்துள்ளன.

பயன்படுத்தப்பட்டுள்ள மொழி இனரீதியில் மாறா நிலைக் கருத்துக்களை வலுப்படுத்தியுள்ளது. கிராமத்தவர்கள், இராணுவம், பொலிஸ், மற்றும் முகாம் அதிகாரிகள் போன்றோர் எல்ரிரிஈ சாராத, அமைதியான, நிராயுத பாணியான ஒழுக்கம் மிக்க, விசுவாசமிக்க, கீழ்ப்படிவுமிக்க, நல்ல, உறுதியான, நாகரிகமான மற்றும் நாயகப் பண்புமிக்க மனிதர்களாகச் சித்தரிக்கப் பட்டுள்ளனர். மேலும் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களோ எல்ரிரிஈயினர், பங்கரவாதிகள், வன்முறைமிக்கவர்கள், ஆயுத பாணிகள், ஒழுக்கமற்றவர்கள், கிளர்ச்சிமிக்கவர்கள், சதித்திட்டம் தீட்டுபவர்கள், கீழ்ப்படிவற்றவர்கள், கோரமானவர்கள், மோசமானவர்கள், மலினமானவர்கள் மற்றும் வில்லத்தனமானவர்கள் என்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

டெய்லி நியூஸ் பத்திரிகையைத் தவிர, ஏனைய அனைத்துப் பத்திரிகைகளும் புனையப்பட்ட பொய்களைக் கூட்டியும், குறைத்தும் வழங்கியிருந்தன. மிகவும் மோசமாகத் திரிபுபடுத்தப்பட்ட தகவல் ஆங்கிலத் தினசரியான 'த ஐலண்டினால்' வெளியிடப்பட்டிருந்தது. அம் முரண்பாட்டிற்கான காரணம் முகாமில் இருந்த படைவீரர் ஒருவரைப் புலிப் பயங்கரவாதிகள் தாக்கிக் கொன்றமையே என்று அது அதன் தலைப்புச் செய்தியை வெளியிட்டிருந்தது. முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களோ யாரையும் கொல்லவில்லை.

சம்பவத்தைப் பற்றிய ஆசிரியத் தலையங்கங்களும் பதிற் செயற்பாடுகளின்பொதுவான தன்மையிலேயே அமைந்திருந்தன. பிந்துனுவெவ சம்பவத்திற்குக் காரணம் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் எதிர்ப்பும் அவர்களின் தவறான வழிகாட்டுதலைக் கொண்ட நடத்தையுமே, இச் சம்பவத்திற்குப் பின்னணியில் எல்ரிரிஈ அமைப்பு இருக்கின்றது, அவர்கள் படுகொலை செய்யப்படுவதற்குக் காரணம் அவர்களின் தேவையற்றதும் கட்டுக்கடங்காத நடத்தையுமே என்கின்ற கருத்தினை ஆசிரியத் தலையங்கங்கள் வலுப்படுத்தியிருந்தன. அதாவது தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு இது நடக்க வேண்டியது தான் என்பது போன்ற கருத்தே முன்வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் நடந்து ஐந்து நாட்களின் பின், அதாவது 2000 ஒக்டோபர் 30இல் சகல செய்திப் பத்திரிகைகளும் எல்ரிரியைக் குற்றம் சுமத்தியிருந்தன.

"பிந்துனுவெவ கிளர்ச்சி புலிகளின் திட்டம்" (திவயின 30.10.2000)

"பிந்துனுவெவ படுகொலை பற்றி எல்ரிரிஈ பெருமிதம்" (லக்பிம 30.10.2000)

பிந்துனுவெவ சம்பவத்தின் ஊடக உள்ளடக்கமானது, பிராந்தியத்திலுள்ள பல்வேறு சமூகங்கள் ஒன்றோடொன்று பகைமை கொண்டுள்ளன. மேலும் அக்குழுமங்களின் சாதாரண உறுப்பினர்கள் தமக்கிடையில் வாக்குவாதம் தீர்க்கப்படும் வரை சண்டையிட்டே ஆக வேண்டும் போன்ற எண்ணங்களை வலுப்படுத்தியுள்ளன.

இச் சம்பவத்தை அறிக்கையிட்டதன் நேரடி விளைவாக, பிராந்தியத்தில் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன், எரியூட்டலும், ஆட்கொலைகளும் இடம் பெற்றுள்ளன.

# இலங்கையில் ஸ்திரமின்மை – முரண்பாட்டின் பின்புலம்

பி. சரவணமுத்து - நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

அரச பாதுகாப்புப் படைகளுக்கும், முதன்மைத் தமிழ் கெரில்லாக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இலங்கையின் வட- கிழக்கில் 1990 ஜுன் 11 இல் சண்டை உருவாகியமையானது மன அதிர்ச்சி வடு உருவாகுவதை கட்டுப்படுத்த முடியாத நாட்டு மக்களினதும், அரசினதும் நிலையையே கோடிட்டுக் காட்டுகின்றது. பிரிந்து செல்லுதலுக்கும், புரட்சிக்குமான அச்சுறுத்தல்களும் அதே போலவே வலிமை மிக்க பிராந்திய சக்தியான இந்தியாவின் புறநிலைத் தலையீடுகளும் இதிலே இருந்து வந்திருக்கின்றன. சிறுபான்மைத் தமிழர்களால், பெரும்பான்மைச் சிங்களவரின் ஆதிக்கம் கொண்ட அரசிற்கு எதிராக 1983இல் பிரிவினை வாத யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பும், ஆரம்பிக்கப்பட்ட பின்பும் இரு சமூகங்களுக்கும் உள்ளே உள்நிலைக் கிளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. அத்துடன் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இரண்டு ஆயுதக் கிளர்ச்சிகள் சிங்களத் தேசியவாத மக்கள் விடுதலை முன்னணியினால் (ஜேவிபி) மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (1971, 1987 -9) இதற்கு மேலாக, தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், மேலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததற்கும், எட்டப்பட முடியாததற்கும் இடையில் மத்திய களத்தினை வரையறை செய்வதற்கு இந்திய இலங்கை ஒப்பந்தமும், இலங்கை அமைதிகாக்கும் படையின் அமர்த்துகையும் இடம் பெற்றிருக்கின்றன. எவ்வாறாயினும், இலங்கையினுள்ளே தேசிய கருத்தொருமைப்பாடு எட்டப்படவில்லை.

சுதந்திர இலங்கையிலே சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையிலான பதற்றமானது, 1931ம் ஆண்டு இலங்கைக்கு சர்வதேச வளர்ந்தோர் வாக்குரிமை வழங்கப்பட்ட போது ஏற்பட்டதை நாம் வரலாற்றில் பார்க்கக் கூடியதாக உள்ளது. பணித்துறையில் தமிழர்களுக்கு இருக்கின்ற ஒப்பீட்டளவிலான நன்மைகளைக் கொண்ட பதவிகள் (கல்வியின் தேர்ச்சிப் பேறுகள் மற்றும் காலனித்துவ கொள்கைகள் என்பவற்றினூடாக அடைந்தவை) பெரும்பான்மைச் சிங்கள ஆட்சியினால் ஈடு செய்ய முடியாத அளவிற்கு அழிக்கப்பட்டு விடும் என்பதே அவர்களுக்கு இருந்து வருகின்ற அச்சமாகும். பதிலுக்குச் சிங்களவர்கள் தமது பெரும்பான்மை அந்தஸ்தினைப் பிரதிபலிப்பதற்காக வேண்டி இச் சமனிலையின்மைக்குப் பரிகாரம் காண ஆர்வம் கொண்டவர்களாக இருந்து வருவதுடன், தென் இந்தியாவுடன் தமிழர்களுக்கு உள்ள தொடர்புக்கு மாற்றமாக இலங்கையின் கலாச்சார மற்றும் சமயத் தனித்துவங்களுக்கு உரிமை கோருபவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

1948ல் இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்பாக, இன அடிப்படையில் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத் தேர்தல் தொகுதிகளுக்கான தமிழர்களின் வேண்டுகோள் மூலமாக அவர்களின் அவாக்கள் வெளிப்படுத்தப்பட்டன. இது வழங்கப்படாவிட்டாலும் கூட, தேர்தலில் அதிகமான வாக்குகளைப் பெறுவோர் தெரிவு செய்யப்படுகின்ற வெஸ்ற் மினிஸ்ரர் பாணியிலான தேர்தல் முறையானது இன அடிப்படையில் துருவமயமாதலுக்கு இட்டுச் செல்லும் என்பதைச் சனத்தொகைப் பரம்பல் உறுதிப்படுத்தியது. அதாவது, பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் தெற்கிலே ஆதிக்கம் செலுத்தவும் அவர்களின் சிறுபான்மைத் தமிழ் எதிரிணையானது வடக்கிலே ஆதிக்கம் செலுத்தவும் நிலைமை ஏற்படும். மத்தியிலே தாம் ஓரங்கட்டப்பட்டு விடுவோம் என்கின்ற தமிழர்களின் அச்சமானது அரசாங்கத்திலே சிங்களவர்களே பெரும்பான்மை எனும் கட்டாய நிலை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், சுதந்திரத்திற்குப் பின்பு தமிழ் தலைவர்கள் தாமே பாராளுமன்றச் செயன்முறைக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டார்கள். இந்த உபாயமானது சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவதையும் பங்களிப்பு நல்குவதையும் பரிமாறிக் கொண்டது. மேலும் அது பாராளுமன்ற சனநாயகம் பற்றிய சமூகங்களுக்கிடையிலான மேட்டுக் குடியினரின் கருத்தொருமிப்பின் வலிமையையும், நாட்டின் சுதந்திர இயக்கங்களின் அரசியலமைப்புவாத பண்பாண்மையின் வலிமையும் உறுதிப்படுத்தியது. ஆனால் அரசியல் இடமளிப்புகள் கோட்பாடுகளிலே எழுதப்பட்டிருந்தாலும், நடைமுறையிலே அவை அரசாங்கக் கொள்கைகளால் எடுத்துக் காட்டப்படவில்லை. பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும், இக் கருத்தொருமிப்புக்கள் அவை இறுதியில் 1970களில் சீர்குலைந்து போகும் வரையிலும் நின்று நிலைத்தன என்று தான் கூற வேண்டும்.

அரசியல் இடமளிப்புக்களையும் பாராளுமன்றச் சனநாயகத்தையும் சமூகப் பதற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சட்டகமாக ஏற்றுக் கொண்டதை மேட்டிமைகட்கிடையிலான போட்டிகள் கீழறுத்தன. அவை இனக் குழுமங்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியலைக் கட்சி நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டன. இனக்குழுமங்களின் நலன் பேணும் அரசியற் கொள்கையுடன் தெளிவாக அடையாளம் காணப்படல் தேர்தல் வெற்றிக்கு இன்றியமையாதது என நோக்கப்பட ஆரம்பித்தது. இதன் விளைவாக அடையாளத்தின் பழமையானதும், பிரிக்கின்றதுமான அடிப்படையை அரசியல் அதிகாரத்தின் இறுதியான மூலமாக அங்கீகரிக்கின்ற நிலைமை உருவானது. அத்துடன் அவற்றினை ஒரு நிலையான தேசிய அடையாளத்திற்குள் ஒன்றாக்க முடியாத மேட்டுக் குடியினரின் இசைவின் இயலாமையும் அதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. 1956ம் ஆண்டின் தேர்தலின் முக்கியத்துவம் இங்கே காணப்படுகின்றது. இத் தேர்தலிலே இலங்கை சுதந்திரக் கட்சியின் (எஸ்.எல்.எப்.பி) ஸ்தாபகரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தலைமையிலான சிங்களக் குடிப் பொதுமைக் கட்சியின் மத்திய - இடதுசாரி முன்னணி தெற்கிலே வெற்றி பெற்றது. தமிழ் மக்கள் வாழும் வடக்கில் இத் தேர்தலில் சமஷ்டிக் கட்சி வெற்றி பெற்றது. இரு சமூகங்களுக்கும் இடையிலான அரசியலமைப்பு ரீதியிலான ஏற்பாடுகளை ஆதரிப்பது அதன் தலைப்புப் பெயரிலே உள்ளடங்கியிருக்கின்றது. ஆட்சியிலே இருக்கையிலே, 1956ல், பண்டாரநாயக்க சிங்கள மொழியை அரச கரும மொழியாக்கித் தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றியதன் மூலம் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புத் தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு இருந்த அச்ச நெருப்புக்கு எண்ணெய் வார்த்தார். பண்டாரநாயக்காவை ஆட்சியில் ஏற்றி வைத்த சிங்கள பௌத்த கூட்டமைப்பு இன சௌஜன்யத்திற்குத் தீங்கு விளைவிக்கின்ற மேலதிக நிலைப்பாடுகளை எடுக்குமாறு அவரைப் பலவந்தப்படுத்திய போது, அவர்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் அவரிடம் இல்லாமற் போனமை அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியது. இந்த மொழிக் கொள்கை தமிழ் மக்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தினை சீராக்குவதற்காக அவர்களின் மொழியினைப் பயன்படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளை வழங்க அவர் எடுத்த முயற்சிகள், மற்றும் சமஷ்டிக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துடனான ஒப்பந்தத்தின் பேரில் பிராந்திய சபைகளுக்கு அதிகாரத்தைப் பரவலாக்க அவர் எடுத்த முயற்சிகள் யாவுமே சிங்கள அரசியல் ஆதரவுக் குழுமங்களின் பேரின வாதத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் சந்தர்ப்பவாத அரசியல் எதிர்ப்பினாலும் தடுக்கப்பட்டன. இதன் பின்விளைவாக, சுதந்திர இலங்கையிலே முதற் தடவையாக வன்முறை மிகு சிங்களத் - தமிழ் கலவரங்கள் 1956லும், 1958லும் வெடித்தன. 1983ன் படுகொலைகளினால் மாத்திரமே அவற்றின் தீவிரங்கள் அதிகரித்தன.

அடுத்து வந்த தசாப்தம் முழுவதுமே இதன் பின் விளைவாக ஏற்பட்ட இன உறவுகளின் விரிசல்கள் பாராளுமன்றத்தின் நீடித்த கருத்தொருமிப்புக்களின் உள்ளுரம் காரணமாகக் குறைக்கப்பட்டன. பண்டாரநாயக்கவின் விதவை மனைவியான, திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் முதலாவது அரசாங்கம் (1960-64) அரச கரும, மொழிக் கொள்கையைத் தீவிரமாக அமுல்படுத்தி, பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்திலே கூறப்பட்டிருந்த அதிகாரப் பரவலாக்கல் முன்மொழிவுகளை மீள் அறிமுகப்படுத்துவோம் என்கின்ற தமது வாக்குறுதியை மீறிய போதிலும், தமிழ்த் தலைமைத்துவமானது தொடர்ந்தும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் நடைமுறையைக் கை கொண்டு வந்தது. இவற்றினைப் பொறுத்த அளவிலே யுஎன்பி அளித்த ஒப்பந்தத்திலான வாக்குறுதிகளின் அடிப்படையிலே, சமஷ்டிக் கட்சியானது யுஎன்பி பெரும்பான்மையாக இருந்த 1956ம் ஆண்டின் தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொண்டது. தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கான சட்டவாக்கம் நிறைவேற்றப்பட்ட அதேவேளை, அதிகாரப் பரவலாக்கத்திற்கான சட்டவாக்கம் நிறைவேற்றப்படாமையினால் 1969ன் நடுப்பகுதியில் சமஷ்டிக் கட்சியானது அரசாங்கத்தில் இருந்து வெளியேறியது.

1970 கள் ஒரு முக்கியமான கால கட்டமாகும். அக் காலகட்டத்திலே தான் SLFPயும், UNPயும் பாராளுமன்றத்திலே அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றன. அவர்களின் சொந்த அரசியலமைப்புக்களைத் தயாரிப்பதற்கு இது வழிகோலியது. இந்த இரண்டு அரசியலமைப்புக்களுமே ஒற்றையாட்சி தொடர்பான ஏற்பாடுகளைத் தம்மகத்தே கொண்டிருந்தன. சிங்களத்தை அரச கரும மொழி என்றும் பௌத்தத்தை பெரும்பான்மையானோரின் மதம் என்றும், முதன்மை ஸ்தானத்தை அம்மதமே பெறுகின்றது என்றும் கூறி நின்றன.

1978ல் உருவாக்கப்பட்ட UNPயின் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை உருவாக்கியதன் மூலம் மையத்திலே அதிகாரத்தை இன்றும் உறுதியாக்கிக் கொண்டது.

UNP/ SLFP யின் பூச்சியக் கூட்டுத் தொகை அதிகாரத் தொடர்பை ஊட்டி வளர்த்த இனப் பதற்றத்தின் பரிமாணங்கள் மற்றும் அரசியல் உடன்பாடுகளின் ஏமாற்றமிகு முயற்சிகள் என்பவற்றினால் அரசியல் சந்தர்ப்பவாதம் எழுகின்ற காரணத்தினாலே ஆயுதம் ஏந்திய இளைஞர் போராட்டம் இடம் பெற்றது. 1971இல் நடைபெற்ற முதலாவது ஜேவிபி கிளர்ச்சி ஒரு முக்கியமான நிகழ்வாகும். அதேபோலவே தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஆயுதப் போராட்டக் குழுக்கள் உருவாகியமை, அரசியல் முன்னெடுப்புக்கள் மற்றும் தலைமைத்துவம் என்பன நிலைபெற்ற அரசியல் கட்சிகளிடமிருந்து நகர்ந்து போனதை நமக்குக் காட்டுகின்றது. SLFP அரசாங்கத்தினால் கொண்டு வரப்பட்ட (1070-77) பாரபட்சமிக்க அரசியற் கொள்கைகள் மற்றும் அவர்களைத் தொடர்ந்து வந்த UNP யின் (1977-88) பயங்கரவாத எதிர்ப்பு பிரச்சாரங்கள் போன்றன குறிப்பாக வடக்குக் கிழக்கில் இளைஞர் போராட்டம் இலங்கை அரசுடனான முழு அளவிலான ஆயுத மோதலாக 1980களில் உருமாற்றம் பெற்றதை உறுதிப்படுத்தின.

அரசியல் இடமளிப்புகள் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து, தமிழ் அரசியல் பிரதிநிதித்துவம் 1976ல் இடம்பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தில் பிரிந்து போவதே இறுதியான வழி என்ற தீர்மானத்திற்கு வந்தது.

# இணைக்கும் கட்டுக்கள் – எமது இனத்துவச் சட்டகம்

பத்திரிகையாளர்கள் என்கின்ற ரீதியில் நாம் ஒவ்வொரு நாளும் நெறிசார் தீர்மானங்களை எடுக்கின்றோம். ஆனால் முரண்பாட்டு நேரங்களிலே எமது ஒழுக்கக் கோவை வழங்குகின்ற பாதுகாப்பானது இன்றியமையாததாகும். ஏனெனில் சூழ்நிலையானது அவ்வாறான சந்தர்ப்பங்களில் தெளிவாக இருப்பதில்லை. மேலும் பல்வேறு பக்கங்களும் வழமையாகத் தமது சொந்தத் திட்டங்களை முன்னே நகர்த்துவதிலேயே கடின ஆர்வம் கொண்டுள்ளன.

பத்திரிகையாளர்கள் சுயாதீனமாகப் பணியாற்ற வேண்டி இருப்பதுடன், தலைப்புச் செய்தி, நேர்காணுகின்ற மக்கள், படிமங்களைத் தெரிவு செய்தல், மேற்கோள்கள் மற்றும் பயன்படுத்தும் மொழி முதற் கொண்டு நாம் எந்தச் செய்தியை உள்ளடக்குகின்றோம், ஏன் உள்ளடக்குகின்றோம் என்பவற்றின் அடிப்படைத் தீர்மானங்கள் வரை தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

யாரின் நடைமுறையும், இலக்குகளும் தொழிலுக்கும், சமூகத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்துபவையாக இருக்கின்றதோ அவற்றினை ஒழுக்கக் கோவை, சிறந்த நடைமுறை மற்றும் சுய ஒழுங்குகளின் ஏனைய வழிகள் மூலம் வெளிப்படுத்துவது எமது பத்திரிகைத் துறைச் சகபாடிகளின் பணியாகும்.

**முரண்பாட்டு நேரத்திலே அறிக்கையிடுவதற்கு பத்திரிகையாளர்களுக்கு ஏன் வழிகாட்டுதல்கள் தேவைப்படுகின்றன.**

- ஏனெனில் நாம் தன்னாதிக்கத்துடன் பணியாற்றுகின்றோம்
- செய்தி நிறுவனத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அழுத்தத்தை அல்லது செல்வாக்கைத் தவிர்த்துக் கொள்ள
- எனவே நாம் எமது பணியை செய்தியறையின் உள்ளேயும், சமூகத்தினுள்ளும் பாதுகாக்க முடியும்.
- நெறிசார் பிரச்சினைகளையும் இக்கட்டுகளையும் தீர்க்க உதவுவதற்கு

வெளியில் உள்ள சக்திகள் பத்திரிகையாளர்கள் எவ்வாறு அவர்களின் பணியினைச் செய்ய வேண்டும் என்று சொல்வதைப் பத்திரிகையாளர்கள் பொதுவாக எதிர்ப்பார்கள். இது எப்பொழுதும் இலகுவான ஒரு பணியல்ல.

பொதுவாகவே பாரிய அழுத்தமானது எமது சொந்த ஊடக நிறுவனத்தின் உள்ளேயிருந்து தான் வருகின்றது. அதாவது பத்திரிகையாளர்கள் அவர்களின் தொழில் சார் நடத்தைக் கோவைக்கு



பத்திக வீரசிங்ஹ

மாற்றமாக அறிவுறுத்தப்படலாம். அல்லது அவர்களின் பணியானது அவர்களின் இறைமையைப் பாதிக்கும் வகையில் மோசமான திருத்தியமைத்தலுக்கு உட்படலாம் என்பதே இதன் அர்த்தமாகும்.

சிறந்த வழிகாட்டுதல்கள் எதைச் செய்ய வேண்டும் எதைச் செய்யக் கூடாது என்பவைகளடங்கிய பட்டியல் அல்ல. அவை நெறிசார் விடயங்களுக்கு ஊடே சிந்திப்பதற்கான ஒரு சட்டகமாகும். இதனால் பத்திரிகையாளர்கள் அவர்கள் எதிர்நோக்குகின்ற முரண்பாடுகளை நம்பிக்கையுடன் அணுக முடியும்.

செய்தி விடயத்தினைத் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது திருத்தியமைத்தலின் போது சேர்க்கப்படும் திரிபுபடுத்தல்கள் போன்றவற்றுக்கு சவால் விடுப்பதற்கான ஒரு அடிப்படையைப் பத்திரிகையாளர்களுக்கு வழி காட்டுதல்கள் வழங்குகின்றன. அத்துடன் ஏனைய பத்திரிகையாளர்களின் பணியினை வழிகாட்டுபவர்களுக்கும் இது உதவுகின்றது.

இறுதியாக, வழிகாட்டுதல்கள் பொதுமக்களுக்கு எவ்வாறு பத்திரிகையாளர்கள் அவர்களது பணியினை அணுக வேண்டும் என்பது பற்றிய அறிவினை வழங்குகிறது. மேலும் பத்திரிகையாளர்கள் பொதுமக்கள் மத்தியில் தமது தீர்மானங்களைப் பாதுகாக்கவும் உதவுகின்றது.

## பத்திரிகையாளர்களின் நடத்தை பற்றிய கோட்பாடுகளின் IFJ பிரகடனம்

இச் சர்வதேச பிரகடனமானது சம்பவங்களை விபரிப்பதற்காக செய்தி மற்றும் தகவலைச் சேகரிப்பதிலும், ஒலிபரப்புவதிலும், பரப்புவதிலும், கருத்துக் கூறுவதிலும் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர்களுக்கான தொழில் சார் நடத்தை நியமம் என அறிவிக்கப்படுகின்றது.

1. பத்திரிகையாளரின் முதலாவது கடமை உண்மைக்கு மதிப்பளித்தலும், உண்மைக்கான பொது மக்களின் உரிமைக்கு மதிப்பளித்தலும் ஆகும்.
2. இக் கடமையை மேற் கொள்ளும், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பத்திரிகையாளர்கள் செய்திகளை நேர்மையாகச் சேகரிப்பது மற்றும் பிரசுரிப்பது மற்றும் நியாயமான கருத்து மற்றும் விமர்சனத்திற்கான உரிமை என்பவற்றில் சுதந்திரத்தின் கோட்பாடுகளைப் பாதுகாப்பர்.
3. பத்திரிகையாளர் தனக்கு மூலம் தெரிந்த உண்மைகளின் அடிப்படையிலே அறிக்கையிடுவார். பத்திரிகையாளர் தேவையான தகவலை மறைக்க மாட்டார் அல்லது ஆவணங்களை மாற்றி மோசடி செய்ய மாட்டார்.
4. பத்திரிகையாளர் செய்தி, புகைப்படங்கள் மற்றும் ஆவணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ள நியாயமான முறைகளை மட்டுமே பயன்படுத்துவார்.
5. ஏதாவது பிரசுரிக்கப்பட்ட தகவல் பாதிப்பு ஏற்படுத்தும் அளவிற்கு வழுவானது எனக் கண்டறியப்படுமிடத்து பத்திரிகையாளர் அதைத் திருத்துவதற்குத் தன்னால் இயன்றதைச் செய்வார்.
6. இரகசியமாகப் பெறப்பட்ட தகவல் மூலம் தொடர்பாகப் பத்திரிகையாளர் தொழில் சார் இரகசியத்தைப் பேணுவார்.
7. ஊடகத்தினால் மேம்படுத்தப்படுகின்ற பாகுபாட்டின் அபாயத்தினைப் பத்திரிகையாளர்கள் தெரிந்து கொண்டு, இனம், பால், பால்நிலை சார்ந்த நிலைப்பாடு, மொழி, சமயம், அரசியல் மற்றும் ஏனைய கருத்துக்கள் மற்றும் தேசிய அல்லது சமூக மூலங்கள் என்பவற்றின் அடிப்படையில் அவ்வாறான பாகுபாட்டினை மேற்கொள்வதை வசதிப்படுத்துவதனைத் தவிர்ப்பதற்குத் தன்னாலியன்றதைச் செய்ய வேண்டும்.
8. பின்வருவனவற்றைப் பத்திரிகையாளர்கள் பாரிய தொழில் சார் குற்றங்களாகக் கருதுவார்கள் : எழுத்துத் திருட்டு, கெடுநோக்கான திரிபுபடுத்தல்கள், அவதூறு, பழிதூற்றுரை, எழுத்து மூலமான குற்றத் தாக்குதல், கண்டு பிடிக்கப்படாத குற்றச்சாட்டுக்கள், பிரசுரிப்பதற்காக அல்லது பிரசுரிக்காமல் மறைப்பதற்காக எவ் வடிவத்திலும் பெறப்படும் இலஞ்சம்.
9. பத்திரிகையாளர் எனும் பெயருக்குத் தகுதியானவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளை விசுவாசமாக அனுசரித்து நடப்பது தமது கடமை எனக் கருதுவர். ஒவ்வொரு நாட்டினதும் பொதுவான நீதியினுள் பத்திரிகையாளர் தொழில் சார் விடயங்களில் சக பாடிகளின் நியாயாதிக்கத்தை மட்டுமே அங்கீகரிப்பர். இதிலே அரசாங்கங்களினது, அல்லது ஏனையவர்களது சகல விதமான இடையீடுகளும் தவிர்க்கப்படும்.

# வழுவின்மை, வதந்திகள் மற்றும் உண்மை சொல்லிகள்

ஊடகமானது பொது மக்களுக்கு நேர்மையான, வழுவற்ற மற்றும் நம்பக் கூடிய அறிக்கையிடலை, வேண்டுமென்றே தகவல்களைத் திரிபுபடுத்தாத, மூடி மறைக்காத அறிக்கையிடலை வழங்குவதற்கான நெறி சார்ந்த, அறம் சார்ந்த, தொழில் சார்ந்த கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. மக்கள் செய்தி ஊடகத்தை நம்பக் கூடியதாக இருப்பதும், அவர்கள் வாசிப்பதும் பார்ப்பதும் உண்மையானவை, நியாயமானவை, சமனிலையானவை என உணர்வதும் பத்திரிகைத் துறைக்கும், சனநாயகத்தின் உரிய செயற்பாட்டிற்கும் முக்கியமானதாகும்.

முரண்பாடுகள் பற்றி அறிக்கையிடுகின்ற பத்திரிகையாளர்கள் தெளிவாகவே எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினை தான், உண்மைகள் அடிக்கடி சூழ்ச்சித் திறத்துடன் பயன்படுத்தப்படும் வேளையில் அல்லது தணிக்கை செய்யப்படும் வேளையில், மேலும் பல்வேறு உண்மைகள் பணத்துக்காகப் போட்டி போடும் வேளையில் எவ்வாறு வழுவின்மையை நிச்சயப்படுத்துவது என்பது. வழுவான செய்திகளுக்கு மிகவும் பிரதான காரணமாய் இருப்பது நம்பிக்கையற்ற மூலங்கள் என்பதை ஆய்வு காட்டுகின்றது. இதிலே மிக மோசமான குற்றமிழைப்பவைகளாக அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன.

மொழித்தடை, மற்றும் ஏனைய மொழிக் குழுக்களிடமிருந்து வழுவற்ற தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமம் போன்றன வழுவின்றி அறிக்கையிடுவதற்கு உள்ள மற்றொரு தடை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கை பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக் குழுவின் அறிக்கையின் படி, அவர்களுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை மெய் நிகழ்ச்சி சார்ந்த வழுக்கள் தொடர்பானவையாகும்.

பின்வரும் சம்பவக் கற்கையானது பூரணமற்ற அறிக்கையிடலுக்கான உதாரணமாகும், இதிலே மெய் நிகழ்ச்சி சார்ந்த வழுக்கள் இருப்பதனால் இது உண்மையான சம்பவம் பற்றிய பிழையான ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றது.

பின்புலமான செய்தி அறிக்கைகள் முக்கியமானவையாக இருக்கும் அதேவேளை, செய்தி அறிக்கை என்பது ஒரு கருத்தினை மேம்படுத்த நாடுகின்ற ஆசிரியர் தலையங்கமோ, கருத்தோ, அல்லது ஆய்வுக் கட்டுரையோ அல்ல என்பதையிட்டுப் பத்திரிகையாளர்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

செய்தி அறிக்கைகள் அனைத்துப் பக்கங்களையும் பற்றி அறிக்கையிட முயற்சிக்க வேண்டும். ஒரு சம்பவத்தில் சிலதை விட்டு விடுவதோ அல்லது அதற்குச் சிலதைச் சேர்ப்பதோ தவறான திரிபு படுத்தலாகும். ஒரு பத்திரிகையாளர் செய்தியினைத் திரிபு படுத்தும் போது, விசேடமாக முரண்பாடு தொடர்பாக, நம்பிக்கை கீழறுக்கப்படுவதுடன் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படலாம்.

ஒரு அறிக்கையினைத் தவறு எனக் காணும் போது, பொது மக்களுடனான நம்பிக்கையைப் பேணுவதற்காக தவறினையும், சூழ்நிலையையும் விளக்குகின்ற ஒரு திருத்தம் வெளியிடப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் அதன் 1976ம் ஆண்டின் பொதுச் சபைத் தீர்மானமான, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தின் 20ம் உறுப்புரையின் கீழே 'வெறுப்பான உரை' என்பதனைப் பின்வருமாறு வரையறை செய்கின்றது.

"1' யுத்தத்திற்கான எந்தப் பிரச்சாரமும் சட்டத்தினால் தடை செய்யப்படலாம். 2. பாகுபாட்டினையும், பகைமையையும் அல்லது வன்முறையினையும் தூண்டுகின்ற தேசிய, இன அல்லது சமய வெறுப்பின் எந்தப் பரிந்து பேசுதலும் சட்டத்தினால் தடை செய்யப்படலாம்."

பத்திரிகையாளர்கள் கவனயீனமான அல்லது மலினமான அறிக்கையிடல் மூலம் இன வன்முறையினைத் தூண்டுவதற்காகத் தாம் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதைப் பொதுவாக ஏற்றுக் கொள்கின்றனர்.

## வழுவின்மை பரிசீலனைப் பட்டியல்

- நேரடியாகப் பெறப்படுகின்ற மூலம், பிறர்வழியாகப் பெறப்படுகின்ற மூலம் என்பவற்றிற்கிடையில் வித்தியாசப்படுத்துக.
- எப்பொழுதும் நற்பெயர் மிக்க மூலங்களையே பயன்படுத்தவும், சாத்தியப்படும் பொழுதெல்லாம் நேரடியான தகவல்களைப் பயன்படுத்தவும்.
- ஒரு பரந்த மூலங்களின் வலைப் பின்னலை எப்பொழுதும் பேணி வரவும், குறிப்பாக ஏனைய இன மொழிக் குழுமங்களின் விடயங்கள் அல்லது நிகழ்வுகள் பற்றி திறன் மிகுமுறையில் நேரடியான தகவல்களைத் தர அவர்கள் அழைக்கப்படலாம்.
- குற்றச் செயல்களைப் பற்றி அறிக்கையிடும் போது சந்தேக நபர்களின் பக்கத்தினையும் எடுக்க முயற்சிக்கவும்.
- மக்களின் பெயர்களும், இடங்களின் பெயர்களும் மிகச் சரியாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளதா என்பதை நிச்சயப்படுத்தவும்.
- ஏதாவது தவறுகள் விட்டிருந்தால் அதைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
- சரியென மெய்ப்பிப்பது கடினமாயிருக்கும் போது, இறப்புக்களின் எண்ணிக்கையைக் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

அரசியல்வாதிகள் சமூகத்தின் குறிப்பிட்ட பிரிவுகளையோ அல்லது குழுக்களையோ முரண்பாட்டினைச் சாத்தியமாக்கும் வகையில் வார்த்தைகளால் தாக்கும் போது, அது ஒரு இக்கட்டான சூழ் நிலையினை ஏற்படுத்துகின்றது.

பத்திரிகையாளர்கள் தமது பணியில் கூருணர்வு மிக்கவர்களாகவும், கவனம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஆனால் தமது முன்னுரிமையானது அறிக்கையிடுவதற்கே, அதாவது : சமூகத்திற்கு ஒரு உண்மை சொல்லியாக இருப்பதே என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். சுய தணிக்கையினைக் கடைப்பிடித்துக் கொண்டு அறிக்கையிடாமல் இருப்பதானது வதந்தி வளமாகப் பெருக அனுமதிக்கின்றது. இது ஒரு பத்திரிகையாளர் சூழமைவுடனும் பின்புலத்துடனும் வழுவின்றி அறிக்கையிடுவதை விட எப்பொழுதுமே அதிகம் ஆபத்தானதாகும்.

தொழிற் கடப்பாட்டிற்கும் அரசியற் கடப்பாட்டிற்கும் இடையிலான பதற்றமே இலங்கைப் பத்திரிகையாளர்கள் மத்தியில் காணப்படுகின்ற உயிரோட்டமான கலந்துரையாடல்களில் ஒன்றாக இருந்தது. மேலதிகமான பதற்றத்தைத் தூண்டக் கூடிய விடயங்களை எவ்வாறு அறிக்கையிடுவது அல்லது அவற்றினை அறிக்கையிட வேண்டுமா என்பது பற்றியும் பல்வகைமை மிகு கருத்துக்கள் காணப்பட்டன. சௌஜன்யத்தைப் பாதுகாப்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனச் சிலர் ஆலோசனை வழங்கினார்கள். அதேவேளை, அறிக்கையிடுவதற்கான மிக முக்கியமான பொறுப்பு இருக்கின்றது என ஏனையவர்கள் உணர்ந்தார்கள்.

தீர்மானமானது அறிக்கையிடுவதா அல்லது இல்லையா என்பதாக இருக்கவில்லை. மாறாக எவ்வாறு அறிக்கையிடுவது என்பதாக இருந்தது எனப் பலர் வாதிடுகின்றனர்.

## விடயங்களைத் தவறவிடல் / தவறான தகவல்களின் பாதிப்பினைக் கவனத்திற் கொள்ளுதல்

2004 ஜுன் மாதத்திலே, இரண்டு சிங்களச் செய்திப் பத்திரிகைகள், தொப்பிகல காடுகளிலே பிரபாகரனின் பிரிவினருக்கும், கருணா பிரிவினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 75 போராளிகள் இறந்து விட்டதாகவும், 100ற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் மாறுபடுகின்ற தரத்திலான போலிப் பரபரப்பு மிகு செய்திகளை வெளியிட்டன.

தலைப்புச் செய்திகளில் உள்ளடங்கியவை :

"கடந்த 3 நாட்களில் பிரபாகரனின் 80 போராளிகளும் கருணாவின் போராளிகளும் இறந்துள்ளனர். உக்கிரமான சண்டை கடந்த மாலை வரை தொடர்ந்தது"

"தொப்பிகலையைக் கைப்பற்றுவதற்காகப் பிரபா தரப்பிற்கும் கருணா தரப்பிற்கும் இடையில் கடும் சண்டை, அருள் ராஜாவின் முகாம் அழிக்கப்பட்டது. 75 பேர் சாவு, காயப்பட்டோர் 100 பேர்."

"தொப்பிகலையில் கருணாவின் உறுப்பினர்களுக்கும் பிரபாகரனின் உறுப்பினர்களுக்கும் இடையில் சண்டை உக்கிரமடைகின்றது. இரண்டு பக்கமும் சுமார் 100 பேர் இறப்பு."

ஒலிபரப்பப்பட்ட செய்தி ஒன்றும் 100ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அறிவித்தது

எவ்வாறாயினும் மறுநாள் ஏனைய சிங்களப் பத்திரிகைகள் ஒன்றில் சிறிய செய்திகளை வெளியிட்டிருந்தன. அல்லது கொழும்பில் அமைந்துள்ள தமிழ் பத்திரிகைகள் போல் எந்தச் செய்தியையும் வெளியிடவேயில்லை. ஒரு மோதல் இடம் பெற்றதாக இலங்கை இராணுவத் தளபதியோ அல்லது கிழக்கு இராணுவத் தளபதியோ அறிவிக்கவில்லை. மேலும் எல்ரிரிஈயின் செய்தி இணையத் தளமொன்று இச் செய்தி அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது என்று கூறியது. இறுதியில், ஒரு குண்டு வெடிப்பின் காரணமாக எட்டு எல்ரிரிஈ உறுப்பினர்கள் மட்டுமே கொல்லப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் அறிவித்த போது, உண்மை வெளிப்படையானது. அதாவது, வெளியிடப்பட்ட செய்திகள் செய்திப் பத்திரிகைகளினால் சிங்கள வாசகர்களுக்கென்றே புனையப்பட்டவை என்பது தெளிவானது.

அறிக்கைகளில் எந்த மூலமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எந்த ஊடகமும் தமது அறிக்கைகளைத் திருத்தவில்லை. இதில் உண்மையை வழங்குவதற்கான ஊடகத்தின் பொறுப்பு மட்டுமல்லாது, உண்மைகள் கூறப்படுவதற்கான பிரசைகளின் உரிமையும் விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான பத்திரிகைத் துறை நடைமுறைகள் வாசகர்களைக் குழப்புகின்றன, ஊடகத்திற்கும் பொது மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையை அழிக்கின்றன, மேலும் எதிர்கால அறிக்கைகளின் நம்பத்தக்க நிலை பற்றி அவர்களை வினா எழுப்பவும் செய்கின்றன.

## கண்களிற்கு தெரிவதற்கு மேலதிகமாக சில விடயங்கள்

சில உதாரணங்கள் மூலம் கலந்துரையாடப்பட்டுள்ளதாவது, வன்முறை அல்லது உண்மையான மோதல்கள் இரு தரப்பின் இனப்பிரிவுகளுடன் எவ்வித தொடர்புகளும் இல்லாத ஆனாலும் பொருளாதார விடயங்கள் அவற்றுக்கு காரணமாகும் என்பதாகும்.

இனப்பிரிவு தன்மைக்கு சம்பவங்களை கணக்கிடுதல் மூலம் பயங்கர விளைவுகள் ஏற்படக்கூடும். சூழல் மற்றும் பின்புலம் ஊடகவியலாளர்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டியது அதன் காரணத்தினாலே. இவை சமூகத்தினருக்கு தெரியாதவர்களுக்கு அரசியல் போலி சித்திரங்களுக்கு இலகுவாக அகப்படும்.

### சிறந்த நடைமுறை வினாக்கள்

1. ஒரு அரசியற் தலைவர் ஒரு சாதியினை அல்லது இனக் குழுமத்தை வழமையாகத் தாக்கிப் பேசுபவராக இருந்தால், அந்தப் பேச்சுக்கள் செய்திகளாகுமா?
2. அவ்வாறான பேச்சு அறிக்கையிடப்பட்டால், அப் பேச்சிலே அடங்கியுள்ள குற்றச்சாட்டுக்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றனவா? மற்றும் தாக்குதலுக்கு உள்ளாகும் மக்கள் அதை மறுப்பதற்கும், எதிர்த்துரைப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றதா?
3. உங்களது பத்திரிகை இன முரண்பாடு பற்றிய அறிக்கைகளை வெளியிடாமல் தடுத்து வைக்கின்றதா? அதிலே உண்மைகளும் சூழமைவும் வழங்கப்பட்டு அரசியல் நலன்களுக்காக இனத்துவம் என்கின்ற காய்களை நகர்த்துபவர்களை கேள்வி கேட்டால் அதனால் சிறப்பாக இதை அறிக்கையிட முடியுமா?
4. குற்றம் தொடர்பாகக் குற்றம் சுமத்தப்படுகின்ற மதமோ அல்லது இனமோ எப்பொழுதும் குறிப்பிடப்படுகின்றதா? அல்லது குறிப்பிடப்பட்ட இன அல்லது சமயக் குழுமங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமா குறிப்பிடப்படுகின்றார்கள். குற்றச் செயல்கள் தொடர்பாக அறிக்கையிடும் போது உமது பத்திரிகை நிறுவனம் ஏனையவற்றினை விட ஒரு இனக் குழுமத்தை அதிகமாகப் பெயரிடும் பழக்கத்தினைக் கொண்டுள்ளதா?
5. ஒரு செய்தி அதிக பரபரப்பானதாகவும் அதிகம் வாசிக்கப்படுவதாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக யதார்த்தமானது முரண்பாடு அல்லது வன்முறை குறைவானதாக இருந்த போதிலும் நீங்கள் எப்பொழுதாவது ஒரு இன அல்லது சிறுபான்மைக் குழுமத்தை இன்னொன்றிற்கு எதிராக உங்களது செய்திகளில் தூண்டி விடச் சதி செய்கின்றீர்களா?
6. ஒரு செய்தி அறிக்கை தவறானது என்று ஆகும் போது, அதைத் திருத்த உமது நிறுவனம் என்ன நடவடிக்கைகளை எடுக்கின்றது? திருத்தங்களை வெளியிடுவதில் உங்களது நிறுவனத்திற்கு ஒரு கொள்கை இருக்கின்றதா?
7. உங்களது செய்தி அறையில் பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் எவ்வாறு நீங்கள் இவ்வாறான இனத்துவ விடயங்களின் கலந்துரையாடலை ஆர்வப்படுத்தலாம்.

### சமநிலையான பரிசீலனைப் பட்டியல்

- ஒரு பக்கத்திற்கான களிப்பாரவாரத் தலைவராக வருவதைத் தவிர்க்கவும்
- பல்வேறு கருத்துக்களையும் நிலைநாட்டி, அவை மரியாதையாகவும் வழுவின்றியும் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துக
- இந்தக் கருத்துக்கள் நிலவுகின்ற சூழமைவினை மனதிற் கொள்க. சில கருத்துக்கள் கூடிய பெரும்பான்மையினரிடம் நிலவுகின்றதா?
- ஏனைய மக்களின் கருத்துக்களைப் பொழிப்புரை செய்வதை விட்டு, சாத்தியமான பொழுது அவற்றை நேரடியாக மேற்கோள் காட்டவும்
- செய்தியானது எழுதப்படும் போதே, அது இன, சமய, சாதிக் கூருணர்வுகளைப் பாதிக்குமா அல்லது மோசமாக்குமா என்பதை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்
- ஒரு தவறான சமநிலையை உருவாக்குவதையிட்டுக் கவனமாக இருக்கவும் - சமநிலை என்பது சகல தரப்பிற்கும் சமமான சிறப்பு என்பதாக அர்த்தப்படாது
- நீங்கள் உங்களுடைய இனக் குழுமத்திற்கு மட்டுமன்றி முழுச் சமூகத்திற்குமே அறிக்கையிடுகின்றீர்கள் என்பதை நினைவில் வைத்திருக்கவும்

### வார்த்தைகளைக் கவனமாகத் தெரிவு செய்தல்

#### சம்பவக் கற்கை

எவ்வாறு ஓரவஞ்சனையும் பக்கச்சார்பும் உண்மைகளுக்கு நஞ்சூட்டுகின்றன என்பதைப் பின்வரும் சம்பவக் கற்கை விளக்குகின்றது. வெளியீடு ஏனைய அனைத்திற்கும் மேலாக, இன விவகாரத்தை எழுப்பியது. இதன் மூலம் சமூகங்களுக்கு இடையில் பிளவும், குறை கூறலும் உருவாக்கப்பட்டது. உண்மைகளைச் சமனிலையாகப் பிரதிநிதித்துவப்படுத்த சூழமைவினையும் பின் புலத்தினையும் பயன்படுத்தாமல் விட்டதனாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது. இதன் இறுதி விளைவாக, நிலைமையை மேலும் மோசமாக்கக் கூடியதான வன்முறை அதிகரிப்பும் தேவையற்ற தளம்பல் சூழ்நிலையுமே ஏற்பட்டன.

கந்தப்பளையில் இனக் கலவரம் நடைபெற்ற போது பொலிசார் சுட்டதினால் இரண்டு தமிழ் ஊழியர்கள் இறந்த போது, சிங்களச் செய்திப் பத்திரிகையில் வெளிவந்த பிரதான செய்தி இவ்வாறான தலைப்பைத் தாங்கியிருந்தது : "வெடி கா நசிதி" - "தம்மைச் சுடச் செய்ததன் மூலம் கொல்லப்பட்டனர்" உக்கிரம் அடைந்த மோதலினால் எண்பது கடைகள் சூறையாடப்பட்டன, கந்தப்பளை நகரக் கடைகள் மூன்று நாட்கள் மூடப்பட்டிருந்தன. தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமான உறவு மோசமடைந்தது (தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் நகரத்தில்)

"வெடி கா நசிதி" - தம்மைச் சுடச் செய்ததன் மூலம் கொல்லப்பட்டனர்" எனும் சொற்றொடரினை வாசிக்கும் போது, சுடுவதற்கு அவர்கள் தூண்டியது போன்ற அர்த்தம் தொனிக்கின்றது. பதிலாக அச் சொற்றொடரினை இவ்வாறு அமைத்திருந்தால், "வெடி வதී நசிதி" - "சுடப்பட்டதனால் கொல்லப்பட்டனர்", அதன் அர்த்தமும் அனுமானமும் மிகவும் வித்தியாசமாக இருந்திருக்கும்.

கொலையைப் பற்றி உரிய முறையில் விசாரணை செய்ததன் பின், ஆசிரியர் முன் பக்கத் தலைப்புச் செய்தியினை இவ்வாறான சொற்றொடரில் அமைக்கத் தீர்மானித்தாரா? பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்களாக இருந்திருந்தால், ஆசிரியர் தலைப்பினை வித்தியாசமான சொற்றொடரில் அமைத்திருப்பாரா?

இன மோதல்களை அறிக்கையிடும் போது, அறிக்கையிடலானது சகல தரப்பினரையும் சமனிலையான முறையிலும் நியாயமாகவும் சித்தரித்துள்ளதா என்று பத்திரிகையாளர்கள் தம்மைத் தாமே எப்பாதும் கேட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்ய அவை தவறியிருந்தால், அவர்களின் அறிக்கையிடலானது மேலதிக வன்முறைக்கே அடிகோலும்.

கந்தப்பளைச் சம்பவம் பற்றி சிங்கள மற்றும் தமிழ் செய்திப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மிகவும் வித்தியாசமானவையாக இருந்தன.

52 கடைகள் சேதமாக்கப்பட்டதாகத் தமிழ் செய்திப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. தமிழ் சமூகத்திற்கு அதிகமான பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது என்பது அதன் மூலம் சுட்டப்பட்டது. கந்தப்பளைச் சம்பவங்களுக்கு, தமிழ் தோட்டத் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட கலவரத்தையே குற்றம் காண வேண்டும் என்பதைச் சுட்டுவதாகவே சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதற்கு மேலாக, மோதலைத் தூண்டியதாகச் சகல சிங்களச் செய்திப் பத்திரிகைளாலும் குற்றம் சாட்டப்பட்ட முச்சக்கர வண்டி - பஸ் விபத்து பூரணமாகவே மிகைப்படுத்தப்பட்ட செய்தி என்பது பின்னர் தெரிய வந்தது.

அறிந்து கொள்வதற்கான மக்களின் உரிமைக்கான கௌரவமும் உண்மையுமே ஊடகத்தின் பிரதான பொறுப்பு எனின், சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அறிக்கையிடப்பட்ட நிகழ்வு பற்றிய செய்திகளில் ஏன் அவ்வாறான வேறுபாடுகள் காணப்பட்டன.

### சூழமைவு விசாரணைப் பட்டியல் :

- முரண்பாட்டின் வரலாற்றினை ஆராயுங்கள்.
- வன்முறையின் தனிப்பட்ட செயல்கள் மீது கவனம் குவிப்பதைத் தவிர்க்கவும். மற்றும் பரந்த கருத்துப் பதிவைக் கொடுக்க முயற்சிக்கவும்.
- ஒவ்வொரு தரப்பும் எதை இழக்க அல்லது பெற வேண்டும் என்பதைப் பரிசீலிக்கவும்.
- பாதிக்கப்பட்ட பொது மக்களின் கண்ணோட்டத்தினை வழங்கவும்.

# இனப் பிளவு

ஒரு பிணக்கோ அல்லது வன்முறையோ இருக்கும் போது பத்திரிகையாளரின் தொழில் என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிக்கையிட்டு அதற்குரிய காரணத்தைக் கண்டறிவதேயாகும். அனைத்துப் பிணக்குகளுமே இனத்துவம் சார்ந்தது என ஊகிக்கக் கூடாது. இன முரண்பாடு நடைபெறும் பிரதேசங்களில் கூட இது உண்மையே.

2002 ஒக்டோபரில், யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச் சாத்திட்டு 8 மாதங்களின் பின், மிகப் பெரிய இனக் குழப்பங்கள் முஸ்லிம்கள் அதிகம் வாழுகின்ற அக்கரைப்பற்று, அம்பாறை மாவட்டங்களில் வெடித்தன. முஸ்லிம் குழுக்கள் வீதிகளை மறித்தன, டயர்கள் எரிக்கப்பட்டன, கடைகளை மூடும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டது. இதற்குக் காரணம் தமிழ் பத்திரிகைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதான செய்திப் பத்திரிகைகளிலும் அண்மையிற் காணாமற் போன ஒரு முஸ்லிம் இளைஞர் எல்ரிரிஈயினால் கடத்தப்பட்டுள்ளதாகவும், கப்பமாக 5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் வெளிவந்த செய்தியே ஆகும்.

ஊடகமானது உண்மைகளை ஒரு போதும் கேள்விக்கு உட்படுத்தவில்லை. நிலைமையானது கிட்டத்தட்ட பாரிய ஒழுங்கீனமாக மாறி விட்டிருந்தது. எல்ரிரிஈ இந்த அறிக்கைகளை மறுத்தது, இருப்பினும் ஊடகங்கள் தொடர்ந்தும் எல்ரிரிஈயின் கடத்தல் பற்றி அறிக்கை விட்டுக் கொண்டே இருந்தன. அது கலவரத்திற்கு எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தது.

இந்தச் சம்பவத்திலே உண்மைகளையோ அல்லது மூலங்களையோ சரிபார்க்காமல், ஊடகங்கள் இன முரண்பாட்டினை எரிய வைப்பதில் குறிப்பிட்ட பாத்திரத்தை வகித்திருக்கின்றன. அத்துடன், உண்மை வெளிப்பட்ட போது - ஊடகங்களின் விசாரணைகளினால் அல்லாமல், இளைஞர் உண்மையை ஒத்துக் கொண்டதால் தவறான கூற்றுக்களுக்கான மன்னிப்போ அல்லது வாபஸ் பெறலோ இடம் பெறவில்லை.

ஊடகங்கள் உண்மை கூறவேண்டிய தெளிவான பொறுப்பினைக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு செயற்படாதவிடத்து அது அதிகரித்த பதற்றத்தையும், வன்முறையையும், இனப் பழிவாங்கலையும் ஏற்படுத்தும் என்பதை ஞாபகமூட்டுகின்றவையாக இவ்வாறான சம்பவங்கள் அமைய வேண்டும்.

இன மோதல் வழமையானதாகவும், சந்தேகமும், அச்சமும் நிலவுகின்ற, இனரீதியாகப் பல்வகைப் பிராந்தியங்களைக் கொண்ட அம்பாறை மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு செயலமர்விலே பத்திரிகையாளர்கள் தமது பத்திரிகைத் துறையின் தாக்கத்தின் புரிதலின் முக்கியத்துவத்தினைப் பற்றி விவாதித்தார்கள். இந்தச் செய்தி எவ்வாறு சிறப்பான முறையில் அறிக்கையிடப்பட்டிருக்கலாம் என்பதைப் பற்றிப் பத்திரிகையாளர்கள் கலந்துரையாடினார்கள்.

அறிக்கையிடலானது ஆரம்பத்தில் இந்தச் செய்தியை இனப் பதற்றச் சட்டகத்தினுள் இட்டது. பத்திரிகையாளர்கள் முரண்பாட்டில் அறிக்கையிடுகின்ற செய்தியின் தெரிவினைக் கொண்டிருக்கின்றார்கள் என அவர்கள் புரிந்து கொண்டார்கள். - முரண்பாட்டின் செய்தி மற்றும் அதை **விஞ்சி** முற்படுகின்றவற்றின் செய்தி. தலைப்புச் செய்திகள் கொலைகளைப் பற்றியதாகவும் இருக்கலாம். அல்லது சமாதானத்தைப் பற்றியும் இருக்கலாம்.

## இனத்துவம் என்பது பகைமை என்று அர்த்தப்படாது

ஒரு சிறந்த பத்திரிகையாளர் கதைக்குப் பொருத்தமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் மட்டுமே இன மூலத்தினை அறிக்கையிடுவார்.

ஒரு அரசியல்வாதி அல்லது இன அரசியற் தலைவர் ஒரு பக்கக் கருத்தினை அல்லது கொள்கையை வலியுறுத்தும் போது பத்திரிகையாளர்கள் பிரக்ஞையுடன் இருக்க வேண்டும். அத்துடன் ஒரு சம்பவமானது உண்மையிலேயே செய்தி தானா அல்லது இனப் பதற்றத்தினை உருவாக்குவதற்கு யாரோ சிலர் ஊடகத்தினைப் பயன்படுத்த முயற்சிக்கின்றார்களா என்பதைப் பத்திரிகையாளர்கள் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

செய்தியானது மாறா நிலைக் கருத்திற்கு ஆதரவு வழங்குவது போல் தோன்றினால், பத்திரிகையாளர்கள் சிலரது இனக் குழுமத்தினைக் குறிப்பிட ஆர்வம் கொள்ளலாம். அவ்வாறு செய்யும் போது முஸ்லிம்களைச் சந்தேகத்திற்குரியவர்களாகவும், தமிழர்களைப் புலிகளாகவும், சிங்களவர்களைப் பேரினவாதிகளாகவும் கொண்ட எதிர்ச்சார்பினை அவர்கள் உருவாக்குகின்றார்கள்.

### சம்பவக் கற்கை : குற்றச் செயல்களும் இனத்துவமும்

ஒரு சிங்களச் செய்திப் பத்திரிகையின் மூன்றாம் பக்க செய்தித் தலைப்பு இவ்வாறு கூறுகின்றது :

" வீட்டு வேலைக்கெனக் கொண்டு வரப்பட்ட சிறுமி நான்கு வருடங்களாக காமுகர்களுக்கு விற்கப்பட்டார். - சந்தேகத்திற்குரிய முஸ்லிம் சோடி தடுப்புக் காவலில்."

சோடியின் சமயம் தலைப்புச் செய்தியில் குறிப்பிடப்பட்ட விடயமானது உடனடியாகவே இனச் சாய்வினைக் குறித்துக் காட்டுகின்றது. ஆனால் இந்தத் தவறான செயலுக்கும் இனத்துவத்திற்கும் இடையில் என்ன தொடர்பு இருக்கின்றது.

ஒரு குற்றச் செயலிலே சிறுபான்மை இனக் குழுமத்தைச் சேர்ந்த ஒருவர் சந்தேக நபராக இருந்தால், அக் குற்றச் செயலுடன் அந்த இனம் தொடர்புபட்டது எனும் அர்த்தத்தைக் கொடுப்பதே சிங்கள ஊடகங்களின் கலாச்சாரமாக இருந்து வருகின்றது.

பத்திரிகையாளர்கள் ஒரு போதும் இன, சாதி அவதூறுகளைப் பயன்படுத்தக் கூடாது. அவர்கள் பிரக்ஞையற்ற முறையில் இன, சமய அல்லது சாதி பற்றிய ஊகங்களை எடுத்துக் கொள்வது பற்றிக் கவனமாக இருக்க வேண்டும்.

பத்திரிகையாளர்கள் நிகழ்வுகளை அறிக்கையிடுவதில் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிப்பது அல்லது இனச் சமனிலை பிரிவினைவாத சக்திகளின் அச்சுறுத்தல்களின் கீழ் குழம்பி விடும் எனும் பயத்தினால் பத்திரிகை நிலைப்பாடுகளை எடுப்பது பற்றி கேள்வி கேட்ட போது, அதிகமான பத்திரிகையாளர்கள் தமது முதற் கடப்பாடு உண்மை சொல்வதற்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்கும் என்பதை ஏற்றுக் கொண்டார்கள்.

அரசியல்வாதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட இனக்குழுமத்திடம் இருந்து பெறப்படும் தொடர்ச்சியான ஆதரவு மட்டுமே நோக்கமாக இருக்கும் பொழுது, இனங்களின் நலன்கள் அச்சுறுத்தப்படுகின்றன என மக்களை நம்பவைப்பதற்காக ஊடகங்களைப் பயன்படுத்தத் தீர்மானிக்கும் பொழுது அவர்களினால் பயன்படுத்தப்படாமல் தாம் கவனமாக இருக்க வேண்டும் என அனைத்துப் பத்திரிகையாளர்களும் ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியிலே மிகவும் உயிரோட்டமுள்ள சில பத்திரிகையாளர் கலந்துரையாடல்களில் நெறிகள் பற்றியதும் இனத்துவத்தினை மாறாநிலைக் கருத்துப்படுத்துதலும் அடங்கியிருந்தது. அனைத்துப் பத்திரிகையாளர்களும் பின்பற்றக் கூடியதான ஒரு நெறிசார் கோவைக்கான தேவை பற்றிய தெளிவான புரிதல் அங்கே காணப்பட்டது.

### இனத்துவப் பரிசீலனைப் பட்டியல்

- ஒரு நபரின் இனம், மதம் அல்லது சாதி என்பவை பற்றி குறித்துரைப்பதை தவிர்த்துக் கொள்ளவும்.
- ஒரு நபரின் இனம், சாதி அல்லது மதம் பற்றி குறிப்பிடுவது அத்தியாவசியமானது எனின் வழுவின்மையை நிச்சயப்படுத்துவதற்காக அந்த நபரிடம் இத் தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- ஏனைய செய்தி மூலங்கள் தேவையற்ற விதத்திலே இனத்துவத்தை ஒரு காரணமாகக் கருதிச் செயற்படும் போது, உண்மையான காரணத்தினைப் பற்றி வாசகர்களுககு அறிவு புகட்டி இனத்துவம் ஒரு காரணி அல்லது என்பதை சுட்டிக் காட்டவும்.
- உங்களுடைய சொந்தப் பக்கச்சார்பு பற்றிய புரிதலானது இன்றியமையாததாகும். மேலும் செய்தி அறிக்கைகளை தயாரிக்கும் பொழுது அல்லது தெரிவு செய்யும் பொழுது இவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
- புண்படுத்தலை ஏற்படுத்தக் கூடிய விபரிப்புக்களைத் தவிர்ப்பதற்கு படிமங்களைப் பயன்படுத்துவது ஒரு பயனுள்ள வழியாகும்.
- மூலங்களிடம் நீங்கள் எவ்வாறு அவர்களை விபரிக்க வேண்டும் எனக் கேளுங்கள். - உதாரணமாக அவர்களின் சாதி, சமயம் மற்றும் இனத்துவம் என்பவற்றின் அடிப்படையில்

# அனைத்துத் துறைகளையும் உள்ளடக்குவது

பதற்றத்தைத் தணிப்பதற்குப் பத்திரிகையாளர்கள் பங்களிப்புச் செய்யக் கூடிய ஒரு வழி தான் உங்களது சமூகத்திற்கு முக்கியமான செய்திகளைச் சொல்வதாகும். சம்பவங்கள் அல்லது அறிவித்தல்கள் போன்றவற்றிற்கு சாதாரணமாக எதிர்வினையாற்றுவதை விட, பத்திரிகையாளர் வன்முறையின் ஸ்தானத்தை சென்றடைய முன் சமூகத்தின் அக்கறைகளை விசாரித்து அறிக்கையிட வேண்டும், செய்திகளைத் தேடி செய்தி அறையினை விட்டு வெளியேற வேண்டும்.

ஒரு சம்பவத்தை அல்லது கதையினைச் சொல்வதற்கு அசாதாரணமானதும் சுவாரஷ்யமானதுமான வழிகளைக் கண்டு பிடிப்பது, விடயத்திற்குள் அதிக மக்களைக் கொண்டு வந்து அவர்களை ஆக்கபூர்வமான விவாதத்தில் ஈடுபடுத்தும். கதைகளைச் சுவாரஷ்யமானதாக்குவது பத்திரிகையாளர்களின் ஒரு தொழில் சார்ந்த பொறுப்பாகும். அது அவர்கள் தமது வசதியான இடங்களை விட்டு வெளியேறி உள்நாட்டில் இடம் பெயர்ந்தோருடன் அல்லது வீடற்ற நபர்களுடன் எவ்வாறு சம்பவம் அல்லது விடயம் அவர்களைப் பாதித்துள்ளது என்பதைக் கண்டறிய ஒரு நாளைச் செலவழிப்பதைத் தேவைப்படுத்தும். இவை எல்லாவற்றையும் விட, அதிகம் கேட்கப்பட்டிருக்காத ஒரு குரலை அங்கீகரிக்கச் செய்வதற்காகவும் அவர்கள் செயற்பட வேண்டும்.

முரண்பாட்டில் ஈடுபட்டிருப்போரின் சமயம் அல்லது இனத்துவம் காரணமாக உங்களது ஊடக நிறுவனம் அவர்களை மாறா நிலைக் கருத்துக்குள் ஆக்க அல்லது முத்திரை குத்துவதற்கு முயற்சிக்கின்றது என நீங்கள் நினைக்கின்றீர்களா?

எமது சமூகத்திலுள்ள பல்வேறு குழுமங்களின் மாறா நிலைக் கருத்துப் படிமங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இவ்வகையான அறிக்கையிடல் பத்திரிகையாளர்களுக்கு வாய்ப்பினை வழங்குகின்றது.

எந்தவொரு சூழ்நிலையிலும், விசேடமாக, முரண்பாட்டு நேரங்களில் எல்லையற்ற எண்ணிக்கையிலான கதைகள் இருக்கும். வன்முறை பற்றிய சம்பவங்களினை அறிக்கையிடுவதில் உயர் முன்னுரிமையை வழங்குகின்ற செய்திப் பெறுமானத்தையும் அல்லது எவ்வாறு பெண்கள், சிறுவர்கள், மற்றும் குடும்பங்கள் வாழ்கின்றன மற்றும் இவற்றிற்கு முகம் கொடுக்கின்றன என்பது பற்றிய எமது சொந்த விசாரணைகளை விட அரசாங்கம் என்ன கூறுகின்றது என்பதைக் கேள்விக்கு உட்படுத்துவதன் மூலமும் பத்திரிகையாளர்கள் ஒரு சமாதானத் திட்டத்தினைப் பின் தொடர்ந்து செல்ல முடியம்.

சுனாமி அனர்த்தத்தின் போது, பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்வை மீள உருவாக்குகையில் கூறவேண்டிய எத்தனையோ கதைகள் முகாம்களிலும், சமூகங்களிலும் இருந்தன. எனினும் ஊடகங்களால் உள்ளடக்கப்பட்ட சுனாமி பற்றிய சம்பவங்களின் ஆராய்ச்சியானது, அதிகமான கதைகள் அரசாங்கத்தின் இடையீடுகள் என்றே காட்டுகின்றன.

எவ்வாறு சாதாரண மக்கள் வாழ்கின்றர்கள். மேலும் அவர்களின் வாழ்க்கை நிலைகளும் மனித உரிமைகளும் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றிய சென்றடையக் கூடியதும், உண்மையானதுமான அறிக்கையிடலினை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள ஊடகம் துணை புரிய வேண்டும்.

ஆனால் பத்திரிகையாளர்களை அரசியல் இலக்குகளுடனும் அரசாங்கத்தின் பக்கமும் இணைத்து அவர்களின் சுதந்திரத்தையும், காவல் நாய் ஆற்றலையும் விட்டுக் கொடுக்க முயற்சிக்கும். "அபிவிருத்தி சார்ந்த பத்திரிகைத் துறை"யினை மேம்படுத்துபவர்களிடமிருந்து நாம் பாதுகாப்புப் பெறுதல் வேண்டும். சுனாமியின் பின்பு, நிவாரண மற்றும் புணர்நிர்மான முயற்சிகள் பற்றிய விமர்சனத்தைக் கூற விடாமல் தடுக்க சிலர் முயற்சித்துள்ளனர்.

## ஊடகக் கண்காணிப்பு

### 'உத்தியோகபூர்வ' – சுனாமி செய்தி



ஸ்ரீயந்த வல்பொல

2004 சுனாமி தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் (CPA) சமர்பிக்கப்பட்ட அறிக்கையானது, எவ்வாறு அரச - கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் (SLRC) 2005 ஜனவரி 1-7 வரையிலான காலப்பகுதியில் அனர்த்தம் பற்றிய அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது என்பதைப் பரீட்சிக்கின்றது.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்பு, அரசாங்கமும் எதிர்க்கட்சியும் சுனாமியினால் ஏற்படுத்தப்பட்ட பரவலான சேதத்தினை நிவர்த்தி செய்ய இணைந்து செயற்பட வேண்டும் என்ற ஒரு பொதுவான கருத்தொருமிப்பினை CPA இலங்கையில் நிலைநாட்டியிருந்தது.

இந்த அறிக்கையானது சுனாமிக்குப் பின்பான பொதுவான உள்ளடக்கத்துடன் தொடர்புடைய 13 செய்தி வகைகளைக் கண்காணித்தது. இந்த வகைகளுள் தேசிய புணரமைப்பு, அரச தலையீடு, வெளிநாட்டு உதவி, சுனாமியினால் பாதிக்கப்பட்டோர், மீள் உருவாக்கத்தில் கூட்டுப் பங்கேற்பு, நிவாரண உதவியைப் பகிர்ந்தளித்தல் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர் என்பன உள்ளடங்குகின்றன

கண்காணிக்கப்பட்ட 13 வகைகளுள், அரச தலையீடு பற்றிய உள்ளடக்கம் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. இது சம்பந்தமாக 42 செய்திகள் 7 நாட்களுள் வெளியாகியிருந்தன. இதற்கு மிகவும் நெரக்கமாக, அடுத்தாக தேசிய புணர்நிர்மாணம் பற்றி 42 செய்திகளும் வெளிநாட்டு உதவி முயற்சிகளின் விபரம் பற்றி 32 செய்தி அறிக்கைகளும் வெளியாகியிருந்தன.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய செய்தி உள்ளடக்கமானது ஏழு நாட்களுள் 9 தடவைகள் வெளியிடப்பட்டிருந்தது. இக் காலகட்டத்தில் நிவாரண உதவிகளை பங்கிடுவது தொடர்பான அறிக்கைகள் 8 தடவையும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர் பற்றி வெறுமனே 6 தடவையுமே வெளியிடப்பட்டிருந்தன.

முக்கியமாக, கால அளவினைப் பொறுத்த அளவிலே, செய்தி அறிக்கைகளின் நிகழ்வு வீதத்திற்கும், ஒதுக்கப்பட்ட நேரத்தின் அளவிற்கும் இடையில் உயர்வான இடைத் தொடர்பு காணப்பட்டது. ஆய்ந்தறியப்பட்டவைகளில், தேசிய புனரமைப்பு பற்றி ஒரு வார காலத்தில் 46 நிமிட உள்ளடக்கமும், அதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றி 7 நிமிட உள்ளடக்கமும் காணப்பட்டது. சுனாமிக்குப் பின்பான செய்தி ஒளிபரப்புகளிலே, சுனாமி பற்றிய SLRC யின் உள்ளடக்கமானது சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது தேவைகளை வெளிப்படுத்தப் போதிய நேரம் ஒதுக்காமல், அரசாங்கத்தின் பெயரை உயர்த்தச் செயற்பட்டிருக்கின்றது என அறிக்கை முடிவு கூறுகின்றது. இன்னும், இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் பாரிய அழிவுகளும் நாசங்களும் ஏற்பட்டுள்ள போதிலும், SLRC இலங்கையின் தெற்குப் பகுதிகளுக்கு வழங்கிய உள்ளடக்கத்துடன் ஒப்பிடும் போது இப்பிரதேசங்களுக்குக் குறைவான உள்ளடக்கத்தையே வழங்கியிருந்தது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நாளாந்த வாழ்வின் மீது சுனாமி எவ்வழிகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதைச் செயற்திறன் மிகு முறையில் ஆராய்வதற்கு SLRC தவறி விட்டது என அறிக்கை சுட்டிக் காட்டுகின்றது.

மனிதக் காரணியில் கவனம் குவிப்பதானது, மக்களுக்காக விடயத்தினை சூழிசைவு சார்ந்ததாக ஆக்குவதற்கு இன்றியமையாத வழியாகும். அத்துடன் இதன் விளைவாக பொது மக்கள் நிவாரண முயற்சிகளுக்கு உதவியளிப்பதை ஊக்கப்படுத்துவதாகும்.

# பக்கச் சார்பினைக் கையாளுதல்

இலங்கையிலுள்ள பத்திரிகையாளர்கள் மத்தியில் அதிகம் நடைபெறும் கலந்துரையாடல்கள், சுதந்திரமான பத்திரிகைத் துறைக்கான தேவை, மற்றும் பத்திரிகையாளர்கள் அவர்களின் இனக் குழுமத்தில் அல்லது "தேசியப் போராட்டத்தில்" பற்றுறுதி கொண்டிருப்பது பற்றியதாக அமைந்திருந்தது. பத்திரிகையாளர்கள் தாம் அறிக்கையிடுகின்ற சமூகங்கள் மற்றும் குழுக்களுடனான தமது நெருக்கம் பற்றியும் அதன் தொழில் சார்ந்த மற்றும் நெறி சார்ந்த சவால்கள் பற்றியும் பொதுவாகவே வெளிப்படையாகவும், நேர்மையாகவும் இருந்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பத்திரிகையாளர் கூறினார் : 'நாங்கள் இயந்திரங்களல்ல, நாங்கள் மனிதர்கள்"

பூரணமாகவே பக்கச்சார்பினை இல்லாதொழிப்பது என்பது சாத்தியமற்றதாகும். சில வேளைகளில், இது முழுவதும் மோசமான ஒன்றுமல்ல. 'அரசியல் மற்றும் சமூக நிலவரம் பற்றி நாம் உணர ஆரம்பிப்பதாயின், என்ன விடயம், அது ஏன் முக்கியமானது என்பது பற்றி உணர வேண்டும். எவ்வாறாயினும், பக்கச்சார்பு என்பது இல்லாதொழிக்க முடியாத ஒன்று என்று கூறுவது ஒரு விடயமாக இருக்கின்ற அதே வேளை, முரண்படும் கருத்துக்களுக்கு நியாயமான நிகழ்வுகளை அறிக்கையிட முயற்சித்தலுக்கும், பச்சையான பிரச்சாரத்திற்கும் இடையில் எவ்வித பேதமும் இல்லை என்று பிரகடனப் படுத்துவது முற்றிலும் வேறொன்றாக இருக்கின்றது."

பக்கச் சார்பினைக் குறைக்க முடியாது என்பதனை இது கருதவில்லை. உண்மையாகவே, பத்திரிகையாளர்கள் தாமே அவர்களிலே இதைக் குறைக்க முயற்சி எடுப்பது அவர்களின் கடமையாகும். (லெவி, 2004)

சமூக, அரசியல் சித்தாந்தங்கள், பொருளாதாரச் சூழ்நிலைகள் மற்றும் இனப் பாகுபாடுகள் போன்ற அனைத்தையும் கொண்ட ஒரு சமூகத்திற்கு வெளியே தனது இருப்பு இல்லை என்பதை ஏற்றுக் கொள்கின்ற பத்திரிகையாளர்கள், எவ்விதமான உள்ளார்ந்த பக்கச்சார்பினையும் கவனத்திற் கொண்டு கருமமாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்பதுடன் அப்பக்கச்சார்புகள் அவர்களின் செய்திகளிலே பல வகையான குரல்கள் கேட்கப்படுதலையும், புரியப்படுதலையும் தடை செய்யவில்லை என்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.




பத்திரிகைத் துறையின் நடத்தைக் கோவை புறக்கணிக்கப்படும் போது என்ன நிகழலாம் என்பதையும் பத்திரிகையாளர்களின் அறிக்கையிடல் என்ன தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்பதையும் பின்வரும் சம்பவக் கற்கை காட்டுகின்றது. மதமாற்றமானது பாரிய முரண்பாட்டிற்கான தூண்டு விசையாக இருந்த சந்தர்ப்பத்திலே, வாசகர்களின் மனப்பாங்கிலே செல்வாக்குச் செலுத்தவும், அவர்களுக்குத் தவறான தகவல்களை வழங்கவும் இனத்துவமானது இங்கே ஓர் முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது.

## ஆசிரியர் சுதந்திரம்

இலங்கையிலுள்ள ஊடகங்களில் அதிகமானவை, ஒலிபரப்பு மற்றும் பெரும் செய்திப் பத்திரிகைக் குழு உள்ளடங்களாக, மிகக் குறைந்த பத்திரிகைச் சுதந்திரத்துடனும் அரசாங்கச் செல்வாக்கின் சாட்சியத்துடனும் அரச கட்டுப்பாட்டிலுள்ளன. (பார்க், 2003) தனியார் வசமுள்ள ஊடகங்களின் செய்தி உள்ளடக்கமும், அதன் உரிமையாளர்களின் வர்த்தக மற்றும் அரசியல் நலன்களின் கட்டுப்பாட்டிற்கு உட்படுகின்றன.

சிறந்த ஊடகமானது மக்களைப் பற்றியதும் மக்களது சமூகத்தினைப் பற்றியதுமாகும். மேலும் அரசியல் மற்றும் வர்த்தக அழுத்தங்களில் இருந்து விடுதலை பெற்றுள்ள ஊடகமானது சனநாயகத்தின் பரிணாமத்திற்கும் அதன் துடிப்பான செயற்திறனுக்கும் குறிப்பிடத்தக்க முறையில் பங்களிப்புச் செய்யக் கூடியதாகும்.

**ஊடக நிறுவனங்களும், அந் நிறுவனத்தில் பணியாற்றும் பத்திரிகையாளர்களும் "அதிகாரங்களினைப்" பிரித்தல் என்கின்ற சித்தாந்தத்தின் உண்மையான அர்த்தத்தின் புரிதலை வளர்த்துக் கொள்ளாவிட்டால் அவர்கள் பிரச்சாரம் புரிபவர்களாக இலகுவில் மாற்றப்படலாம்.**

சுதந்திரமான ஊடகத்தினை நாம் சென்றடைதலானது அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது எல்லாம், எமது மனித உரிமைகளுக்கு ஆதாரமாக விளங்குகின்ற அறிந்து கொள்வதற்கான பொது மக்களின் உரிமையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது.

இவ்வாறான சூழமைவுகள் மற்றும் இக் கட்டுகளினுள் தான் பத்திரிகையாளர்கள் பணி புரிகின்றார்கள். ஆனால் பத்திரிகையாளர் தமது நெறிக் கோவை மற்றும் தொழிற் கோவை என்பவற்றிற்கு அமையப் பணிபுரிவதற்கான அவர்களின் உரிமைக்கு மதிப்பளிக்கக் கோருவதற்கு ஏனைய பத்திரிகையாளர்களுடனும் சிவில் சமூகத்தின் ஏனைய பங்காளர்களுடனும் இணைய வேண்டும் என்பதை அனுபவங்கள் காட்டுகின்றன.

### பக்கச்சார்பினை அழைத்தல்

ஒரு அனுபவமிக்க இலங்கைப் பத்திரிகையாளர் சிங்களத் தினசரி ஒன்றிலே "அடிப்படைவாதிகளிடம் இருந்து தப்பிய பௌத்தர் ஒருவரின் வாக்கு மூலம்" எனும் தலைப்பிலே கட்டுரை ஒன்றினை வெளியிட்டார்.

இக் கட்டுரையானது, குறுகிய காலத்திற்கு அடிப்படைவாதக் கிறிஸ்தவப் பிரிவு ஒன்றின் உறுப்பினராக இருந்த பௌத்தர் ஒருவரைப் பற்றியதாகும். அக் குழு அதன் விசுவாசத்தினைப் பரப்பிய ஆக்ரோஷமான வழி வகைகளைப் பற்றி அக் கட்டுரை விடயங்களை வெளிப்படுத்தியிருந்தது. அத் தகவல்கள் பௌத்தர்களை எதிராகத் தூண்டி விடுவதற்கான ஆற்றலைக் கொண்டிருந்தது.

இக் கட்டுரையானது இது போன்ற கிறிஸ்தவப் பிரிவுகளும் பிரதானமான கிறிஸ்தவக் கோவில்களும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்ற நேரத்திலே பிரசுரிக்கப்பட்டிருந்தது. சனாதிபதியும், பிரதமரும் அத் தாக்குதல்களை அடிப்படைவாதிகளின் செயல்களெனக் கண்டித்ததுடன், குற்றமிழைத்தவர்கள் சட்டத்திற்கு முன் கொண்டு வரப்படல் வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

எவ்வாறாயினும் கட்டுரையானது போதுமான சமநிலையினை வெளிப்படுத்தத் தவறி விட்டது.

அக்கட்டுரை அடிப்படைவாதப் பிரிவுகளின் பல தலைவர்கள் பற்றிக் கூறியிருந்தது. எவ்வாறாயினும், வாசகர்களின் உணர்வினைத் தூண்டிவிடும் வகையில் தமிழ்த் தலைவர்களின் இனத்துவம் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. உதாரணமாக, "தமிழ்ப் பாதிரியார் கோபத்திலே பேசினார்... 65,000 பௌத்த கிராமத்தவர்களை எங்களது சமயத்திற்கு மதம் மாற்றும் எதிர்பார்ப்புடன் (கிறிஸ்தவ சமயத்திற்கு)....."

இங்கே பாதிரியாரின் இனத்துவத்தைக் குறிப்பிடுவது அவசியமானதா? அவர் ஒரு தமிழர் என்பதால் சமயத்தைப் போதிக்கின்றார் எனும் கருத்தை அது கொடுத்ததா? ஏனைய தலைவர்களின் இனத்துவம் ஏன் குறிப்பிடப்படவில்லை?

கட்டுரையானது வழிபாட்டு இல்லங்களின் அமைவிடங்களையும் வெளிப்படுத்தி, அவற்றிற்கு எதிரான வன்முறையின் சாத்தியத்தினையும் அதிகரித்திருந்தது. இக் கட்டுரையின் விளைவாக, அவை தாக்கப்பட்டிருந்தால், பத்திரிகையாளர் ஒரு மறைமுகமான பங்குதாரராக இருந்திருப்பார்.

பரஸ்பரம் அச்சத்துடனும், அவ நம்பிக்கைகளுடனும் தசாப்தங்களாக வாழ்ந்து வருகின்ற இங்கையனைப் போன்ற சமூகத்திலே, எந்தவொரு கூற்றினையும் மிகைப்படுத்துவதும், திரிபுபடுத்துவதும் பொதுவானதாகும். துரதிஷ்டவசமாக, இம் முரண்பாட்டிற்கான தீர்வின் ஒரு பகுதியாக அல்லாமல், இம் முரண்பாட்டின் ஒரு பகுதியாக ஊடகங்கள் அதிலும் குறிப்பாக சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலான ஊடகங்கள் இருந்து வருகின்றன.

பின்வரும் வழிகாட்டுதல்கள் மனதிற் கொள்ளப்பட்டிருந்தால் இந்தக் கட்டுரை சிறப்பானதாக அமைந்திருக்கும்.

விடயங்கள் உண்மையானவையா, நேர்மையானவையா, மிகச் சரியானவையா?ஆசிரியர் அனைத்து விடயங்களையும், மூலங்களையும் சரிபார்த்து விட்டாரா?குறிப்பிடப்பட்ட அனைத்தும் நியாயமாகவும், சமமான முறையிலும் குறிப்பிடப்பட்டனவா?

கட்டுரை இன அல்லது சமயச் சார்பு நிலையை ஊக்குவிக்கக் கூடியதா? கட்டுரை வாசகரைத் தவறாக வழிநடத்தக் கூடியதா?

# பல குரல்கள் கதையை உருவாக்குகின்றன

## பால் நிலை : முரண்பாட்டிலுள்ள விடயம்

முரண்பாடும் சமாதானமும் பால்நிலை வேறுபாடின்றி அனைவரையும் பாதிக்கின்றது

நாங்கள் பெண்களை விபரிக்கும் விதமும், அவர்களின் கதைகளைச் சொல்லும் விதமும், சமூகம் அவர்களை நோக்குகின்ற விதத்திலும் நடத்துகின்ற விதத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பொதுவாகவே பெண்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகத்தான் சித்தரிக்கப்படுகின்றார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் தான். அவர்கள் இடம் பெயர்ந்தவர்களாகவும், விதவைகளாகவும், வறுமைப்பட்டவர்களாகவும், உடல் ரீதியாக மற்றும் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆனாலும் அவர்கள் குடும்பம், சமூகம் மற்றும் தேசிய மட்டம் என அனைத்து மட்டங்களிலும் மாற்றங்களிற்காகப் போராடுபவர்களாகவும், சாதகமான செயற்படுத்துனர்களாகவும் இருக்கின்றார்கள். இதற்குக் குறைவான கவனமே செலுத்தப்படுகின்றது. பெண்கள் யுத்தத்தினால் வித்தியாசமாகப் பாதிக்கப் படுகின்றார்கள். பெண்களின் மேல் கவனம் குவிக்கின்ற கதைகள் அவர்கள் எவ்வாறு விதவைகளாக வாழ்கின்றார்கள், பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கைகள், பெண்களால் முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள், பெண்கள் ஏன் ஆயுதம் தூக்குகின்றார்கள் மற்றும் அவர்களின் ஏனைய பிரச்சினைகள் போன்றவற்றிலே கவனம் செலுத்த வேண்டும்.

18 முரண்பாட்டு வலயங்களைச் சேர்ந்த ஆயுத எதிர்க் குழுக்களிலுள்ள 32 பெண் போராளிகளின் அண்மைய ஜெனிவா கூட்டத்திலே ஆண்களால் ஏற்படுத்தப்படும் பல காரணங்களால் பெண்கள் வன்முறையை நாடுகின்றார்கள். மேலும் அவற்றினைப் பல்வேறு காரணங்களுக்காக கைவிடுவதற்கு அவர்களை ஊக்குவிக்க முடியும் என்ற முடிவு எட்டப்பட்டது." "ஜெனிவா கூட்டத்தின் எளிமையான முடிவுகள் குறிப்பிடத்தக்கவையாகும். அதிகமான பெண்கள் தாங்கள் இறுதிப் புகலிடமாக மட்டுமே சண்டையை நாடுவதாகக் குறிப்பிட்டனர். பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்கள், அல்லது கணவன் மாரின் அல்லது குடும்ப உறுப்பினர்களின் கொலைகளை நேரில் பார்த்த பெண்களே விசேடமாக இதற்குத் தூண்டப்படுகின்றனர்." (வில்லியம்ஸ், 2005)

இவ்வாறான ஊக்குவிப்புக் காரணிகளும் இவை எவ்வாறு சமாதானப் பேச்சு வார்த்தைகளைப் பாதிக்கலாம் என்பதும் பத்திரிகைத்துறை விசாரணைக்கான செய்தித் தகைமைப் பரபுக்களாகும்.

ஒரு முரண்பாட்டுப் பத்திரிகைத்துறைச் செயலமர்விலே, எவ்வாறு பால்நிலைக் கண்மூடித்தனம் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களை சில விடயங்களில் பாதித்ததோ அதே போல் சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய அறிக்கையிடலையும் பாதித்திருந்தது என கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நெலுபர் டீ மெல் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

பெண்கள் கொண்டுள்ள வித்தியாசமான தேவைகளை ஊடகங்கள் கருத்திற் கொள்ளத் தவறி விட்டன. பெண்களுக்கு முகாம்களில் சிறந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வழிகோலிய பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் தொந்தரவு பற்றிய அறிக்கையிடலுக்கு அப்பால், முகாம் குழுக்களில் பெண்களின் ஈடுபாடு, அவர்களின் அந்தரங்கத் தன்மை, பாதுகாப்பு மற்றும் தேவைகள் (தனியான குளியல் வசதிகளுக்கான, உள்ளாடை மற்றும் மாதவிடாய்க்கால மாற்றுத் துணிகளுக்கான) பற்றிப் பரவலாக அறிக்கையிடப்படவில்லை. இவ்விடயங்களில் நிலவிய மௌனமானது, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டோரால் பால் நிலை வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை என்பதையே குறிக்கின்றது.

"இது அறிக்கையிடப்பட்ட விதத்திலே, பெண்களைப் பாதிக்கப்பட்டோராகவும் ஆண்களை முகவர்களாகவும் வைத்திருந்த நிலைமைகள் அரிதாகவே வெளிக்காட்டப்பட்டன. முடிவுகள் பெண்களை உதவியற்றவர்களாகவும் ஆண்களைப் பிழைத்து வாழ்பவர்களாகவும் காட்டுகின்ற மாறா நிலைக் கருத்துப் பேச்சேடாகவே அமைந்திருந்து" (டீ மெல், 2005)

முழுமையான கதைகளைப் பெறுவதற்கு, பத்திரிகையாளர்கள் பரந்த வீச்சிலான பெண்களின் கண்ணோட்டத்தினை உங்களது கதைகளில் உள்ளடக்க வேண்டும். அதாவது அடிக்கடி மௌனமாக்கப்படுகின்ற இனத்துவச் சிறுபான்மையினர் போன்றோர்.

## செய்தி அறையில் பல்வகைத் தன்மை

பத்திரிகையாளர்களின் பரந்த இனத்துவ வீச்சினை வேலைக்கமர்த்துதலும், சிறுபான்மை மொழிகளைப் பயன்படுத்துவதும் பல்வகைமையான அறிக்கையிடலுக்கான குறிப்பிடத்தக்க அமிலப் பரீட்சையாகும். ஆனால் அவை அவற்றிற்கு உத்தரவாதமல்ல.



புத்திக வீரசிங்க

முரண்பாட்டு நிலைமையின் போது பிள்ளைகளை பாதுகாப்பதற்காக ஊடகம் முக்கிய பாத்திரத்தினை வகிக்கின்றது

இதிலேயுள்ள பிரதான விடயம், செய்தி நிறுவனங்கள் தமது சமூகத்தின் பல்வகைமையைத் தமது சொந்தப் பணியாளர்களில் பிரதிபலிப்பதற்கிருக்கின்ற தேவையாகும். மிகவும் வித்தியாசமாக வாழுகின்ற மக்களின் கண்ணோட்டத்தினை ஒரு சிறந்த பத்திரிகையாளன் புரிந்து கொள்ளும் அளவிற்கும் ஒரு எல்லை இருக்கின்றது.

பணியாளர்களில் பல்வகைமையைக் கொண்டிருப்பது மிகவும் வெளிப்படையான, சென்றடையக் கூடியதான ஊடகத்தினை வழங்குகின்றது. வாசகர்கள் பத்திரிகையாளர்களில் சிலரையாவது அடையாளம் கண்டு, உள்ளடக்கத்தினை நம்புவதற்கு அதிக சாத்தியங்கள் இருக்கின்றன. செய்திப் பத்திரிகை, வானொலி அல்லது தொலைக்காட்சி நிலையங்கள் ஒரு இனக் குழுமத்தின் நலன்களையே கருத்திற் கொண்டுள்ளன என்று முத்திரை குத்தப்படுவதற்கு சாத்தியம் குறைவாகும். இனப் பல்வகைமையானது யதார்த்தத்திலே சிரேஷ்ட பதவிகளிலும், அதே போல் கனிஷ்ட பதவிகளிலும் பிரதிபலிக்குமாயின், செய்திகள் அறிக்கையிடப்படும் வழிவகைகளை அது உண்மையிலேயே மாற்றியமைக்கும்.

ஊடக முகாமைத்துவமும், பத்திரிகையாளர்களும் எவ்வாறு பெறுபேறுகளை முன்னேற்றலாம் மற்றும் அளக்கலாம் என்பதை அறிந்து கொள்ள அவர்களின் சொந்தத் தொழில், பயிற்சி மற்றும் அறிக்கையிடும் உத்தி என்பவற்றைப் பரீட்சிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளனர். இதற்கான முதற் படி அங்கீகாரமாகும். இன ரீதியாக சமனிலைப்பட்ட பணியாளர்..... சகிப்பின்மையைக் கையாளுகையில் ஏற்படும் நெறிசார்ந்த இக் கட்டுகளைப் பற்றிப் பேசும் பயிற்சி நெறிகள், மற்றும் ஊடகத்தின் பத்திரிகைச் செயல் நிறைவேற்றுகையைப் பரீட்சிப்பதற்கும் கண்காணிப்பதற்குமான ஆர்வம் போன்றவை விழிப்புணர்வை ஏற்படுத்தும், செய்தி சேகரிப்பவர்களின் அறிவெல்லையைப் பரவலாக்கும் மற்றும் அறியாமை, திறனின்மை போன்றவற்றால் எழும் தவறுகளையும். சார்பு நிலைகளையும் குறைக்கும்.

இவ் விடயத்தைக் கையாளுவதில் முகாமைத்துவம் மற்றும் பத்திரிகையாளர் நிறுவனங்கள் ஆகிய இரண்டிற்கும் பயன்தரக் கூடிய, ஊடகத்தில் பல்வகைமை என்பதற்கான பல விவாதங்கள் காணப்படுகின்றன.

- ஆசிரியப் பணியாளர்களிலும், செயல் நிறைவேற்றுகையிலும் இனப் பல்வகைமையானது பரந்த வீச்சிலான வாசகர்களைக் கேட்போரை, பார்ப்போரைக் கவருகின்றது. இலக்குக் குழுக்கள் தமது சொந்த வாழ்க்கையுடன் ஊடக உள்ளடக்கத்திற்கு உள்ள பரிச்சயத்தை உணருகையில் விற்பனையும் தரமும் அதிகரிக்கும்.
- செய்தியறையினுள்ளே நியாயத்திற்காகவும், பக்கச்சார்பின்மைக்காகவும், பல்வகைமை மிகு இனப் பிரதிநிதித்துவத்திற்காகப் போராடுகின்ற பத்திரிகைத் துறையானது சிறுபான்மைச் சமூகங்களிடமிருந்து தகவல்களின் பல்வகை மூலங்களினைச் சென்றடைதலை முன்னேற்றும்.
- தொழிற்படையில் சிறந்த இனப் பிரதிநிதித்துவம் மற்றும் மிகுந்த சமனிலையான செய்தி உள்ளடக்கம் போன்றன பல்வேறு பின்புலங்களில் இருந்தும் வாசகர்களைக் கவருகின்றன. பல்வேறு கலாச்சாரப் பின்புலங்களையும் சார்ந்த மக்களை இலக்கு வைக்கும் விளம்பரதாரர்கள் அனைத்து இன மக்களும் நன்கு தென்படுகின்ற இடங்களையே பெரிதும் விரும்புவர்.

- தகவல்களைப் பரிமாறவும், ஒருவர் மற்றவரிடமிருந்து கற்பதற்கும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் ஊடகமும் ஒன்றாகப் பணியாற்ற ஊக்கப்படுத்தப்பட வேண்டும். ஊடகத்திற்குள்ளேயும் பல்வேறு ஊடகங்களுக்கு இடையேயுமான கலந்துரையாடலானது ஊடகத்திற்கும் சமூகத்திற்கும் இடையேயான கலந்துரையாடலைப் போலவே முக்கியமானதாகும்.

## செய்தியின் மொழி

செய்திகளைச் சேகரிப்பதிலும், வழுவற்ற நேரடி அறிக்கைகளைப் பெறுவதிலும், குறிப்பாக ஏனைய சமூகங்களைப் பாதிக்கின்ற விடயங்களையும், நிகழ்வுகளையும் அறிந்து கொள்வதிலும் மொழியானது பிரதான தடையாக இருக்கின்றது என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

பல் - மொழிப் பத்திரிகையாளர்களை ஊக்குவிப்பதும் குறிப்பிட்ட செய்திகளிற்கு பல்வேறு மொழிகளைச் சேர்ந்த நிருபர்களைக் குழாமாகப் போடுவதும் நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதுடன், ஏனைய மொழிச் சமூகத்தினைச் சென்றடைய வாய்ப்பினையும் தருகின்றது.

ஆனால் பத்திரிகையாளர்களின் அதிகளவான கட்டுப்பாட்டின் கீழ் ஒரு பரப்பு இருக்கின்றது என்றால் அது, அவர்கள் நிகழ்வுகளையும், விடயங்களையும் விபரிக்கவும், தங்களது கதைகளைச் சொல்லவும் பயன்படுத்துகின்ற சொற்களினதும் சொற்றொடர்களினதும் தெரிவாகும்.

தெளிவாகவே, பத்திரிகையாளர்கள் சாதி சார்ந்த அல்லது இனம் சார்ந்த அவதூறுகளை ஒரு போதுமே பயன்படுத்தக் கூடாது. அத்துடன் ஏனைய இன மற்றும் சமயக் குழுமங்கள் பற்றிய எந்தவொரு பிரக்ஞையற்ற ஊகத்திற்கும் பதிலளிக்க வேண்டும். சமாதானச் செயன்முறையின் அங்கமாக இருக்கின்ற வன்முறை பற்றிய அறிக்கையிடலானது சில விசேட சவால்களைக் கொண்டுள்ளது. அது இனப் பதற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய, சமாதான முயற்சிகளைக் கீழறுக்கக் கூடிய ஆற்றல் கொண்ட சொற்களின் தெரிவினை விடக் குறைந்தவையல்ல.

இலங்கையிலே,

உதாரணமாக, யுத்த நிறுத்த உடன்படிக்கைக்குப் பிறகு, சமூக - அரசியல் சூழமைவின் அம்சங்களை விபரிக்க ஊடகமானது மொழியுடன் மல்லாடிக் கொண்டிருக்கின்றது. சமூகம் போன்ற சொற்கள் இனத்துவத்துடனும், சிறுபான்மையுடனும் இணைக்கப்படுகின்றன. மொழியின் நுட்பமான பயன்பாட்டிற்கு மொழி ஊடகங்களின் தவறுகள் மேலதிக சிரமங்களை உருவாக்குகின்றன. பொதுவாகவே, தமிழ் மற்றும் சிங்கள மொழிப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் போது சமூகப் பதற்றங்கள் இனப் பகைமையாகுகின்றன. மற்றும் சிறு பிணக்குகள் பெரும் இன முரண்பாடுகளாகுகின்றன. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை என்பவற்றின் வரைவிலக்கணங்கள் குறிப்பிட்ட வாதங்களுக்குப் பொருந்தும் வகையில் திரிபுபடுத்தப்படுகின்றன. சிறுபான்மை என்பது சிங்களப் பத்திரிகைத் துறையிலே ஏனைய சமூகங்களின் தகவு நிலையினைக் கீழறுப்பதற்காகச் சூழ்ச்சித் திறத்துடன் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மாற்றமாக, "பெரும்பான்மை" எனும் சொற்பதமானது தமிழ் ஊடகத்திலே சிங்களச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவே பயன்படுத்தப் படுகின்றது. இதிலே பெரும்பான்மை எனும் இழைமானத்திலே பின்னப்பட்டுள்ள கருத்துக்களின் பல்வகைமையும், அரசியல் சித்தாந்தங்களும் பிரதிபலிப்பதில்லை.

நீண்ட காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இன முரண்பாட்டின் தவிர்க்க முடியாத விளைவுகளே சமூகங்கள் பற்றிய மாறா நிலைக் கருத்துக்களும், சமூகங்களை அவற்றின் மனித நிலையிலிருந்து குறைப்பதுமாகும். எந்தவொரு குற்றச் செயலிலும் சந்தேகத்துக்கிடமானவராகக் காணப்படுகின்ற ஒரு தமிழருக்கு பயங்கரவாதி என்கின்ற முத்திரை தானாகவே குத்தப்பட்டு விடும். அதே வேளை ஒரு சிங்களவருக்கு சந்தேகத்தின் நன்மை வழங்கப்படுகின்றது. தமிழர், பயங்கரவாதி, எல்ரிரிஈ - என்று ஒன்றிற்கு ஒன்றாக மாற்றிப் பயன்படுத்த முடியாத சொற்கள் ஒரே செய்தி அறிக்கையிலே அடிக்கடி ஒன்றாக இணைத்துப் பயன்படுத்தப்படுகின்றன.

பேச்சு வழக்குப் பாங்கும் ஊடகத்திற்குப் பிரச்சினைகளைக் கொடுக்கின்றன. ஒரு முஸ்லிம் நபரினை விபரிக்கவும் அல்லது தமிழ் சமூகங்களை விபரிக்கச் சிங்கள ஊடகங்கள் பயன்படுத்தும் சொற்பதங்கள் (தம்பியா அல்லது மரக்கலயா மற்றும் தெமலயா என்று முறையே பயன்படுத்தப்படுகின்றன) முழு அடையாளக் குழுக்களும் மாறா நிலைக் கருத்துக்களை வழங்கவும், அவர்களைத் தரக்குறைவாக அழைக்கவும் வார்த்தைகளை நுட்பமின்றிப் பயன்படுத்துதல், (தமிழ் சமூகத்தைக் குறிக்க "தெமழுன்" எனவும் முஸ்லிம் சமூகத்தைக் குறிக்க "மரக்கலயோ" எனவும்) அரசியல் கருத்துக்களின் ஆதரவிகை் கீழறுக்க அவற்றினைப் பக்கச்சார்புடன் பயன்படுத்துதலும்.

## சிறந்த நடைமுறை வினாக்கள்

- அனைத்து வேலைகளும் விளம்பரம் செய்யப்படுகின்றனவா?
- பெண்களை ஒரு கதை எவ்வாறு பாதிக்கும் என்பதை நீங்கள் கருத்திற் கொண்டதுண்டா? நீங்கள் அவர்களின் கருத்துக்களை வேண்டியதுண்டா?
- புறக்கணிக்கப்பட்ட குழுமங்களில் இருந்து விண்ணப்பங்கள் வருவதை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதா?
- நீங்கள் ஒருவருக்கு நேர்முகப் பரீட்சைக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கு முன்பே, அவரின் சுய விபரத் தரவுகளைக் கொண்டு அவர் பற்றி சில விடயங்களை ஊகித்துக் கொள்கின்றீர்களா?
- பல்வேறு இன/ கலாச்சாரப் பின்புலத்தையும் மொழித் திறனையும் கொண்ட பத்திரிகையாளர்களால் எவ் வேலைப்பரப்பு நன்மை பெறக் கூடும் என்பதை நீங்கள் எப்போதாவது கருத்திற் கொண்டதுண்டா?

பத்திரிகையாளர்கள் என்ஜிஓ, மற்றும் சமாதானச் செயற்படுத்துநர்கள், வெளிநாட்டு உதவி சமஷ்டி வாதம் மற்றும் பரவலாக்கம் போன்ற விடயங்களை அறிக்கையிடும் போது அவர்களின் அறிக்கையினை சுயாதீனமானதும் நிபுணத்துவமானதுமான அணுகுமுறையில் மீள் பரிசீலிக்க வேண்டும். இவற்றை இலங்கையின் பிராந்திய இறைமைக்கும், உறுதிக்கும், ஒற்றுமைக்கும் பாதகமானவை எனக் கூறுகின்ற, உணர்வுகளைக் கிளறிவிடும் அறிக்கைகள் எமது சமூகத்திற்கு நம்பத்தகுந்த வழுவற்ற தகவல்களை வழங்கி அதன் மூலம் அவர்கள் தமது சொந்தக் கருத்துக்களை உருவாக்க உதவுகின்ற பத்திரிகைத்துறை சார்ந்த கடப்பாட்டினை நிறைவேற்று-கின்றனவா என்பதைச் செய்தி அறைக் கலந்துரையாடல்கள் சரி பார்க்க முடியும்.

## சிறுவர்களின் குரல்களைக் கேட்டல்

சிறுவர்கள் சுரண்டலுக்குள்ளாவது முரண்பாட்டு சூழ்நிலையில் குறிப்பாக அதிகமாக உள்ளதனால் வளர்ந்தவர்கள் அவர்களைப் பாதுகாப்பது அவசியமாகின்றது. அதிகமான சிறுவர்கள் பலவந்தமாக சிறுவர் படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அத்தோடு நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியேயும் வியாபார தொழிலுக்காக விற்கப்படுகின்றார்கள். இதில் பாலியல் அடிமை வியாபாரமும் அடங்குகிறது.

ஊடகங்களுக்காக பணிபுரிபவர்கள் என்ற வகையிலும், சிறுவர்களை நோக்கிய வளர்ந்தவர்களின் நடவடிக்கைகளுக்கு பலம் வாய்ந்த உருவங்கொடுப்பவர்கள் என்ற வகையிலும் முரண்பாட்டு சூழ்நிலையில் சிறுவர்கள் பாதுகாப்பில் நாம் முக்கிய பங்கு வகிக்கின்றோம்.

உலகம் முழுவதிலும் உள்ள பத்திரிகையாளர்கள் IFJ ஊடாக சிறுவர்களைப் பற்றிய அறிக்கைகளை விடுவதற்கு ஒரு சர்வதேச வழிகாட்டல் தொகுதியினை ஏற்றுக் கொண்டுள்ளனர். சிறுவர்களின் கருத்துக்களை தேவைக்கேற்ற முறையில் மாற்றாமல் மற்றும் காமத்தரகர்கள், கடத்தல் காரர்கள், வேலைகளுக்கு அமர்த்துபவர்கள், துஷ்பிரயோகம் மிகு பெற்றோர்கள் போன்றவர்களுக்கு சிறுவர்களைக் காட்டிக் கொடுக்காமல் அக் கருத்துக்களை உள்ளடக்குவதன் முக்கியத்துவத்தினை பத்திரிகையாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சிறுவர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதா அல்லது அவர்களின் முகங்களை படங்களில், புகைப்படங்களில் காட்டுவதா என்பது மிகவும் கடினமானதொரு விடயமாக இக்கின்றது. இச் சிறுவர்களை கட்புலனாக அல்லது வேறுவகையாக அடையாளம் காண்பது பொது நலனுக்காக அல்லாத சமயங்களில் அவர்களை அதிலிருந்து ஊடக தொழில் சார்ந்தவர்கள் பாதுகாக்க வேண்டும் என IFJ வழிகாட்டுதல்கள் கூறுகின்றன. சிறுவர்களுக்கு மேலும் தீங்குகள் ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதே ஊடகங்களின் முதலாவது கடமையாக இருக்கின்றது. அதிகமான சந்தர்ப்பங்களிலே மேலதிக ஆபத்து பிரசித்தியினை ஏற்படுத்தி அதன் மூலமாக சிறுவரான போர் வீரர்களையும், பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் அடையாளம் காட்டுவதன் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது.

துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்ட அல்லது மன அதிர்ச்சி வடுவிற்கு உள்ளான சிறுவர்களை நேர்காணுவது பத்திரிகையாளர்களுக்குக் குறிப்பாகவே சவால் மிக்கதும், மிகுந்த கவனம் தேவைப்படுகின்ற

## சிறந்த நடைமுறை வினாக்கள்

1. ஆசிரியர் குழாத்தின் கூட்டத்தினைக் கூட்டி அதில் சம காலத்தில் நடந்த சில சம்பவங்களை, அவற்றின் பால்நிலை, வயது மற்றும் இன அடிப்படையில் கலந்துரையாடவும்.
2. செய்திகளிலும் ஆய்வுக் கட்டுரைகளிலும் இனத்துவம் எவ்வாறு கையாளப்படுகின்றது?
3. எத்தனை தடவைகளில் "பிரச்சினை" என இனத்துவம் முன்வைக்கப்படுகின்றது?
4. குற்றச் செயல்கள் பற்றிய செய்திகள் மாறா நிலைக் கருத்துக்களை வலுப்படுத்துகின்றதா? (ஒரு வாரத்துக்கு எத்தனை தடவைகள் தொலைபேசி அழைப்புக்களை பொலிஸ் நிலையத்துக்கு எடுக்கின்றார்கள் என்பதை நிருபர்கள் எத்தனை தடவைகள் சமூக உறுப்பினர்களை சென்று சந்தித்து வருகின்றார்கள் என்பதுடன் ஒப்பிடுக)
5. சமூகத்துடன் தொடர்பினைக் கட்டியெழுப்ப உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளவும்.
6. நிருபர்களாக வெளியே சென்று சமூக உறுப்பினர்களை சந்திக்க ஊக்கப்படுத்தவும்.
7. இலக்கு வைக்கப்பட்ட சமூகத்தில் இருந்து ஒரு ஆலோசனைக் குழுவை உங்களால் அமைக்க முடியுமா என பாருங்கள்.
8. ஒருவருக்கு விருந்தினர் பத்தி வழங்கவும்.
9. தொலைக் காட்சியில் அல்லது பத்திரிகைகளில் நீங்கள் உபயோகிக்கும் படங்களைப் பாருங்கள். அவை உங்களது சமூகத்தின் சமநிலையை பிரதிபலிக்கின்றதா? ஒரு விடயத்தில் அல்லது செய்தியறிக்கையில் தோன்றுபவர்களின் எண்ணிக்கையை கணக்கிடவும். அது சமூகத்தின் ஒரு நியாயமான பிரதிபலிப்பா?
10. புறக்கணிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் உங்களின் தொடர்பினை அதிகப்படுத்துங்கள்.
11. அதிகமாக பெற்றுக் கொள்ள நிருபர்களை அவர்களது தொடர்புகளை பொதுத் தளத்தில் ஆக்கும் படியும் கருத்துக்களை மூளைப் பிரவாகம் செய்யும் படியும் கேளுங்கள்.

ஒன்றுமாகும். விரிவிளக்கமான விபரங்களைத் தூண்டி வெளியிடச் செய்ய முயற்சிப்பதானது நிகழ்வுகளைச் சிறுவர்கள் மீள் கற்பனை செய்து பார்க்கவும், மீள அனுபவித்துப் பார்க்கவும் நிர்ப்பந்திக்கலாம். சிறுவர்களுடன் நேர்காணலை நடத்துவது பலன்தரக்கூடியதா என்பதையும் மற்றும் கதைகளை அறிக்கையிடுவதற்கு வேறு வழிகள் இல்லையா என்பதையும் முதலாவதாக நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

### பல வகையான பரிசோதனைப் பட்டியல்

பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நிருபர்களுக்கும் பல்வகைமைப் பரிசோதனைப் பட்டியல் ஒன்றை "த சீடல்ஸ் டைம்ஸ்" உருவாக்கியுள்ளது.

இவ் வினாக்கள் அப் பரிசோதனைப் பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டது.

### பத்திரிகை ஆசிரியர்களுக்கான வினாக்கள்

1. சம்பவங்களை வகைப்படுத்துவதிலும், ஒப்படைகளிலும் பல்வகைமைக்கு நான் முன்னுரிமை வழங்குகின்றேனா?
2. பல்வகை மூலங்களையும் சம்பவங்களையும் தேடிச் செல்ல நான் நிருபர்களுக்கு போதுமான அளவு அவகாசம் கொடுக்கின்றேனா?
3. மூலங்களை விருத்தி செய்யவும் பல்வகை சமூகங்களுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்தவும் நான் காரியாலயத்தை விட்டு வெளிச் செல்கின்றேனா?

### நிருபர்களுக்காக

1. எமது சமூகத்தில் உள்ள பல்வேறு இன சனத்தொகையில் உள்ள மக்களை நான் உள்ளடக்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகள் எவ்வாறு பாதிக்கும் என்பதை கண்டு பிடிக்க நான் முயற்சி செய்கின்றேனா?
2. நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட சமூக உறுப்பினர்களின் சம்பவங்களை நான் தேடிச் செல்கின்றேனா?
3. நான் எவ்வாறு செய்திக்கான எண்ணக் கருக்களையும், கோணங்களையும், பெற்றுக் கொள்ளும் மக்களையும், இடங்களையும் மற்றும் நிறுவனங்களையும் விரிவுபடுத்திக் கொள்ள முடியும்?
4. தொடர்புகளுக்கும் மூலங்களுக்குமான என் சொந்தப் பட்டியலை நான் எவ்வாறு விரிவுபடுத்திக் கொள்ள முடியும்?

### சம்பவம் ஒன்றைப் பற்றி

1. இச் சம்பவத்தினை பல்வகை மூலங்களை நான் தேடினேனா?
2. பல்வகைமையை உள்ளடக்குவதற்கான எனது முயற்சிகளை மட்டுப்படுத்த எனது முன்புனைவான கருத்துக்களை அனுமதித்தேனா?
3. ஒரு சமூகத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு நபரினை மட்டும் அனுமதிக்கின்றதான டோகன் முறையினை நான் பயன்படுத்துகின்றேனா, அல்லது நான் உண்மையான பல்வகைமையினை தேடுகின்றேனா?
4. பல்வகைமையினை நான் தேடும் பொழுது நான் மாறாநிலைக் கருத்துக்களை நான் இன்னும் மிகைப்படுத்துகின்றேனா அல்லது அதற்கெதிராக போராடுகின்றேனா?
5. நான் உண்மைகளைக் காண்பது போலவே கூறுகின்றேனா?
6. பிரசுரிக்கப்படுவதால் சாத்தியமான எதிர்விளைவுகள் யாது? யார் பாதிக்கப்படுவார்கள்? யார் நன்மையடைவார்கள்?
7. எனது தீர்மானங்களைப் பற்றி சவால் விடும் எவருக்கும் நியாயம் காட்டி வாதிடாமல், தெளிவாகவும் நேர்மையான முறையிலும் என்னால் விபரிக்க முடியுமா?

# நேரடியாகப் பெறுதல்

சிறந்த பத்திரிகைத் துறையில் அதன் அனுபவத்தின் நேர்த்தியும் செழுமையும் பிரதிபலிக்கும். சாதாரண மக்களின் வாழ்க்கை பற்றிய கதைகளை அவர்கள் வாழும் வழிகளை, அவர்களின் அச்சங்களை, அவர்களின் எதிர்பார்ப்புக்களை, அவர்களின் வெற்றிகளை, அவர்களின் அழிவுகளைச் சொல்ல உதவுகின்ற நேரடியான மூலங்களை விருத்தி செய்வதன் மூலம் மட்டுமே இது சாத்தியமாகும். செய்தி அறையிலே அரசாங்கத்தின் செய்திப் பிரிவினால் வெளியிடப்படும் உத்தியோகபூர்வமான செய்திகளுக்காகக் காத்திருக்கும் பத்திரிகையாளர்களுக்கு இச் செழுமை உணர்வோ, அனுபவமோ வராது.

மக்களின் அனுபவங்களைப் பற்றிய விடயங்களைத் தேடி, கேட்டு, அமைத அறிக்கையிடுவதனை நோக்கி ஒரு அடிப்படை மாற்றம் பத்திரிகையாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் நிகழ வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். ஊடக நிறுவனங்களைப் பொறுத்த அளவிலே, செய்தி எங்கேயிருக்கின்றதோ அங்கே பத்திரிகையாளர்களைப் பெறுவதற்கான வளங்களைப் போடுவதையே இது அர்த்தப்படுத்தும்.



பெண்கள் யுத்தத்தின் இரைகளாவார்கள்..... ஆனால் அவர்கள் போராளிகளைப் போல் வித்தியாசமானவைகளுக்கு விருப்பமுடையவர்கள்.

மக்கள் வாழ்க்கைக்கான சிறந்த வழிகளையே தேடுகிறார்கள். வளங்களைப் பகிர்வதற்கான நியாயமான வழி வகைகளைத் தேடுகின்றார்கள், தங்களது இருப்பிற்கான சிறந்த சட்டகத்தினைத் தேடுகின்றார்கள். பத்திரிகையாளர்கள் தமது அறிக்கையிடல் மற்றும் விடயங்களை வெளியிடல் மக்களின் அனுபவங்கள் மற்றும் அவர்களின் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றினூடாக இச் சட்டகத்திற்கான கண்டு பிடிப்புக்கள் ஒரு பகுதியாகலாம்.

தங்களது கதைகளில் அதிக குரல்களை வேண்டுகின்ற பத்திரிகையாளர்கள் வளங்களின் வங்கியினை விருத்தி செய்ய ஆரம்பிக்க வேண்டும். சுவாரஷ்யமான மனிதர்களுடனான ஒவ்வொரு தொடர்பும் அரசாங்க மூலங்களுக்கு அப்பால் உங்களது மூலப் பட்டியலை விரிவுபடுத்துகின்ற வாய்ப்பாக உருவாக வேண்டும். இந்த அரச மூலங்களே பல தசாப்த காலங்களாக செய்தி நிருபர்களின் பிரதான மூலமாக இருந்து வருகின்றது. நீங்கள் வழமையான செய்திக்கு வித்தியாசமான ஒரு கண்ணோட்டத்தினைப் பெற வைத்தியர்களையும், சடத்தரணிகளையும், கல்வியியலாளர்களையும், சமூகத் தலைவர்களையும் உள்ளடக்க வேண்டும்.

பல் - மொழிகளைக் கொண்ட, பல் - இனங்களைக் கொண்ட சமூகத்தின் ஒரு அங்கமாக இருப்பது என்பது, ஏனைய சமூகங்களில் உங்களுக்கு நம்பத்தகுந்த மூலங்கள் தேவை என்பதன் அர்த்தமே ஆகும்.

சிறந்த பத்திரிகையாளர்கள் பல்வகைமை மிகு மூலங்களின் மிகப் பரந்த வலையமைப்பினைக் கொண்டுள்ளார்கள். பல மூலங்களின் வீச்சினையும் பயன்படுத்துவதால் ஏற்படும் இன்னுமொரு நன்மை, தகவல்களை வழுவின்மைக்காகச் சரிபார்க்கக் கூடியதாக இருப்பதாகும். நிகழ்வு அல்லது சம்பவம் நடைபெற்ற இடத்தில் உண்மையாகவே பிரசன்னமாகியிருந்த மக்களிடமிருந்து பெறப்படும் மூலங்கள் அதாவது நேரடியான மூலங்கள் எப்போதும் விரும்பத்தக்கவையாகும். நேரடியற்ற மூலங்களின் வதந்திகளிலும், ஊகங்களிலும் தங்கியிருப்பது வழுவான செய்திகளுக்கே இட்டுச் செல்லும்.

## சிறந்த நடைமுறைக் குறிப்புகள்

- உங்களது மூலங்களின் பட்டியலைத் தொகுக்கவும், அப்பட்டியலை உங்களின் சகபாடிகளுடன் பகிரவும். ஒரு நிருபர் என்ற ரீதியிலே உங்களது பணி முன்னே செல்லச் செல்ல, பட்டியலுக்குப்புதிய மூலங்களைச் சோத்துக் கொண்டே இருங்கள்.
- பல்வேறு விதமான விடயங்கள் பற்றி அதிகாரபூர்வமான கருத்துக்களை வழங்கக் கூடிய ஏனைய மதங்களையும், இனங்களையும் சார்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் தொடர்புகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தவும்.

## ஏனைய குழுக்களைச் சேர்ந்த மக்களை நேர்காணுவது பற்றிய சிறு உதவிக் குறிப்புகள்

பத்திரிகையாளர்களுக்காக இந்த உதவிக் குறிப்புகளை ஊடகப் பல்வகைமை நிறுவனம் IFJ யுடன் இணைந்து தயாரித்துள்ளது.

- கூருணர்வு மிக்கவர்களாகவும், சிந்தனை மிக்கவராகவும் இருக்கவும் - மக்கள் பத்திரிகையாளர் ஒருவருடன் பேசுவதையிட்டு அச்சம் கொண்டிருக்கலாம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் - அவர்களைச் சௌகரியமான நிலைக்குக் கொண்டு வாருங்கள்.
- நேர்காணலுக்கு அவர்கள் விதிக்கும் எந்த நிபந்தனைகளையும் புரிந்து கொண்டு அதற்கு மதிப்பளிக்கவும். அவர்களின் பெயரினைப் பயன்படுத்துவதை அவர்கள் பொருட்படுத்துகின்றார்களா இல்லையா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.
- எங்கே நேர்காண்பது என்பது பற்றி உங்களுக்கு ஏதாவது தெரிவு இருப்பின், அவர்களுக்குச் சௌகரியமான ஒரு இடத்தைத் தீர்மானிக்கவும். அவர்களின் சொந்தச் சூழலும் அவர்களின் கண்ணோட்டத்தினைப் புரிந்து கொள்ள உங்களுக்கு உதவலாம்.
- அவர்களின் கதைகளை அவர்களின் சொந்த முறையில் உங்களுக்குச் சொல்ல அனுமதியுங்கள். அவர்கள் ஐந்து அல்லது 10 வருடங்களுக்கு முன்பு என்ன நடந்தது என்று கூறி ஆரம்பிக்கத் தொடங்கும் போது அது உங்களுக்குத் தேவையற்றது போல் தோன்றினாலும் அவர்களைக் கூற விடுங்கள்.
- நெகிழ்வுத் தன்மையுடன் இருங்கள். நேரகாலத்துடன் கேள்விகளின் பட்டியலைத் தயாரித்துக் கொள்ளுங்கள். ஆனால் அதை ஒரு பொது வழிகாட்டுதலாக மட்டுமே பயன்படுத்தவும். நீங்கள் உங்களது கேள்விகளைக் கேட்கையிலே, அவர்கள் கூறுவதைக் கவனமாகச் செவிமடுங்கள். எனவே ஏனைய அணுகுமுறைகளுக்கு நீங்கள் தயாராக இருக்கலாம்.
- அவர்களது வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என அவர்களுக்குப் போதிக்க வேண்டாம். அவர்களது சூழ்நிலையை உங்களை விட அவர்கள் நன்கு புரிந்து கொள்கின்றார்கள். அதனாற் தான் அவர்களை நேர் காண்பதில் நீங்கள் ஆர்வம் கொண்டுள்ளீர்கள்.
- அவர்களுக்கு உரித்தான சிறுபான்மையினைப் பற்றி நீங்கள் ஏதாவது பக்கச்சார்பு அல்லது தப்பெண்ணம் கொண்டிருந்தால் அதை ஏற்றுக் கொண்டு, அவர்களை நேர்காணும் போதும், உங்களது கதையைத் தயாரிக்கும் போதும் அவற்றை ஒதுக்கி வையுங்கள்.
- உங்கள் மூலங்கள் நிபுணர்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். ஒரு நிபுணர் என்பவர் வெறும் வைத்தியரோ அல்லது விஞ்ஞானியோ அல்ல. உங்களது மூலங்கள் அவர்களது சொந்த வாழ்க்கை பற்றிய நிபுணர்கள் ஆவார்கள். அவர்களை உங்களுக்கு அவர்களின் வாழ்க்கையையும் அனுபவத்தையும் பற்றி விபரிக்க வைக்க வேண்டும். அதை உங்களது வாசகர்களுக்கு ஒத்தி வைப்பதே உங்களது கடமையாகும்.
- உரையாடலின் முடிவினிலே, நேர்காணப்படும் ஆர்வமுடைய வேறு யாரையாவது அவர்களுக்குத் தெரியுமா என அவர்களிடம் கேளுங்கள். இதற்கு அல்லது எதிர்காலக் கட்டுரைகளுக்கு ஏனைய மூலங்களைக் கண்டு பிடிப்பதற்கான ஒரு முக்கியமான முறையாக இது இருக்கலாம்.
- அனைத்திற்கும் மேலாக, நீங்கள் தகவலை எவ்வாறு பயன்படுத்துகின்றீர்கள் என்பதையிட்டுக் கவனமாக இருங்கள். நீங்கள் அவர்களைப் பற்றி எழுதும் போது கவனமாகவும், கருணையுடனும் செயற்படுங்கள்.

# முரண்பாடு அறிக்கையிடலுக்கான IFJ வழிகாட்டுதல்கள்

இலங்கையிலுள்ள ஊடகமானது, முரண்பாட்டினைத் தணிப்பதற்கும், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் மனித உரிமைக்கான கௌரவம் என்பவற்றை அதிகரிப்பதற்குமான ஆற்றலைக் கொண்டுள்ளது. வருடக்கணக்கில் நிலவி வரும் அரசியல் மற்றும் சமூக அமைதியின்மையுடன் 2004ம் ஆண்டின் சுனாமியின் நாசம் மிகு தாக்கங்களும் சேர்ந்து முன்னெப்பொழுதும் இல்லாத ஒரு முக்கியமான பாத்திரத்தினை ஊடகங்கள் வகிக்க வேண்டிய நிலையை உருவாக்கியிருக்கின்றன. பின்வரும் வழிகாட்டுதல்கள், உலகம் முழுவதும் முரண்பாட்டுச் சூழலில் பணியாற்றும் பத்திரிகையாளர்களினால் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்களை ஒன்றிணைத்துள்ளது. இவ் வழிகாட்டுதல்கள் இங்கே கருத்திற் கொள்வதற்காகவே வழங்கப்பட்டுள்ளன.

## உண்மை சார்ந்த வழுவின்மை

பல்வகையானதும், நம்பகத்தகுந்ததுமான தகவல் மூலங்களின் வங்கி ஒன்றினை உருவாக்குவதன் மூலம் வழுவின்மையை உறுதிப்படுத்துங்கள். இது பத்திரிகையாளர்கள் தகவல்களை விரைவாகச் சேகரிக்கவும் சரி பார்க்கவும் அனுமதிக்கும். இலங்கைப் பத்திரிகையாளர்களின் அனுபவம் மற்றும் மனப்பாங்கு பற்றி அறிய IFJ யினால் நடத்தப்பட்ட கணிப்பீடு, வருவின்மைக்காகக் குறுக்குப் பரிசோதனை செய்தலின் முக்கியத்துவத்தினைச் சுட்டிக் காட்டியுள்ளது. எந்த மூலத்திடமிருந்தும் முகப் பெறுமதிக்காக அறிக்கைகளை ஏற்றுக் கொள்ளக் கூடாது. உத்தியோபூர்வ மூலங்கள் கூடத் தவறாக இருக்கலாம்.

அத்துடன் நேரடியான மற்றும் நேரடியற்ற தகவல்களுக்கிடையில் தெளிவாகப் பேதம் காணுங்கள். செய்தி அறையினுள் பரந்த வீச்சிலான மொழிப் பின்புலத்தைக் கொண்ட பத்திரிகையாளர்களைக் கொண்டிருப்பது மொழித்தடைகளை உடைத்து பரந்த வீச்சிலான மூலங்களைச் சென்றடைய வழி செய்யும்.

ஒரு தவறு விடப்படுமிடத்து, அதை இயலுமான அளவு விரைவாக ஏற்றுக் கொண்டு சரி செய்ய வேண்டும்.

## சமநிலை

முரண்பாட்டுச் சூழ் நிலைகள் தெளிவானவை அல்ல. எனவே சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் கருத்தக்களையும் பரிசீலித்து அவர்களின் கண்ணோட்டங்களை உள்ளடக்கவும். சிறந்த பத்திரிகைத் துறையில் அதன் அனுபவத்தின் நோத்தியும், செழுமையும் பிரதிபலிக்கும். சாதாரண மக்களின் வாழ்க்கை பற்றிய கதைகளை, அவர்கள் வாழும் வழிகளை, அவர்களின் அச்சங்களை, அவர்களின் எதிர்பார்ப்புகளை, அவர்களின் வெற்றிகளை, அவர்களின் அழிவுகளைச் சொல்ல உதவுகின்ற நேரடியான மூலங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் மட்டுமே இது சாத்தியமாகும். உத்தியோகபூர்வ எல்லைக்கு அப்பால் செல்வதும் அனுபவம் சார்ந்த தரவுகளும் பத்திரிகையாளர்களுக்கான முக்கியமான பணியாகும். கதையின் மனிதப் பக்கத்தை வெளியிடுவது வாசகர்களின் கவனத்தை கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாது ஒரு விடயம் நிகழ்வதைக் கை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்காமல் அதிலே அவர்களை ஈடுபடவும் ஊக்குவிக்கும்.

## கூருணர்வு

தேவையற்ற விதத்திலே சாதி, சமயம் அல்லது இனத்துவம் என்பவற்றைப் பற்றிக் குறிப்பிடுவது சில மக்களைப் புண்படுத்தலாம். மேலும் இருக்கின்ற நிலைத்த கருத்துக்களை ஒன்றில், இன்னும் வலுப்படுத்தலாம். அல்லது புதிய ஊகங்களை உருவாக்கலாம். அதேபோல நடுநிலையானது போல் தோன்றுகின்ற சொற்கள் அல்லது சொற்றொடர்கள் குறிப்பிட்ட குழுமங்களுக்கு எதிர்மறையான உட்கிடக்கைகளை உணர்த்தலாம். இவ் விளைவை தடுக்கப் பல வழிகள் இருக்கின்றன. முதலாவதாக உங்களுக்கு ஏதாவது பக்கச்சார்புகள் இருப்பின் அதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, எது கூறப்படுகின்றதோ அதற்கு மக்கள் எவ்வாறு எதிர் வினையாற்றுவார்கள் என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இது நீங்கள் எதை எழுதுகின்றீர்களோ அல்லது உங்களது அறிக்கையில் உள்ளடக்கத் தெரிவு செய்துள்ளீர்களோ அதில் தாக்கத்தை ஏற்படுத்த விடுங்கள். மூன்றாவதாக, சாத்தியமான பொழுது குழப்பம் அல்லது பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் சொற்களுக்குக் குறைக்கக் கடினமான தகவல்களை விளக்கப் படிமங்களைப் பயன்படுத்தவும்.

## சூழமைவு

நிகழ்வுகளை அவற்றின் வரலாற்றுச் சூழமைவில் சூழ்நிலைப்படுத்துவது தற்போதைய மாற்றங்களைப் பற்றிய சிறந்த புரிதலை வாசகர்களுக்குக் கொடுக்கும் சூழமைவு இல்லாமல் பரந்த தோற்றத்தின் காட்சியையும் மாற்றத்திற்கான அல்லது மறுசீராக்கலிற்கான சாத்தியத்தையும் இழப்பது இலகுவானதாகும். ஒரு விடயத்தைச் சூழமைவுப்படுத்துவது சம்பந்தப்பட்டுள்ள மக்களின் அனுபவத்தைப் பரிசீலிப்பதையும் ஈடுபடுத்துகின்றது. எவ்வாறாயினும், ஒரு மூன்றாம் தரப்பினரிடம் கேட்பதை விடவும் அல்லது எவ்வாறு பல்வேறு குழுக்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை ஊகிப்பதை விடவும், அவர்களிடம் நேரடியாக கேளுங்கள். சூழமைவானது, சம்பந்தப்பட்டுள்ள விடயத்தை வாசகர்கள் புரிந்து கொள்வதையும் அவர்கள் நிலைகுலையாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதையும் நிகழ்த்தும் காரணத்தினால் முரண்பாட்டுப் பத்திரிகைத் துறையின் ஒரு இன்றியமையாத பாகத்தினையே அது பிரதிபலிக்கின்றது.

## பொறுப்பு

உயர் தரத்திலான கவனமும் பொறுப்பும் இல்லாத பட்சத்திலே, முரண்பாட்டு அறிக்கையிடலானது தற்போது இருக்கின்ற பதற்றத்தினை அதிகரிக்கக் கூடியதாக இருப்பதுடன் அரசாங்கத்தினால் அரசியல் சூழ்ச்சித் திறன் மேற்கொள்ளப்படுவதற்கும் வழி திறக்கின்றது. எனவே முரண்பாட்டு அறிக்கையிடலிற்கு உயர் தரத்திலான கவனமும் பொறுப்பும் தேவை. குறிப்பிட்ட அறிக்கைகள், தலைப்புக்கள், படிமங்கள் அல்லது செய்தி உள்ளடக்கங்கள் மக்களைக் குறிப்பாகச் சிறுபான்மைக் குழுமங்களைப் பாதிக்கும் வழிகளைச் சிந்திப்பது அத்தியாவசியமானதாகும். இறுதியாக, ஊடகமானது தற்பொது இடம்பெறுகின்ற ஸ்திரத்தன்மைக்குப் பங்களிப்புச் செய்வது, அதன் சொந்தக் குறிக்கோள்கள் என்பவற்றினூடாக வாசகர்களுக்கான பொறுப்பினைக் கொண்டிருக்கின்றது.

## சிறந்த நடைமுறை வினாக்கள்

1. உங்களுடைய அறிக்கையை நீங்கள் சமர்ப்பிப்பதற்கு முன், முரண்பாட்டின் உண்மையான காரணம் உங்களுக்குத் தெரியுமா என உங்களை நீங்களே கேட்கின்றீர்களா?
2. உங்களுடைய செய்தி நிறுவனம் ஒரு செய்தியின் அனைத்துப் பக்கங்களையும் பற்றி கிரமமாக அறிக்கை இடுகின்றதா? அல்லது அரசாங்கத்தின் அதிகார நிலைப்பாட்டிலேயே பிரதானமாகத் தங்கியிருக்கின்றதா?
3. ஒருவரின் இனத்துவத்தைப் பற்றி குறிப்பிடுவது எப்பொழுது பொருத்தமானது என்பதை எவ்வாறு நாங்கள் தீர்மானிப்பது?
4. குற்றச் செயல்களிலே குற்றம் சாட்டப்பட்டுள்ள அல்லது தண்டிக்கப்பட்டுள்ள மக்களின் இன மூலங்களைப் பற்றி குறிப்பிடுவது பற்றிய உங்களது செய்தி நிறுவனத்தின் அல்லது ஒலிபரப்பு நிலையத்தின் கொள்கை என்ன?
5. குற்றச் செயல்கள் அல்லது பதட்ட நிலைகள் என்பவற்றுக்கு காரணமான ஏனைய காரணிகளைப் பற்றி உரிய முறையில் விசாரிக்காமல் எத்தனை தடவைகள் இனப் பதற்றத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது?
6. ஏனைய சமூகங்களில் உள்ள நேரடியான செய்தி மூலங்களை எவ்வாறு நீங்கள் விருத்தி செய்வீர்கள்?
7. குற்றச் செயல்கள் அல்லது பதற்ற நிலைகள் என்பவற்றுக்கு காரணமான ஏனைய காரணிகளைப் பற்றி உரிய முறையில் விசாரிக்காமல் எத்தனை தடவைகள் இனப் பதட்டத்தின் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது?
8. ஏனைய சமூகங்களில் உள்ள நேரடியான செய்தி மூலங்களை எவ்வாறு நீங்கள் விருத்தி செய்வீர்கள்?
9. இனக் குழுக்கள் அல்லது ஏனைய சிறுபான்மைக் குழுக்கள் குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகள் போன்ற குறிப்பிட்ட சில விடயங்களுக்காக எப்பொழுதும் குறிப்பிடப்படுகின்றார்களா? நீங்கள் எப்பொழுதாவது அவர்களுக்குப் பதிலளிப்பதற்கான உரிமையை வழங்குகின்றீர்களா?
10. உங்களது பத்திரிகை வெளியீட்டின், தொலைக்காட்சி நிறுவனத்தின் அல்லது வானொலி நிலையத்தின் அறிக்கைகளில் வெளியீட்டாளரின், ஆசிரியர்களின் அல்லது நிருபர்களின் இனத்துவத்தின் அல்லது சமயத்தின் செல்வாக்குக் காணப்படுகின்றதா?

# பத்திரிகைத்துறையின் பாதுகாப்பான நடத்தைக்கான IFJ சர்வதேச நடைமுறைக் கோவை

அபாயகரமான சூழ்நிலைகளிலும், முரண்பாட்டு வலயங்களிலும் பணி புரியும் பத்திரிகையாளர்களும், ஊடகப் பணியாளர்களும் முகம் கொடுக்கும் ஆபத்துக்களே விரிவான பதிவின் விடயங்களாக இருக்கின்றன. கடந்த வருடத்தில் மாத்திரம் 124 பத்திரிகையாளர்களதும் ஊடகப் பணியாளர்களதும் மரணங்களை IFJ பதிவு செய்துள்ளது.

யுத்த வலயங்களிலே ஒரு தரப்பினால் அல்லது ஏனைய தரப்பினால் இலக்கு வைக்கப்படுவதால் அல்லது வன்முறையின் சமர்களுக்குள் அகப்படுவதால் பல பத்திரிகையாளர்கள் கொல்லப் படுகின்றார்கள், காயமடைகின்றார்கள் அல்லது துன்புறுத்தப்படுகின்றார்கள். குற்றச் செயல்களைப் புரிபவர்கள், பயங்கரவாதிகள் அல்லது சட்ட விரோதமாகவும் மறைமுகமாகவும் இயங்கும் அரசின் முகவர்களான பொலிஸ், இராணுவம் அல்லது பாதுகாப்புப் படை போன்றோரின் திட்டமிடப்பட்ட தாக்குதல் மற்றும் அச்சுறுத்தல்களினால் பாதிக்கப்பட்டவர்களாக ஏனையோர் உள்ளனர்.

ஆபத்துக்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு பத்திரிகையாளர்களினால் அல்லது ஊடக நிறுவனங்களினால் அதிகமான சந்தர்ப்பங்களில் செய்யக் கூடியது மிகவும் சொற்பமே. பாதுகாப்பினை வழங்குவதற்கு எவ்வளவு தான் கவனம் எடுத்துக் கொண்டாலும், தவிர்க்க முடியாத விதத்திலே ஆபத்துக்கள் நிகழ்ந்து விடுகின்றன. ஊடகங்களை இலக்கு வைப்பவர்கள் பத்திரிகைத்துறை சார்ந்த விசாரணையை நசுக்குவதற்கு கோரமான, மிலேச்சத்தனமான முறைகளைப் பயன்படுத்தும் போது ஒருவரால் செய்யக் கூடியது எதுவுமேயில்லை என்று தான் கூற வேண்டும்.

எவ்வாறாயினும், பணியாளர்களுக்கு ஆபத்து ஏற்படுவதைக் குறைக்க பத்திரிகையாளர்களும் ஊடக நிறுவனங்களும் கட்டாயம் எடுக்க வேண்டிய நடைமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக, பாதுகாப்பு வழங்குவதிலே, பின்வருவன இன்றியமையாத கருதுகோளாக இருக்கின்றன.

- கடினமான சூழ்நிலைகள் எழும்போது அதற்கு முகம் கொடுக்கப் பத்திரிகையாளர்களும் ஊடகப் பணியாளர்களும் தயார் நிலையில் இருப்பது அத்தியாவசியமானதாகும். தனிப்பட்ட நபர்களுக்கு சுகாதாரக் கவனிப்பினையும், சமூகப் பாதுகாப்பினையும் வழங்குவதற்கு ஒரு சட்டகம் இருக்க வேண்டும்.
- ஊடகத் தொழிற் துறையினர் தாம் பணியாற்றுகின்ற பிரதேசத்தின் அரசியல், பௌதீக மற்றும் சமூகச் சூழ்நிலைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அறியாமை அல்லது கவனயீனமான நடத்தை மூலமாகத் தமது நிலைமைகளின் நிச்சயமற்ற தன்மைக்கும், பாதுகாப்பின்மைக்கும் அவர்கள் பங்களிப்புச் செய்யக் கூடாது.
- வியாபார லாபங்களிற்காக இடர்களை எதிர்கொள்வதற்கு எதிராக ஊடக நிறுவனங்கள் பாதுகாக்க வேண்டும். அத்துடன் ஆபத்துக்கள் சூழ்ந்துள்ள நிலைமைகள் உருவாகும் போது, பத்திரிகையாளர்களுக்கு மத்தியிலே ஒத்துழைப்பினை ஊக்குவிக்க வேண்டும்.
- பத்திரிகைத் துறைக்குள்ள தடைகளை அரசாங்கம் களைய வேண்டும். அரசாங்கமானது தேவையற்ற முறையிலே பத்திரிகையாளர்களின் நடமாடும் சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்தக் கூடாது. அல்லது பாதுகாப்பான நிலைமைகளிலே தகவல்களைச் சேகரித்து, தயாரித்து, பரப்புவதற்கான செய்தி ஊடகத்தின் உரிமையினைத் தாரை வார்க்கக் கூடாது.
- மக்கள் ஊடகத்திலே தலையீடு செய்யாமல் இருக்க வேண்டும். கடமையில் ஈடபட்டுள்ள பத்திரிகையாளரினதும், ஊடகப் பணியாளர்களதும் பௌதீக இறைமையை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். படப்பிடிப்பு அல்லது ஏனைய ஊடகப் பணியில் பௌதீக ரீதியாக இடையீடு செய்வது தடை செய்யப்பட வேண்டும்.

இக் கருதுகோள்களை எல்லாம் மனதிற் கொண்டு, பின்வருவனவற்றை மதிக்குமாறு பத்திரிகையாளர் குழுக்களையும், ஊடக நிறுவனங்களையும், சம்பந்தப்பட்ட அனைத்து அரச அதிகாரிகளையும் IFJ அழைக்கின்றது.




1 பத்திரிகையாளர்களும் ஏனைய ஊடகப் பணியாளர்களும் அனைத்து நிலைமைகளையும் சமாளிக்கக் கூடிய விதத்தில் முதலுதவிப் பொருட்கள், தொடர்பாடல் கருவிகள், போதியளவு போக்குவரத்து வசதிகள் மற்றும் தேவையேற்படின் பாதுகாப்பு ஆடைகள் என்பவை உள்ளடங்கலாக உரிய முறையில் தயாராக இருத்தல் வேண்டும்.

2 ஆபத்தான நிலைமைகள் நிலவுகின்ற அல்லது நிலவலாம் என நியாயமாக எதிர்பார்க்கப்படுகின்ற பிரதேசத்திலே கடமையில் ஈடுபடும் சாத்தியம் கொண்ட பத்திரிகையாளர்களுக்கும், ஊடகப் பணியாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களும் பொருத்தமான போது அரச அதிகார அமைப்புக்களும் இடர் வரவு விழிப்புணர்வுப் பயிற்சியை வழங்கலாம். பத்திரிகையாளர்களின் உரிமைகளை மதிக்க வேண்டிய தேவையினை அரச அதிகார அமைப்புக்கள் தமது ஆளணியினருக்கு அறிவிக்கலாம். மேலும் பத்திரிகையாளர்களும், ஊடகப் பணியாளர்களும் பணியில் ஈடுபட்டிருக்கும் போது அவர்களின் பௌதீக இறைமையை மதிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தலாம்.

3 சாதாரண வேலைத்தளத்திற்கு வெளியே பத்திரிகைத்துறை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும் ஆயுள் காப்புறுதி உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பினை ஊடக நிறுவனங்கள் வழங்கலாம்.

4 சாதாரண வேலைத் தளத்திற்கு வெளியே பணியாற்றியதன் விளைவாக காயத்திற்கும் சுகவீனத்திற்கும் உள்ளான பத்திரிகையாளர்களுக்கும் ஊடகப் பணியாளர்களுக்கும் இலவச மருத்துவச் சிகிச்சை மற்றும் சுகாதாரக் கவனிப்பு (குணப்படுதல் மற்றும் உடல் தேறல் செலவுகள் உள்ளிட்ட) போன்றவற்றை வழங்கலாம்.

5 ஊடக நிறுவனங்கள், நிறுவனம் சாராத சுயாதீன ஊழியர்களையும் மற்றும் பகுதி நேர ஊழியர்களையும் பாதுகாக்கலாம். முழு நேரப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அதே சமூகப் பாதுகாப்பும் பயிற்சி மற்றும் உபகரணத்திற்கான வசதிகளும் இவர்களுக்கும் சமமான அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும்.

## பயன்மிகு வளங்கள் & நூற் பெயர்க் கோவை

கிறிஸ் ஹெட்ஜஸ், நியுயோர்க் ரிவியூ ஒப் புக்ஸ் : யுத்தம் (V.LI.n20)

கிறிஸ் ஹெட்ஜஸ், 'யுத்தம் எமக்கு படிப்பினைகளைத் தரும் சக்தி" என்கர் புக்ஸ், 2002

பிரன்ட் கனிங்ஹாம், கொலம்பியா ஜேனலிஷம் ரிவியூ

முரண்பாடு தொடர்பாக அறிக்கையிடும் பத்திரிகையாளர்களுக்கு பயன்தரக்கூடிய வளங்களைக் கொண்ட பல அமைப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அடங்குபவை

ஊடகப் பல்வகைமை நிறுவனம் லண்டனை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இதன் அலுவலகங்கள் ஆர்மேனியா, அசர்பைஜான், ஜோர்ஜியா ஆகிய இடங்களில் காணப்படுகிறது. பல்வகைமை (வேற்றுமை) சார்ந்த விடயங்களை நேர்மையாகவும், விளைவுகளை உடனுக்குடன் தெளிவுப்படுத்தக் கூடியதாகவும், சரியாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல்களை மேம்படுத்தக் கூடிய ஊடக அமைப்புக்கள், பத்திரிகையாளர்கள், பத்திரிகைத் துறையை கற்பிப்பவர்கள், அரசு சாரா நிறுவனங்கள், அரசாங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து ஊடகப் பல்வகைமை நிறுவனம் பணியாற்றுகிறது. *www.media-diversity.org*

யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனம் லண்டனை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இதன் அலுவலகங்கள் தென் கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவில் காணப்படுகிறது. இது சமனிலை மிக்கதும் சரியானதுமான அறிக்கைகளை உருவாக்கும் வகையில், உள்ளூர் பத்திரிகையாளர்களின் ஆற்றல்களை கட்டியெழுப்புவதன் மூலம் முரண்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களின் உள்ளூர் பத்திரிகைத்துறையை வலுப்படுத்துவதை தொனிப் பொருளாகக் கொண்டுள்ளது. *www.iwpr.net*

ஐக்கிய அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் **பொயின்டர் நிறுவனமானது** பயிற்சியின் மூலமாகவும் அதன் இணையத்தளம் மூலமாகவும் சுதந்திர பத்திரிகைத் துறையின் பெறுமானங்களை மேம்படுத்துகிறது. *www.poynter.org*

ஐக்கிய அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் உலகிற்கு அறிக்கையிடல் அமைப்பானது முரண்பாடுகள் மற்றும் சர்வதேச செய்திகள் தொடர்பான விடயங்களில் பிரதிநிதித்துவம் மற்றும் பொறுப்புகள் பற்றிய விடயங்கள் சார்பாக பத்திரிகையாளர்களுக்கு மத்தியில் தற்போது இடம்பெறுகின்ற கலந்துரையாடலுக்கு ஆதரவு வழங்குவதை கருத்திற் கொண்டு செயற்படுகின்றது. *www.reportingtheworld.org.uk*

டெனிஸ் சர்வதேச ஊடக உதவி அமைப்பானது உதவிகளையும் ஒத்தாசைகளையும் ஊடகங்களுக்கு வழங்குவதில் அர்பணிப்புடன் செயற்படுகிறது. மேலும் முரண்பாடு காணப்படுகின்ற பிரதேசங்கள் அல்லது முரண்பாட்டினால் அச்சுறுத்தப் பட்டிருக்கின்ற இடங்கள் போன்றவற்றில் ஜனநாயக மேம்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றது. *www.i-ms.dk*

ஊடகம், கொள்கை மற்றும் சிவில் சமூகத்திற்கான நிறுவனமானது

கனடாவை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இது ஒரு தர்மஸ்தாபனமாகும். ஜனநாயக விருத்திக்கு ஆதரவளிக்கக் கூடிய அரசாங்கக் கொள்கைகள் மற்றும் பொறுப்புக் கூறக்கூடிய, அனுகக் கூடிய ஊடகங்கள் போன்றவற்றிற்கு துணைபுரிவதாகும். *www.impacs.org*

கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படுகின்றது. ஜனநாயக நல்லாட்சி மற்றும் வன்முறையற்ற முரண்பாட்டுத் தீர்வுகளுக்கான மாற்றுக் கொள்கைகளை பரிந்துரைத்தல், அவற்றை பரப்புதல் போன்றன இதன் பிரதான நோக்கமாகக் குறிப்பிடப்படுகின்றது. பாரிய ஆராய்ச்சி ஆக்கக் கூறுகள் மூலமாக சரியான, நம்பத்தகுந்த, பக்கச்சார்பற்ற அறிக்கையிடலை மேம்படுத்துவது இவ் அமைப்பின் பணிகளுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. *www.cpalanka.org*

International Federation
of Journalists
President: Christopahrerre nW
General SecretaAriyd:a n White

IFJ Headquarters
International Federation of
Journalists
Residence Palace, Block C
155 Rue de la Loi
B-1040 Brussels
Belgium
Telephone: +32 2 235 22 00
Telefax: +32 2 235 22 19
E-Mail: ifj@ifj.org
W ebsite: w.wiwfj.org

IFJ Asia-Pacific
245 Chalmers Street
Redfern NSW 201A6u stralia
Telephone: +61 2 9333 0999
Fax: +61 2 9333 0933
Email: ifj@ifj-asia.org
W ebsite: w.wiwfj-asia.org

IFJ SouthA sia Office
Mobile: +91 9818 383 669
Email: ifjsouthasia@hotmail.com

IFJ South EasAts ia Office
c/-A liansi Jurnalis Independen (AJI)
l. Danau Poso No. 29
Blok D.1
Bendungan Hilir
Jakarta Pusat 10210
Indonesia
Telephone: +62 21 579 00 489
Fax: +62 21 571 10 63
E-mail: afjiicoef@aji-indones.iiad. corr
sekretariat_aji@yahoo.com

IFJ Sri Lanka Office
c/- CP A
24/2, 28th Lanef ,F lOofwer Road
Colombo 07 Sri Lanka.
Telephone: +914 41714460
Fax: +941- 12565304/6
Email: ifjsrilanka@cpalanka.org

IFJ Tokyo
Itoh Building 203
Kudan Minami 4-2-12
Chiyoda-KuT,o kyo
Japan T102-0074
Telephone/eTlefax: +81 3 3239 4055
Email: ifj-tokyo@triton.ocn.ne.jp

IFJ Africa
17, Boulevard de la R publique,
BP 21 722
Dakar S n gal
Telephone: +221 842 01 42/ 842 01 41
Fax: +221 842 02 69
Email: fijafrica@sentoo.sn
W ebsite: http:/./iwfwjwafrique.org

IFJ Europe (EFJ/IFJ)
Residence Palace
Rue de la Loi 155
B-1040 Brussels
Belgium
Telephone: +32 2 235 22 02
Telefax: +32 2 235 22 19
E-Mail: efj@ifj.org

IFJ LatiAnm erica
c/- SNTP
Casa Nacional de Periodistas
Oficina 3, piAsloa 2, B
AvenidaA ndres Bello,
entre Las Palmas y La Salle
Caracas V enezuela
Telephone: +58 212 793 19 96
Telefax: +58 212 793 28 83
E-Mail: sntp@reacciun.ve

சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் அரச சார்பற்ற ஊடகவியலாளர்களின் சக்திமிக்க சுதந்திர மற்றும் சுயாதீன தொழிற்சங்கங்களை கட்டியெழுப்புதல் மூலம் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் சமூக நியாயத் தன்மையை பாதுகாப்பதற்கான சர்வதேச இணைப்புச் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ள இலாபம் உழைக்காத அமைப்பாகும். அதனுடன் யுனெஸ்கோ அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவை சங்கம், ஐரோப்பிய அமைப்பு, ஐரோப்பிய கவுன்சில் மற்றும் சர்வதேச தொழிற்சங்கங்கள் மற்றும் மொழி பாவனை சுதந்திரத்திற்கான அமைப்புக்களுடன் மிகவும் நெருக்கத்துடன் செயற்படுகின்றன. சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயற்பாட்டு திறன், ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியில் மற்றும் தொழிற்சாலை ரீதியிலான தேவை என்ற இரு அடிப்படையில் செயற்படுகிறது.

மேலதிக தகவல்களுக்காக www.ifj-aisa.org அல்லது www.ifj-org என்ற இணையத்தளத்தை ஆராயவும்.